

# i j j j ua cge \ j k

## (f y t a a y f y t )

## t s f f k : = .N t j h d e j

**நூலைப் பற்றி:**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | **தைத்திரீய உபநிஷதம்** |
| **மொழி** | : | **தமிழ்** |
| **jk|o t|sffk** | : | **ஶ்ரீ.ஶ்ரீ. வேதானந்த** |
| **பக்கங்கள்** | : | **74 A4 size** |
| **விலை** | : | **சிரத்தையுடன் படித்தல்** |

**பதிப்புரிமை : இதனை நீங்கள் இலவசமாக பயன்படுத்தலாம் என்றாலும் பயன்படுத்தும்போது இந்த ஆசிரியர் மற்றும் வலைதளம் பற்றி அவசியம் குறிப்பிடவேண்டும்**

**தைத்திரீய உபநிஷதம்** by Sri Sri Vedananda is licensed under a Creative Commons Attribution-NonCommercial-NoDerivatives 4.0 International License.

http://sknathan12.wix.com/vedaspark

www.vedaspark.weebly.com mail id: sknathan12@gmail.com

<a rel="license" href="http://creativecommons.org/licenses/by-nc-nd/4.0/"><img alt="Creative Commons License" style="border-width:0" src="https://i.creativecommons.org/l/by-nc-nd/4.0/88x31.png" /></a><br /><span xmlns:dct="http://purl.org/dc/terms/" href="http://purl.org/dc/dcmitype/Text" property="dct:title" rel="dct:type">**தைத்திரீய உபநிஷதம்**</span> by <a xmlns:cc="http://creativecommons.org/ns#" href="vedaspark.weebly.com" property="cc:attributionName" rel="cc:attributionURL">Sri Sri Vedananda</a> is licensed under a <a rel="license" href="http://creativecommons.org/licenses/by-nc-nd/4.0/">Creative Commons Attribution-NonCommercial-NoDerivatives 4.0 International License</a>.

# தைத்திரீய உபநிஷதம்

இறைசக்தியைப் பற்றி விளக்க வந்த நம் முன்னோர்கள், "சத் சித் ஆனந்தம்" என்று விளக்கினார்கள். சத் என்றால் அறுதிப் பேருண்மை. சித் என்றால் அறிவு, ஆனந்தம் என்றால் சமத்தன்மை. இந்த மூன்றையும் பற்றிப் படர்ந்த சிந்தனைகள் ஒரு உபநிஷதமாக உருப்பெற்றது. அதுதான் "தைத்திரிய உபநிஷதம்"

இந்த உபநிஷதம் ஒரு கல்வியியல் கல்விக் கொள்கையாகவே தெரிகிறது. இதற்கு இந்த பெயர் வரக் காரணம், குருவும் சீடர்களும் தித்திரிப் பறவைகள் உருவில் இருந்து இந்த உபநிஷதத்தைப் படைத்ததுதான் என்று சொல்லப்படுகிறது. இந்த உபநிஷதத்தை மட்டும் ஏன் இவ்வாறு பறவை உருவில் இருந்து கொடுக்கவேண்டும் என்று சிந்தித்தால், "இதில் கூறப்பட்டுள்ளவை முழுமையானவை அல்ல. இது ஒரு 'பறவைப் பார்வை' மட்டுமே" என்ற கருத்தை வலியுறுத்தத்தான் என்றே தோன்றுகிறது.

இந்த உபநிஷதம் மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது. சீக்ஷா வல்லீ, ஆனந்த வல்லீ, ப்ருகு வல்லீ. 'வல்லீ' என்றால் படர்தல் என்று பொருள். சீக்ஷா என்றால் கற்பித்தல். 'சித்' அல்லது அறிவைப் புகட்டுவதைப் பற்றிய சிந்தனைகள் இதில் காணப்படுகின்றன. ஆனந்த வல்லீ என்ற பகுதி 'ஆனந்தம்' என்பது பற்றித் தெளிவாக ஆராய்கிறது. ப்ருகு என்ற முனிவரின் பேருண்மை பற்றிய ஆராய்ச்சியைக் கூறுவது ப்ருகு வல்லீ. சத் சித் ஆனந்தம் என்ற மூன்று கூறுகளும் இதில் பேசப்பட்டாலும் அடிநாதமாக "ஒரு கல்விச்சாலை எப்படி இருக்கவேண்டும்? எதை கற்பிக்க வேண்டும்? யாருக்கு கற்பிக்க வேண்டும்? எவ்வாறு சிந்தனையைத் தூண்டவேண்டும்" என்பதையெல்லாம் விரிவாக எடுத்துரைக்கிறது. இனி இந்த உபநிஷத்தைப் பார்ப்போம்.

சாந்தி மந்திரம் என்பது பிரார்தனை. ஒவ்வொரு வேதத்திற்கும் ஒரு பிரார்த்னை மந்திரம் உண்டு. அந்த வேதத்திலிருந்து எடுக்கப்படும் எல்லா உபநிஷதங்களுக்கும் அந்த பிரார்தனையே சொல்லப்படும். அந்த வகையில் யஜுர் வேதத்தின் பிரார்தனை மந்திரம் இந்த உபநிஷதத்திற்கு சொல்லப்படுகிறது.

**பிரார்த்தனை**

# शान्ति पाठः

**ॐ शं नो मित्रः शं वरूणः शं नो भवत्वर्यमान शं न इन्द्रो बृहस्पतिः शं नो विष्णुरूरूक्रम नमो ब्रहमणे नमस्ते वायो त्वमेव प्रत्यक्षं प्रहमासि त्वमेव प्रत्यक्षं ब्रहम वदिष्यामि ऋतं वदिष्यामि सत्यं वदिष्यामि तन्मामवतु तद्वक्तारमवतू अवतु माम् अवतु वक्तारम्**

**ॐ शान्तिः शान्तिः शान्तिः**

**ஓம் சன்னோ மித்ர: சம் வருண: |சன்னோ பவத்வர்யமான்|**
**சன்ன இந்த்ரோ பிருஹஸ்பதி: |சன்னோ விஷ்ணுருருக்ரம:|**
**நமோ பிரம்மணே |நமஸ்தே வாயோ|த்வமேவ ப்ரத்யக்ஷ ம்**
**பிரம்மாஸி |த்வமேவ ப்ரத்யக்ஷம் பிரஹ்ம வதிஷ்யாமி |ரிதம்**
**வதிஷ்யாமி |ஸத்யம் வதிஷ்யாமி |தன்மாமவது |**
**தத்வக்தாரமவது |**
**அவது மாம் |அவது வக்தாரம் ||** 1:1

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி|**

**சம் -நன்மை செய்யட்டும்: ந உ –நம் இருவருக்கும்: மிதர: - மித்ரன்: சம் - நன்மை செய்யட்டும்: வருண: - வருணன்: சம் - நன்மை செய்யட்டும்: ந உ –நம் இருவருக்கும்: பவதி –ஆகட்டும்: அர்யமான் - அர்யமான்: சம் - நன்மை செய்யட்டும்: ந –நமக்கு: இந்த்ர உ - இந்திரனும்: பிரஹஸ்பதி –பிருஹஸ்பதி: சம் - நன்மை செய்யட்டும்: விஷ்ணு –திருமால்: உருக்ரம: - எங்கும் உள்ளவராகிய: நம உ –வணங்குகிறேன்: பிரம்மணே –பிரம்மத்தை: நமஸ் - நமஸ்காரம்: தே –உனக்கு: வாயு –வாயுதேவன்: த்வம் ஏவ –நீயே: பிரத்யக்ஷம் - கண்கண்ட: பிரஹ்ம அஸி –பிரம்மமாக இருக்கிறாய், ரிதம் - பிரபஞ்ச ஒழுங்கு: ஸத்யம் - பேருண்மை: தத் - அது: மாம் -என்னை: அவது –காக்கட்டும்: தத் - அது: வக்தாரம் - குருவை: அவது –காக்கட்டும்: அவது மாம் - என்னைக் காக்கட்டும்: அவது வக்தாரம் -குருவைக் காக்கட்டும்.**

**மித்ரன் என்ற தேவன் நமக்கு நன்மை செய்யட்டும்: வருணன் நன்மை செய்யட்டும்: அர்யமான் என்ற தேவன் நமக்கு நன்மை செய்பவனாக இருக்கட்டும்: இந்திரனும் பிரஹஸ்பதியும் நமக்கு நன்மை செய்யட்டும்: எங்கும் நிறைந்தவராகிய விஷ்ணு நமக்கு நன்மை**

**செய்யட்டும்: பிரம்மமே உன்னை வணங்குகிறேன்: வாயு தேவனே உமக்கு நமஸ்காரம். நீயே கண்களுக்குப் புலனாகும் பிரம்மம். உன்னை புலனாகும் பிரம்மம் என்று போற்றுகிறேன். பிரபஞ்ச ஒழுங்கு முறையை போற்றுகிறேன். பேருண்மையைப் போற்றுகிறேன். அந்த பிரம்மம் என்னைக் காக்கட்டும். குருவைக் காக்கட்டும். என்னைக் காக்கட்டும், குருவைக் காக்கட்டும்.**

**வாக்கு மனம் மற்றும் உடலளவில் அமைதி தவழட்டும்**

**இங்கு வேண்டப்படும் தேவர்களைப்பற்றி ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள். மித்ரன் எல்லாவற்றிற்கும் நன்பன். வருணன் மழைக் கடவுள்: அர்யமான் கண்களுக்கு அதிபதி: இந்த்ரன் என்ற தேவர்களின் தலைவன் கைகளுக்கும் வலிமைக்கும் அபிமாணி தேவன்: பிரகஸ்பதி –வாக்கிற்கும் அறிவிற்கும் அதிபதி. விஷ்ணு காக்கும் கடவுள். இவ்வாறு பல தேவதைகளும் தமக்கு நன்மை செய்யுமாறு வேண்டுகிறான் சீடன். மேலும், பிரம்மத்தையும், கண்கண்ட தெய்வமான காற்றையும் வணங்குகிறான். பிரபஞ்சத்தை இயக்கும் அந்த ஒழுங்குமுறையையும், பாவற்றையும் நிலைபெறச்செய்யும் பேருண்மையையும் போற்றுகிறான். தன்னையும் குருவையும் காப்பாற்றுமாறு வேண்டுகிறான்.**

# शीक्षां वल्लि

ॐ शीक्षां व्याख्यास्यामः  वर्णः स्वरः मात्रा बलम् साम शन्तानः  इत्युक्तः शीक्षाध्यायः

**சீக்ஷாம் வ்யாக்யாஸ்யாம: | வர்ண: ஸ்வர: | மாத்ரா பலம்|**
**ஸாம ஸந்தான: | இத்யுக்த சீக்ஷாத்யாய: ||** 1:2

**சீக்ஷா – உச்சரிப்பு: வ்யாக்யாஸ்யாம – விளக்குவோம்: வர்ண – ஒலி: ஸ்வர – ஏற்ற இறக்கம்: மாத்ரா பலம் - நீட்டல் குறுக்கல் அளவு: ஸாம – நிறுத்தல்: ஸந்தானம் - இனைத்தல்: இதி – என்று: உக்த – சொல்லப்பட்டது: சீக்ஷா – உச்சரிப்பு: அத்யாய – பாடப்பகுதி.**

**உச்சரிப்பு பற்றி விளக்குவோம். ஒலி, ஏற்ற இறக்கம், நீட்டல் குறுக்கல் அளவு, நிறுத்தல்கள், இனைத்தல் என்று இவ்வாறு உச்சரிப்பு பற்றிய பாடம்.**

**இருவர் பேசும் பொழுது, இங்கே கூறப்பட்ட அனைத்து பகுதிகளையும் ஆராய்ந்து பார்த்து பேசினால்தான் அது பயனுள்ளதாக**

**இருக்கும். கல்விக்கு அடிப்படையானது உச்சரிப்பு. அது இங்கே ஆராயப்பட்டது.**

सह नौ यशः सह नौ ब्रहमवर्चसम् अथातः संहिताया उपनिषदम् व्याख्यास्यामः

**ஸஹ நெள யச: | ஸஹ நெள ப்ரஹ்மவர்ச்சஸம் | அதாதஸ் ஸம்க்ஹிதாயா உபநிஷதம் வியாக்யாஸ்யாம:** 1:3:1

**ஸஹ நெள – நாம்: யச: - புகழடைவோம்: ஸஹ நெள – நாம்: பிரஹ்மவர்ச்சஸம் - பிரம்மதேஜஸ் அல்லது அறிவொளி (பெறுவோம்): அதாத - இனி அதிலிருந்து: ஸம்ஹிதாயா – சேர்க்கைகளின்: உபநிஷதம் - ரகசிய அறிவு: வியாக்யாஸ்யாம: விளக்குவோம்.**

**சீடர்களும் குருவுமான நாம் புகழ் பெறுவோம். அறிவொளி பெறுவோம். அதற்கான சேர்க்கைகள் பற்றிய ரகசிய அறிவை விளக்குவோம்.**

**எந்த ஒரு கல்விச்சாலையும் தன் மானவர்கள் புகழடைவதையும் கல்விமான்களாக திகழ்வதையும், வளமாக வாழ்வதையும் விரும்பும். அந்த புகழ் மற்றும் ஞான ஒளி பெறுவதைப் பற்றி, எந்த சூழ்நிலைகள் அத்தகையோருக்குத் தேவை என்பதைப் பற்றி இந்தப் பகுதி ஆழமாக ஆராய்கிறது.**

पञ्चस्वधिकरणेषु अधिलोकमधिज्यौतिषमधिविहममधिप्रजमध्यात्मम् ता महासंहिता इत्याचक्षते

**பஞ்சஸ்வதிகரணேஷு | அதிலோகமதிஜ்யெளதிஷ-மதிவித்யமதிப்ரஜமதியாத்மம் | தா மஹாஸக்ம்ஹிதா இத்யாசக்ஷதே** 1:3:2

**பஞ்சஸு - ஐந்து விதமான: அதிகரணேஷு- உறுப்புகள் அல்லது பிரிவுகள்: அதிலோகம் - மேன்மையுற்ற பிரபஞ்சம்: அதி ஜ்யெளதிஷம் - மேன்மையுள்ள ஒளி: அதிவித்யம் - மேலான கல்வி: அதிப்ரஜம் - சிறந்த குடிபிறப்பு: அதியாத்மம் - வலிவுள்ள உடல்: தா – அவை: மஹா ஸம்ஹிதா – முக்கியமான சேர்க்கைகள்: இதி – என்று: ஆசக்ஷதே - கூறப்படுகிறது.**

(முந்தைய சூக்தத்தில் கூறப்பட்டதற்கு) ஐந்து விதமான பிரிவுகள் உள்ளன. மேன்மையுற்ற பிரபஞ்சச் சூழல், மேன்மையான ஒளி, மேலான கல்வி, சிறந்த குடிபிறப்பு மற்றும் வலிவுள்ள உடல். இவை முக்கியமான சேர்க்கைகள் என்று கூறப்படுகிறது.

எத்தகையவன் புகழ் பெற்றவனாக, அறிவொளி மிக்கவனாக இருப்பான் என்ற ஆராய்ச்சியில், அதற்கு ஐந்து வகையான அமைவுகள் வேண்டும் என்கிறது இந்த சூக்தம். அதிகரணம் என்றால் சிறந்த உதவி செய்யும் கருவிகள் அல்லது விஷயங்கள் என்று பொருள். பிரபஞ்ச சூழல், அறிவொளி, கல்வி, குடிபிறப்பு மற்றும் உடல் என்ற விஷயங்கள் பட்டியலிடப்பட்டது. இனி வரும் சூக்தங்களில் இவற்றை விரிவாகப் பார்ப்போம்.

இந்த விளக்கங்களில் ஒரு குறிப்பிட்ட முறை கையாளப்படுகிறது. பிரபஞ்சம் என்ற காரணியை எடுத்துக்கொண்டால் அதற்கு ஆதாரமான ஒன்று முற்பகுதி அல்லது முன்னுருவம் எனப்படுகிறது. ஒரு துனைக்காரணி பிற்பகுதி அல்லது பின்புலம் எனப்படும். இந்த இரண்டுக்கும் இனைப்பு எது என்பதும் இனைகின்ற இடமும் குறிக்கப்படுகிறது.

अथाधिलोकम्  । पृथिवी पूर्वरूपम् । टयौरूत्तर रूपम ।
आकाशः सन्धिः । वायुः सन्धानम् । इत्यधिलोकम् ।

அதாதிலோகம் | ப்ருத்வீ பூர்வரூபம்| த்யெளருத்தரரூபம் | ஆகாச ஸந்தி: | வாயு ஸந்தானம் இத்யதிலோகம் 1:3:3

அத - இப்பொழுது: அதிலோகம் - மேலான பிரபஞ்சம்: ப்ருத்வீ – உலகம்: பூர்வரூபம் - முன்னுருவம்: த்யெளர் – வானம்: உத்தர ரூபம் - பின்புலம்: ஆகாச – வெளி: ஸந்தி – சந்திக்கும் இடம்: வாயு – காற்று: ஸந்தானம் - இனைப்பு: இதி- இவ்வாறு: அதிலோகம் - மேலான பிரபஞ்சம்.

இப்பொழுது பிரபஞ்சம் (பற்றி பார்ப்போம்). இதில் உலகம் அல்லது பூமி முன்னுருவம். வானம் பின்புலம். வெளி (அந்த இரண்டும்) சந்திக்கும் இடம். காற்று இவற்றை இனைக்கிறது. இவ்வாறு பிரபஞ்சம்.

இந்த சூக்தத்தினை ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள். கல்விக்கான பிரபஞ்ச சூழல் பற்றிய ஆராய்ச்சி இது. இங்கே பூமியே ஆதாரம். வானம் அல்லது பருவ சூழல் பின்புலம். தூய்மையான வெளியும், நல்ல காற்றோட்டமும் அங்கே இருக்கவேண்டும். அதாவது கல்விக்கூடம் என்பது பண்படுத்தப்பட்ட பூமியில், விரிந்த வெளியும் காற்றோட்டமும் உள்ளதாக இருக்கவேண்டும். கல்வி கற்பிக்கும்போது உள்ள பருவத்தையும் பார்க்க வேண்டும் என்கிறது இந்த சூக்தம். வாய்மொழியாகவே கற்பிக்கப்பட்ட அந்த காலத்தில், கடும் குளிரோ, கடும் மழையோ உச்சரிப்பை மாற்றக்கூடும் அல்லவா? மேலும் கவனமும் சிதறக்கூடும்.

अथाधिज्योतिषम्

अग्निः पुर्व रूपम् ꣳ। आदित्य उत्तररूपम् । आपः संधिः ।

वैटयुतस्संधानम् । इत्यधिज्यौतिषम् ।

அதாதிஜ்யௌதிஷம் | அக்னி பூர்வரூபம் | ஆதித்ய உத்தரரூபம் | ஆப: ஸந்தி | வைத்யுதஸ்ஸந்தானம் | இத்யதிஜ்யௌதிஷம்.|| 1:3:4

அத- பிறகு: அதிஜ்யௌதிஷம்- மேன்மையுள்ள ஒளி: அக்னி – வெப்பம்: பூர்வரூபம் - முற்பகுதி: ஆதித்ய – பிரபஞ்சத்தின் இயக்க ஆற்றல்: உத்தர ரூபம் - பின்பகுதி: ஆப – நீர்: ஸந்தி - இனையும் இடம்: வைத்யுத – மின்னல்: ஸந்தானம் - இனைக்கும் பொருள்: இதி - இவ்வாறு: அதிஜ்யௌதிஷம் - மேன்மையுள்ள ஒளி.

இப்பொழுது ஒளி பெறுதல் பற்றி பார்ப்போம். இதற்கு வெப்பம் ஆதாரமானது. பிரபஞ்சத்தின் இயக்க ஆற்றல் பின்புலம். இவை இரண்டும் சந்திக்கும் பொருள் திரவரூபம். இதற்கு உதவுவது மின்னோட்டம். இவ்வாறு ஒளிர்தல் பற்றிய விவரம்.

தொடக்கத்தில் அறிவொளி பற்றிப் பார்த்தோம் அல்லவா? ஒருவன் அறிவொளி பெற என்ன வேண்டும் என்று ஆராய்கிறது இந்த சூக்தம். வெப்பம் ஆதாரமானது. உடல் வெப்பம் சீராக இருப்பது என்பது எண்ண ஓட்டத்தின் ஒழுங்கையும் உடல் நலத்தையும் குறிப்பிடுகிறது. ஆழ்ந்த தியானத்தில், பிரபஞ்சத்தின் இயக்க ஆற்றல் நம்மோடு இனையும். அப்பொழுது நம் நுன்னுணர்வுகள் பலப்படும். அதாவது நம்

புலன்கள் நுட்பமாக அறியும் ஆற்றலைப்பெறும். இதனால் பிரபஞ்ச ஆற்றல் பின்புலம் என்று சொல்லப்பட்டது. இவை இரண்டும் நம் உடலில் சுரக்கும் பல்வேறு திரவங்களாலேயே அறியப்படுகின்றன என்பதால் நீர் அல்லது திரவம் சந்திப்பாக சொல்லப்பட்டது. ஆழ்நிலை தியானத்தில் ஏற்படும் மின்னோட்டம,; கற்பிக்க முடியாதவற்றையும் கற்றுக்கொள்ள உதவும். அதுவே இங்கு மின்னலாகக் காட்டப்படுகிறது.

**अथाधिविढयम् ।**

**आचार्यः पुर्व रूपम् ़। अन्तेवास्युत्तरूपम् ।विढया संधिः । प्रवचनं संधानम् ।**

**इत्यधिविढयम् ।**

**அதாதிவித்யம் | ஆச்சார்ய: பூர்வரூபம் | அந்தேவாஸ்-**
**யுத்தரரூபம் | வித்யா ஸந்தி | ப்ரவசனம் ஸந்தானம் |**
**இத்யதிவித்யம். ||** 1:3:5

அத – பிறகு: அதிவித்யம் - மேலான கல்வி: ஆச்சார்ய – குரு: பூர்வரூபம் - ஆதாரம்: அந்தேவா – சீடன்: உத்தர ரூபம் - பின்புலம்: வித்யா – கல்வி: ஸந்தி - இனைப்பு: ப்ரவசனம் - கற்பித்தல்: ஸந்தானம் - இனைக்கும் பொருள்: இதி - இவ்வாறு: அதிவித்யம் - மேலான கல்வி.

பிறகு மேலான கல்வி. இங்கு குருவே ஆதாரம். சீடன் பின்புலம். இருவரும் இனையும் இடம் கல்வி. இனைப்பது கற்பித்தல்.

குரு 'ஆச்சார்யர்' எனக் காட்டப்படுகிறார். ஆச்சார்யர் என்றால் வெறும் கற்பித்தல் மட்டும் அல்லாமல் தான் போதிப்பதையே தன் வாழ்க்கையாகக் கொண்டவர் என்று பொருள். அதாவது, தான் சொல்லும் தத்துவத்தை தன் வார்த்தையாக அல்லாமல் வாழ்க்கையாகக் காட்டுபவர். அவரே கல்வியின் ஆதாரம். சீடன் பெற்றுக்கொள்வதால் அவன் பின்புலம்.

**अथाधिप्रजम्**

**माता पुर्व रूपम् ़।पितोत्तररूपम् । प्रजा संधिः । प्रजननं संधानम् । इत्यधिप्रजम् ।**

**அதாதிப்ரஜம் | மாதா பூர்வரூபம் | பிதோத்தரரூபம் | பிரஜா**

**ஸந்தி | பிரஜனனகம் ஸந்தானம் | இத்யதிப்ரஜம்.** 1:3:6

**அத- இப்பொழுது: அதிப்ரஜம் - உயர்குடி பிறப்பு: மாதா – தாய்: பூர்வரூபம் - ஆதாரம்: பிதா – தந்தை: உத்தரரூபம் - பின்புலம்: பிரஜா – குழந்தை: ஸந்தி - இனைப்பு: பிரஜனனகம் - உறவு: ஸந்தானம் - இனைக்கும் பொருள்: இதி - இவ்வாறு: அதிப்ரஜம் - குடிபிறப்பு.**

**இப்பொழுது குடிபிறப்பு பற்றிய ஆராய்ச்சி. இதில் தாய் ஆதாரம். தந்தை பின்புலம். உறவு இனைக்கும் பொருள். குழந்தையே இனைப்பு. இவ்வாறு குடிபிறப்பு.**

**கல்வியைப் பற்றிய ஆராய்ச்சியில் பிறப்பு பற்றி ஆராயப்படுகிறது. எந்த குலத்தில் பிறந்தாலும், அவனுக்கு எல்லா கல்வியையும் புகுத்தும் முறை அந்த காலத்தில் இல்லை. மேலும், பெற்றோரின் குணநலன்கள் மற்றும் அவர்களது வாழ்க்கை முறை தெரிந்தால்தான் ஒருவனுக்குத் தேவையான கல்வியை தர முடியும். எனவே குடிபிறப்பு ஆராயப்படுகிறது. இதில், தாயிடமிருந்தே குழந்தை தன் உடலைப் பெறுவதால் அவள் ஆதாரம். சக்தி மற்றும் மனநலம் தந்தையிடமிருந்து வருவதால் அவர் பின்புலம்.**

**இங்கும் பிறப்பால் ஏற்றத்தாழ்வை கொண்டுவருவது நோக்கமல்ல என்பதை புரிந்து கொள்ளவேண்டும். தந்தை யார் என்று தெரியாத போதும் அந்த தாயின் குணநலனை ஆராய்ந்து ஒருவனை சீடனாக ஏற்பது வேதகால வழக்கம். கற்பித்தல் என்பது வெறும் ஏட்டுக்கல்வியாக இல்லாமல் வாழ்க்கைக் கல்வியாக - குருகுல வாசமாக -இருந்ததால், குடிபிறப்பைப் பார்த்தே அவனுக்குரிய சிறப்பான நுட்பமான கல்வியறிவைக் கொடுப்பதுடன் அவனுக்கேற்ற வாழ்க்கை முறையும் கற்பிக்கப்பட முடியும்.**

**अथाध्यात्मम् । अधरा हनुः पुर्व रूपम् । उत्तरा हनु उत्तर रूपम् वाक्संधिः जिहवा संधानम् । इत्य्ध्यात्मम् ।**

**அதாதியாத்மம் | அதரா ஹனு: பூர்வரூபம் | உத்தரா ஹனு-**
**ருத்தர ரூபம் | ஜிஹ்வா ஸந்தானம் | வாக் ஸந்தி |**
**இத்யதியாத்மம்.** || 1:3:7

**அத – பிறகு: அதியாத்மம் - சரியான உடல்நிலை: அதரா – கீழ்: ஹனு – தாடை: பூர்வரூபம்- ஆதாரம்: உத்தரா ஹனு – மேல் தாடை: உத்தர ரூபம் - பின்புலம்: ஜிஹ்வா – நாக்கு: ஸந்தானம் - இனைப்பு: வாக் - வாக்கு: ஸந்தி - இனைக்கும் பொருள்: இதி - இவ்வாறு: அதியாத்மம் - உடல்நிலை பற்றி.**

**இனி உடல்நலம் பற்றியது. இதில் கீழ்தாடை ஆதாரம். மேல்தாடை பின்புலம். நாக்கு இனைக்கிறது. இனைப்பினால் வருவது வாக்கு. இவ்வாறு உடல்நலம் பற்றிய ஆராய்ச்சி.**

**அசையக்கூடிய கீழ்தாடை ஆதாரமாகவும் அசைவற்று இருக்கும் மேல்தாடை பின்புலமாகவும் காட்டப்பட்டிருப்பதை நுட்பமாக புரிந்து கொள்ள வேண்டும். வாய்மொழியாகவே கற்பித்தல் நடந்த அந்த காலத்தில், ஒருவனுக்கு வாய்ப்பகுதி திடமாக இருக்கவேண்டும். இதற்காக சீடனின் வாய் அமைப்பு இங்கே ஆராயப்படுகிறது.**

**इतीमा महासंहिताः य एवमेता महासंहिता व्यख्याता वेद । संधीयते प्रजया पशुभिः ।**
**ब्रहमवर्चसेनाढयेन सुवर्ग्येण लोकेन ।**

**இதீமா மஹாஸம்ஹிதா: | ய ஏவமேதா மஹாஸம்ஹிதா**
**வ்யாக்யாதா வேத | ஸந்தீயதே ப்ரஜா பசுபி: | ப்ரஹ்ம**
**வர்ச்சேன்னாத்யேன ஸ்வர்க்கேன லோகேன ||**

**இதி - இவ்வாறு: இமா - இந்த: மஹாஸம்ஹிதா – மேலான இனைவுகள்: ய – யார்: ஏவம் - ஒருவன்: ஏதா - இந்த: மஹா ஸம்ஹிதா – மேலான இனைவுகள்: வ்யாக்யாதா – விளக்கப்பட்ட: வேத – அறிகிறானோ: ஸந்தீயதே – அடைகிறான்: ப்ரஜா – குழந்தைகள்: பசுபி – கால்நடைகள்: ப்ரஹ்ம வர்ச்சஸ் - அறிவொளி: அன்னாத் யேன – உணவு முதலியவை: ஸவர்க்கேன லோகேன – ஸ்வர்க்கம் போன்ற உலக வாழ்வை.**

**இவ்வாறு, இங்கு விளக்கபட்ட மேலான இனைவுகளை யார் ஒருவன் (ஆராய்ந்து) அறிகிறானோ, அவன் நல்ல குழந்தைகள், கால்நடைகள், அறிவொளி, உணவு போன்ற எல்லாவற்றையும் பெற்று ஸ்வர்க்க வாழ்வைப் போன்ற உலக வாழ்க்கையைப் பெறுகிறான்.**

**இவற்றை 'அறிபவன் ' என்று சொன்னதால் வெறும் அறிவு போதும் என்பதல்ல. சொல்லப்பட்ட அந்த காரணிகள் தன்னிடத்தில் எப்படி இருக்கின்றன என்பதை அறிந்து அதற்கேற்ற கல்வியைப் பெறுபவன், அந்த கல்வியின் பயனாக, நல்ல குழந்தைகள், கால்நடை, உணவு முதலான எல்லா உலகியல் வளங்களையும் பெறுகிறான்.**

**यश्छन्दसामृषभो विश्वरूपः । छन्दोभयोऽध्यमृतात्संबभूव । स मेन्द्रो मेधया स्पृणोतु ।**
**अमृतस्य देव धारणो भूयासम् । शरीरं मे विचर्षणम् । जिहवा मे मधुमत्तमा ।**
**कर्णाभयां भूरिवि श्रुवम् । बहमणाः कोशेऽसि मेधया पिहितः । श्रुतं मे गोपाय ।**

**யச்சந்தஸாம் ரிஷபோ விச்வரூப | சந்தோப்யோsத்யம்ருதாத் ஸம்பபூவ |**
**ஸ மேந்த்ரோ மேதயா ஸ்ப்ருணோது | அம்ருதஸ்ய தேவ தாரணோ பூயாஸம் | சரீரம் மே விசர்ஷணம் | ஜிஹ்வா மே மதுமத்தமா |**
**கர்ணாப்யாம் பூரி விச்ருவம் ப்ரஹ்மண கோசோsஸி மேதயா பிஹித: | ச்ருதம் மே கோபாய** 4.1

**ய – எது (எந்த சப்தம்) : சந்தஸாம் - வேதங்களில்: ரிஷபோ – சிறந்ததோ: விஸ்வரூப – வியாபித்துள்ளதோ: சந்தோப்யோ – வேதங்களோடு: அதி அம்ருதாத் - மிகவும் அழிவற்றதாக: ஸம்பபூவ – தோன்றியதோ: ஸ – அந்த: இந்த்ர உ – ஒலியுடன் கூட: மே –நான்: மேதயா – அறிவொளியுடன்: ஸ்ப்ருணோது – பொங்கட்டும்: அம்ருதஸ்ய – அழிவற்றதான: தேவ – அட்சரங்களை: தாரணோ – ஏற்றவனாக: பூயாஸம் - ஆவேனாக: சரீரம் மே – உடலில்: விசர்ஷணம் - ஆரோக்யம்: ஜிஹ்வா மே – நாக்கில்: மது மத்தமா - இனிமையானதாக: கர்ணாப்யாம் - காதுகளால்: பூரி விச்ருவம் - கேட்பதால் நிறைவு: ப்ரஹ்மண - இறைவனின்: கோசோ அஸி - இருப்பு நிலை: மேதயா – அறிவால்: பிஹித: - மறைக்கப்பட்டுள்ளது: ச்ருதம் மே – கேட்பதால்: கோபாய – காப்பாற்றப்படட்டும்.**

**எது வேதங்களிலும் சிறந்ததோ, அந்த வேதங்களில் வியாபித்துள்ளதோ, வேதங்களோடே தோன்றினாலும் அவற்றைவிட அழிவற்றதானதோ அந்த (ஓங்கார) ஒலியுடன் கூட நான் ஞானத்தில் பொங்குவேனாக. அழிவற்றதாகிய அந்த அக்ஷ ரங்களை ஏற்றவனாக ஆவேனாக. உடலில் ஆரோக்யமாக (இருக்கட்டும்). நாக்கில் (அந்த ஒலி) இனிமையாக இருக்கட்டும். காதுகளால் கேட்பதால் (அந்த ஒலி) நிறைவு தருவதாக ஆகட்டும். அறிவால் அறிய முடியாத இறைவனின் இருப்பு நிலையான அது கேட்பதால் (மட்டுமே) காப்பாற்றப்படட்டும்.**

**இந்த சூக்தம் நுட்பமாக உணரத்தக்கது**

- **ஓங்காரம் வேதங்களுக்கும் ஆதாரமானதால் வேதங்களை விட சிறந்தது எனப்படுகிறது.**
- **ஓங்காரம் இன்றி எந்த மறையும் இல்லை என்பதால் வேதங்களில் வியாபித்துள்ளதாகிறது.**
- **பிரளய காலத்தில் வேதங்கள் ஒடுங்கும். ஆனால் ஓங்காரம் ஒடுங்குவதில்லை என்பதால் முழுமையான அழிவற்ற தன்மையுடையது.**
- **ஓங்கார த்வனி உச்சரிப்பவரை ஞானமடையச் செய்வது.**
- **அத்தகைய ஓங்கார நாதத்தை, அதன் அதிர்வை உடலில் ஏற்பவன் புனிதமடைகிறான் என்பதால் 'அழிவற்றதான அந்த அக்ஷ ரங்களை ஏற்றவனாக ஆவேன்' என்று கூறப்பட்டது.**
- **அந்த ஓங்கார த்வனி, உடலில் ஆரோக்கியமாக, நாக்கில் இனிமையாக, காதுகளை நிறைவடையச்செய்வதாக உள்ளது.**
- **அந்த ஒலியை மொழியாலோ மற்ற வழிகளிலோ பகுத்து அறிவதால் பிரம்மத்தின் இருப்பு நிலையான அந்த த்வனியை அறியமுடியாது. அந்த ஒலியை ஆழ்ந்த அமைதியில் கேட்பதால் மட்டுமே ஞானம் சித்திக்கும்.**

**आवहन्ती वितन्वाना कुर्वाणाऽचीरमात्मनः । वासांसि मम गावश्च ।**
**अन्नपाने च सर्वदा । ततो मे श्रियमहवह । लोमशां पशुभिः सह स्वाहा ।**

**ஆவஹந்தி விதன்வானா | குர்வானா சீரமாத்மன |**
**வாஸாம்ஸி மம காவச்ச | அன்னபானே ச ஸர்வதா |**

**ததோ மே ச்ரியமாவஹ. |லோமசாம் பசுபிஸ்ஸஹ ஸ்வாஹா||**

**ஆவஹந்தி – வருகிறவர்கள் : விதன்வானா – பெருகட்டும்: குர்வாணா – கலைகளில்: சீரம் - மரவுரி : ஆத்மன – எனக்கு: வாஸாம்ஸி – உடை: மம – என்னுடைய: காவச்ச- பசுக்களும்: அன்னபானே – உணவு: ச – மற்றும்: ஸர்வதா – எல்லாம்: ததோ – மேலும்: மே – அவற்றில்: ச்ரியம் - வளம்: ஆவஹ- வரட்டும்: லோமசாம் - முடி அடர்ந்த: பசுபி – கால்நடைகள்: ஸஹ - நிறைய: ஸ்வாஹா – ஏற்றுக்கொள்.**

**(குருகுலத்தை நாடி) வருபவர்கள் பெருகட்டும்: கலையறிவு (பெறட்டும்), மரவுரி நமக்கு ஆடையாகட்டும். நம் கால்நடைகள் உணவு, குடிநீர் போன்றவை பெற்று வளம் பெறட்டு;ம். (இந்த குருகுலத்தின் மேன்மைக்காக) நிறைய முடி அடர்ந்த விலங்குகளை ஏற்றுக்கொள்.**

**आ मा यन्तु ब्रहमचारिणः स्वाहा । वि माऽऽ यन्तु ब्रहमचारिणः स्वाहा ।**
**प्रमाऽऽ यन्तु ब्रहमचारिणः स्वाहा ।दमा यन्तु ब्रहमचारिणः स्वाहा ।**
**शमा यन्तु ब्रहमचारिणः स्वाहा ।**

**ஆமாயந்து பிரம்மசாரிண ஸ்வாஹா |விமாऽऽயந்து பிரம்மசாரிண ஸ்வாஹா|**
**பிரமாऽऽயந்து பிரம்மசாரிண ஸ்வாஹா| தமாऽऽயந்து பிரம்மசாரிண ஸ்வாஹா|**
**சமாऽऽயந்து பிரம்மசாரிண ஸ்வாஹா ||**
**ஆயந்து – கீழ்படிதலுள்ள: பிரம்மசாரிண – மாணவர்கள்: ஸ்வாஹா – ஏற்கவேண்டும்:**

**ஆம் - அடக்கம்: வி – சிறந்த: பிர – மிகவும்: தம – புலனடக்கம்: சம – மன ஒடுக்கம்.**

**அடக்கமுள்ள. சிறந்தவர்களான, புலனடக்கம் உள்ள, மனம் ஒடுங்கி உள்ள, கீழ்படிதலுள்ள மாணவர்களை ஏற்கவேண்டும்.**

**கல்வியியல் கல்வியின் அடுத்த பகுதி இது. கல்விச்சாலை எப்படி இருக்கவேண்டும் என்றெல்லாம் ஆராய்ந்த பின்னர் எப்படிப்பட்ட**

**மாணவர்களை ஏற்க வேண்டும் என்பதை இந்த சூக்தம் குறிப்பிடுகிறது. குருகுலக்கல்விச் சாலைகளே இருந்த அந்த காலத்தில் கீழ்ப்படிதல் மாணவர்களுக்கு ஒரு முக்கிய பண்பாக கருதப்பட்டது இதிலிருந்து தெரிகிறது.**

**यशो जनेऽसानि स्वाहा । श्रेयान्वस्यसोऽसानि स्वाहा ।**

**யசோ ஜனேऽஸானி ஸ்வாஹா | ச்ரேயான் வஸ்யஸோऽஸானி ஸ்வாஹா ||**

**யச உ – புகழும்: ஜனே – ஜனங்களை: ஸ்ரேயான் - சிறந்தவன்: வஸ்யஸ உ – வசீகரிக்கும் திறன்: அஸானி – பெற்றவனை: ஸ்வாஹா – ஏற்கவேண்டும்.**

**புகழுடையவனையும், மக்கள் கூட்டம் உடையவனையும், அந்த கூட்டத்தினை கவர்ந்திழுக்கும் திறனில் சிறந்தவனையும் ஏற்க வேண்டும்.**

**முந்தைய சூக்தத்தில் 'கீழ் படிதல் உள்ள மாணவர்களை ஏற்க வேண்டும்' என்ற ரிஷி, மற்றவர்களில் யாரை ஏற்பது என்பது பற்றி விளக்குகிறார். மக்கள் கூட்டத்தை தன்னுடன் வைத்திருக்கும் ஒருவன் நல்வழி பட்டால், கல்வியறிவு பெற்றால் அவனை சார்ந்த மக்களும் பயனடைவர். புகழுடையவன் செய்வதை உலகம் பின்பற்றுமாதலால் அவனது 'கற்றலும்' சமுதாயத்தை வழிப்படுத்தும். மக்களை கவர்ந்திழுக்க வல்ல ஒருவன் நல்வழி தவறினால் மிகப்பெரிய கேடு சூழும் என்பதால் அவனும் கல்வியறிவு பெற வேண்டும். இவ்வாறான 'தலைமை' பொறுப்பில் உள்ளவர்கள் கீழ்படிந்து நடப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனாலும் இவர்களை கல்விச் சாலைகள் ஏற்கவேண்டும் என்கிறார் ரிஷி. "எவ்வழி அரசன், அவ்வழி மாந்தர்" என்ற சொல்வடை இங்கு நினைவு கூறத்தக்கது.**

**तं त्वा भग प्रविशानि स्वाहा । स मा भग प्रविश स्वाहा ।**

**तस्मिन्सहस्र शाखे निभगाऽहं तवयि मृजे स्वाहा ।**

यथाऽऽपः प्रवताऽऽयन्ति । यथा मासा अहर्जरम् । एवं मां ब्रह्मचारिणः ।

धतरायन्तु सर्वतः स्वाहा । प्रतिवेशोऽसि प्र मा भाहि । प्र मा पढयस्व ।

**தம் த்வா பக ப்ரவிஸானி ஸ்வாஹா | ஸ மா பக ப்ரவிச ஸ்வாஹா|**
**தஸ்மின் ஸஹஸ்ர சாகே | நிபகாऽகம் த்வயீ ம்ருஜே ஸ்வாஹா|**
**யதாऽப ப்ரவதாऽऽயந்தி | யதா மாஸா அஹர்ஜரம் |**
**ஏவம் மாம் ப்ரஹ்மசாரிண|**
**தாதராயந்து ஸர்வதஸ் ஸ்வாஹா**
**ப்ரதிவேஸோऽஸி ப்ர மா பாஹி ப்ர மா பத்யஸ்வ ||**

**தம் - அவர்கள்: த்வா – நீ: பக – முயற்சி: ப்ரவிஸானி - இனைந்தவர்கள்: ஸ்வாஹா – ஏற்றுக்கொள்: ஸ – அவர்கள்: மா – பெரிய: பக – செயல்: ப்ரவிச - இனைபவர்கள்: தஸ்மின் - உன்னுடைய: ஸஹஸ்ர – ஆயிரம்: சாகே – கிளைகளில்: நி பகா – பேரானந்தம்: அகம் - உன்னுடைய: ம்ருஜே - புனிதம் அல்லது மேன்மை: யதா – எவ்வாறு: அப – தன்னீர்: ப்ரவதாயந்தி – பாய்கிறதோ: யதா – எவ்வாறு: மாஸா- மாதங்கள்: அஹர்ஜரம் - வருடங்கள்: ஏவம்- அவ்வாறே: மாம் - நம்முடைய: ப்ரம்மச்சாரிண – மாணவர்கள்: தாத – பொருத்தம்: ஆயந்து – வருதல்: ஸர்வத – எல்லாவற்றையும்: பிரதிவேச உ – அருகிலுள்ளவர்கள்: அஸி – வசிப்பவர்கள்: மா - இல்லாவிடில்: ப்ர பாஹி – பேரொளி: ப்ர – சிறப்பாக: மா- பெரிய: பத்யஸ்வ – வழிப்படுத்தல்**

**(முந்தைய சூக்தத்தில் கூறப்பட்டதன் தொடர்ச்சியாக) அவர்களில் நீ முயற்சியுடையவர்களை ஏற்றுக்கொள். அவர்களில் பெரிய செயல்களில் இனைபவர்களை ஏற்றுக்கொள், பேரானந்தத்தில் இருப்பவர்களை உன் (பள்ளியின்) மேன்மைக்காக உன் ஆயிரம் கைகளால் தழுவி ஏற்றுக்கொள். எவ்வாறு நீர் பாய்ந்தோடுகிறதோ, எவ்வாறு மாதங்கள் ஓடி வருடங்களாகின்றனவோ அவ்வாறே நம்மிடம் வரும் மாணவர்களில் பொருத்தமானவர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள். உன்னை சுற்றி இருப்பவர்களிடம் ஒளிர்தல் இல்லாவிடில் (அவர்களை) பெருமளவில் வழி நடத்து.**

भूर्भुवः सुवरिति वा एतास्तिस्रो व्याहृतय्

तासामुहस्मैतां चतुर्थम् । माहाचमस्यः प्रवेदयते । मह इति । तद ब्रहमा ।
स आत्मा । अङ्गान्यन्या देवताः ।

**பூர்புவஸ் ஸுவரிதி வா ஏதாதிஸ்ரோ வ்யாஹ்ருதய: |**
**தாஸா முஹஸ்மை தாம் சதுர்த்தீம் மாஹாஸமஸ்ய: ப்ரவேதயதே|**
**மஹ இதி |தத் ப்ரஹ்ம |ஸ ஆத்மா |அங்கான்யன்யா தேவதா|**

**பூ - பூ: புவ- புவ: ஸுவ- ஸுவ: இதி - இவ்வாறு: ஏதா - இந்த: திஸ்ர- மூன்றும்: வ்யாஹ்ருதய: - வ்யாஹ்ருதிகள்: தாஸாம் உ –அவற்றுள் மேலும்: ஹ ஸ்ம – நிச்சயமாக: சதுர்த்தீம் தாம் - நான்காவதாக உள்ளது: மாஹாஸமஸ்ய – மஹாஸமர்: ப்ரவேதயதே – அறிந்து சொன்னார்: மஹ இதி – மஹ என்று: தத் - அது: பிரஹ்ம: பிரம்மம்: ஸ – அது: ஆத்மா – ஆத்மா: அங்கான் - அங்கங்கள்: அன்யா - இல்லாத: தேவதா – தெய்வம்.**

**பூ ,புவ ,ஸுவ என்ற இந்த மூன்றும் வ்யாஹ்ருதிகள்: மஹாஸமர் என்ற ரிஷி நான்காவதாக 'மஹ' என்று ஒன்று உள்ளதை அறிந்து சொன்னார். அது (அந்த மஹ) பிரம்மம்: அது ஆத்மா. அது அங்கங்கள் அற்றதான தெய்வம்.**

**வ்யாஹ்ருதிகள் என்பவை பிரபஞ்சத் தோற்றத்தின்போது ஓங்காரத்துடன் தோன்றிய அதிர்வுகள். அதாவது பிரபஞ்சத்தின் ஆதார ஒலிகள். இவை மூன்று என்று அறியப்பட்டபின் மஹாஸமர் என்ற ரிஷி நான்காவதான மஹ என்ற வ்யாஹ்ருதியை அறிந்தார் என்கிறது மந்திரம். இன்றைய விஞ்ஞானமும் நான்கு ஆதார ஆற்றல்களை கண்டறிந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.**

**இந்த மஹ என்ற வியாஹ்ருதி மற்றவற்றிற்கு ஆதாரமாக நிற்பதை உணர்த்த, அதனை பிரம்மம், ஆத்மா, அங்கங்கள் அல்லது பிரிவுகள் இல்லாத தெய்வம் என்கிறது மந்திரம். தொடர்ந்து வரும் சூத்திரங்கள் இதனை அழுத்தமாக எடுத்துரைக்கின்றன.**

भूरिति वा अयं लोकः । भुव इत्य्न्तरिक्षम्। सुवरित्य्सो लोकेः ।

मह इत्यादित्यः । आदित्येव वाव सर्वे लोका महीयन्ते ।

**பூரிதி வா அயம் லோக: | புவ இத்யந்தரிக்ஷம் | ஸுவரித்யஸௌ லோக: |**

**மஹ இத்யாதித்ய: | ஆதித்யேன வாவ ஸர்வே லோகா மஹீயந்தே||**

**பூ இதி – பூ என்பது: வா –நிச்சயமாக: அயம் - இந்த: லோக – உலகம்: புவ இதி – புவ என்பது: அந்தரிக்ஷ ம் - வெளி: ஸுவ இதி - ஸுவ என்பது: அஸௌ லோக – அடுத்த உலகம்: மஹ இதி – மஹ என்பது: ஆதித்ய – ஆதார சக்தி: ஆதித்யேன – ஆதார சக்தியாலேயே: ஸர்வே – எல்லா: லோகா – உலகங்களும்: மஹீயந்தே – மஹிமை பெறுகின்றன.**

**முந்தைய சூக்தத்தில் சொல்லப்பட்ட வ்யாஹ்ருதிகள் பற்றிய விளக்கம் தொடர்கிறது. பூ என்பது நிச்சயமாக இந்த உலகம். புவ என்பது வெளி. ஸுவ என்பது மற்ற உலகங்கள்: மஹ என்பது ஆதார சக்தி: இந்த ஆதார சக்தியாலேயே எல்லா உலகங்களும் மகிமை பெறுகின்றன.**

भूरिति वा अग्निः । भुव इति वायुः। सुवरित्यादित्य : ।
मह इति चन्द्रमा : । चन्द्रमसा वाव सर्वाणि ज्योतींषि महीयन्ते ।

**பூரிதி வா அக்னி | புவ இதி வாயு| ஸுவரித்யாதித்ய | மஹ இதி சந்த்ரமா | சந்தரமஸா வாவ ஸர்வானி ஜ்யோதீக்ம்ஷி மஹீயந்தே ||**

**பூ இதி – பூ என்பது: வா –நிச்சயமாக: அக்;னி – நெருப்பு: புவ இதி – புவ என்பது: வாயு – காற்று: ஸுவ இதி - ஸுவ என்பது: ஆதித்;ய - சூரியன்: மஹ இதி – மஹ என்பது: சந்த்ரமா – மனம்: சந்த்ரமஸா வாவ – மனதாலேயே நிச்சயமாக: ஸர்வானி – எல்லா : ஜ்யோதீக்ம்ஷி – ஒளிர்பவைகளும்: மஹீயந்தே – மஹிமை பெறுகின்றன.**

**பூ என்பது நெருப்பு. புவ என்பது காற்று: ஸுவ என்பது சூரியன். மஹ என்பது சந்திரன் எனப்படும் மனம்: மனதாலேயே எல்லா ஒளிர்பவைகளும் தங்கள் மகிமையை அடைகின்றன.**

**சந்திரன் என்பதை நாம் பார்க்கும் சந்திரன் என்று எடுத்துக் கொண்டால் பொருள் தடுமாறும். நெருப்பு, அதன் ஆதாரமான காற்று,**

**இரண்டிற்கும் ஆதாரமான சூரியன் என்ற வரிசையில் சந்திரன் பொருந்தவில்லை. சந்திரன் என்று ஜோதிட நூல்கள் குறிக்கும் மனம் இங்கே சரியாக பொருந்துகிறது.**

**மன அசைவு இல்லாவிட்டால் புலனாவது என்பது எதுவுமில்லை. இந்த புலனாவது என்ற கருத்திற்கு 'ஒளிர்பவை' என்ற சொல்லும் வலு சேர்க்கிறது.**

भूरिति वा ऋुचः । भुव इति समानि :। सुवरिति यजूंषि : ।
मह इति ब्रहमा : । ब्रहमणा वाव सर्वे  वेदा महीयन्ते ।

**பூரிதி வா ரிச: |புவ இதி ஸாமானி |ஸுவரிதி யஜூக்ம்ஷி |**
**மஹ இதி ப்ரஹ்ம |ப்ரஹ்மனா வாவ ஸர்வே வேதா மஹீயந்தே |**

**பூ இதி –பூ என்பது: வா –நிச்சயமாக: ரிச –ரிக்வேதம்: புவ இதி – புவ என்பது: ஸாமானி - ஸாம வேதம்: ஸுவ இதி - ஸுவ என்பது: யஜூக்ம்ஷி –யஜூர் வேதம்: மஹ இதி –மஹ என்பது: ப்ரஹ்ம – ஓங்காரம்: ப்ரஹ்மனா வாவ –ஓங்காரத்தாலேயே நிச்சயமாக: ஸர்வே– எல்லா : வேதா- வேதங்களும்: மஹீயந்தே –மஹிமை பெறுகின்றன.**

**பூ என்பது ரிக்வேதம். புவ என்பது ஸாம வேதம். ஸுவ என்பது யஜூர் வேதம். மஹ என்பது ஓங்காரம். ஓங்காரத்தாலேயே எல்லா வேதங்களும் மேன்மை பெறுகின்றன.**

भूरिति वाप्राणः । भुव इत्यपानः। सुवरिति व्यानः ।
मह इत्यत्रम् : । अन्नेन वाव सर्वे  प्रराणा महीयन्ते ।

**பூரிதி வைப் ப்ராண: |புவ இத்யபான: |ஸுவரிதி வ்யான: |**
**மஹ இத்யன்னம் |அன்னேன வாவ ஸர்வேப் ப்ராணா மஹீயந்தே||**

**பூ இதி –பூ என்பது: வா –நிச்சயமாக: ப்ராண –ப்ராணன்: புவ இதி –புவ என்பது: அபாணன் - அபாண வாயு: ஸுவ இதி - ஸுவ என்பது: வ்யாணன்- வ்யாணன்: மஹ இதி –மஹ என்பது: அன்னம்- உணவு:**

**அன்னேன வாவ – உணவாலேயே நிச்சயமாக: ஸர்வே – எல்லா : ப்ராணா- வாயுக்களும்: மஹீயந்தே – மஹிமை பெறுகின்றன.**

**பூ என்பது ப்ராணன். புவ என்பது அபாணன். ஸுவ என்பது வ்யாணன். மஹ என்பது உணவு. உணவு ஒன்றினாலேயே எல்லாப் ப்ராணன்களும் நிலை பெறுகின்றன.**

ता वा एताश्चतुर्धा । चतस्रश्चतस्रो व्याहृतयः।
ता यो वेद । स वेद ब्रहम । स ऽस्मै देवा बलिमावहन्ति।

**தா வா ஏதாச்சதஸ்ரச் சதுர்தா | சதஸரச்சதஸ்ரோ வ்யாஹ்ருதய: |**
**தா யோ வேத | ஸ வேத ப்ரஹ்ம | ஸர்வேऽஸ்மை தேவா பலிமாவஹந்தி ||**

**தா வை ஏதா - இவையே: சதஸ்ரச் சதுர்தா – நான்கு நான்குகள்: சதஸ்ர சதஸ்ரோ – பதினாறு: வ்யாஹ்ருதய – வ்யாஹ்ருதிகள்: தா - இவற்றை: யோ – யார்: வேத – அறிகிறானோ: ஸ – அவன்: ப்ரஹ்ம – பிரம்மத்தை: வேத – அறிந்தவன்: அஸ்மை – அவர்கள்: ஸ்ர்வே – எல்லா: தேவா – தேவர்கள்: பலிம் - உணவு: ஆவஹந்தி – வருகிறவர்கள்.**

**(முந்தைய சூக்தங்களில் சொல்லப்பட்ட) இவையே நான்கு நான்குகள், இந்த பதினாறான வ்யாஹ்ருதிகளை அறிந்தவன் பிரம்மத்தை அறிந்தவன் ஆகிறான். அத்தகைய அவர்கள் எல்லா தேவர்களுக்கும் உணவோடு வருகிறவர்கள்.**

**பலி என்ற சொல் 'ஆகுதி' என்ற பொருள் தரும். ஆகுதிகளே தேவர்களின் உணவு. தேவர்கள் என்பது இயற்கை சக்தி என்று எடுத்துக்கொண்டால், இந்த வ்யாஹ்ருதிகளை அறிந்து. பிரம்மத்தை அறிந்த ஒருவன் இயற்கையோடு இயைந்து வாழ்வதன் மூலம் அந்த இயற்கை சக்திகளுக்கு உணவளித்தவன் ஆகிறான்.**

**இங்கே அறிந்தவன் என்றால் இந்த கருத்தை படித்தவன் என்பதல்ல. வார்த்தையாக அல்லாமல் வாழ்க்கையாக எவனொருவன்**

**இந்த நான்கு நான்குகளையும் உனர்கிறானோ அவனே அறிந்தவன் ஆவான்.**

स य एषोऽन्तर्हृदय आकाशः । तस्मिन्नयं पुरूषो मनोमयः ।
अमृतो हिरण्मयः ।

**ஸ ய ஏஷோऽந்தர்ஹ்ருதய ஆகாச: | தஸ்மின்னயம் புருஷோ மனோமய | அம்ருதோ ஹிரண்மய ||**

**ஸ – அது: ய – எது: ஏஷோ – அதுவே: அந்தர் ஹ்ருதய - இதயத்தினுள்ளே: ஆகாச – வெளி: தஸ்மின் - அதுவே: அயம் - நிச்சயமாக: புருஷோ – ஆன்மா: மனோமய – உணர்வு பூர்வமானது: அம்ருதோ – அழிவற்ற: ஹிரண்மய – பொன்னொளி வீசுவது.**

**எந்த ஒன்று இதயத்தாமரையில் உள்ள வெளியில் இருக்கிறதோ அதுவே ஆன்மா. அது உணர்வு பூர்வமானது. அழிவற்றது. பொன்னொளி வடிவானது.**

**வ்யாஹ்ருதிகளைப்பற்றி பேசிவிட்டு திடீரென்று உடலைப்பற்றிப் பேசுவதில் ஒரு நுட்பம் உண்டு. வெளியையும், ஒளியையும், அழிவற்ற ஆதார சக்தியையும் புறத்தில் உணர்ந்தறிந்த மாணவன் தன் பார்வையை உட்புறமாக திருப்பி, அதே வெளியும், ஒளியும் மற்றவையும் தன்னுள் விளங்கக் காணவேண்டும். அவ்வாறு ஒளி வடிவமாக, அழிவற்றதாக, பருப்பொருளாய் அல்லாமல் உணர்வு மயமானதாய், இதய வெளியில் காணப்படும் அதுவே ஆத்மா என்கிறது இந்த சூக்தம்.**

अन्तरेण तालुके य एष स्तन इवावलम्बते
सेन्द्रयोनिः यत्रासो केशान्दौ विवर्तते व्यपोहय् शिर्षकपाले

**அந்தரேண தாலுகே | ய ஏஷஸ்தன இவாவலம்பதே | ஸேந்த்ரயோனி | யத்ராஸௌ கேசாந்தோ விவர்த்ததே | வ்யபோஹ்ய சீர்ஷ கபாலே ||**

**தாலுகே – அண்ணத்தின்: அந்தரேண – உட்பகுதியில்: ய ஏஷ - எது: ஸ்தன – பசுவின் காம்பு : இவ – போல: வலம்பதே – தொங்குகிறது: ஸ – அது: இந்த்ர யோனி - இறைவழி. யத்ர – எங்கு: அஸௌ – மறுபகுதி: கேசாந்தோ –முடிகளின் அடிப்பாகம்: விவர்த்ததே – பிரிந்து நிற்கிறது: சீர்ஷ கபாலே – மன்டையோட்டை: வ்யபோஹ்ய – பிளந்து கொண்டு.**

**அண்ணத்தின் உட்பகுதியில், பசுவின் காம்பு போல எது தொங்குகிறதோ, அது இறைவழி, அதன் மறுபகுதி, முடிகளின் அடிப்பாகம் பிரிந்து நிற்கும் (உச்சந்தலையில்) பகுதியில் மன்டையோட்டை பிளந்து செல்கிறது.**

**இதயத்தாமரையின் நடுவில் ஆத்மாவை காட்டிய ரிஷி, இதயத்திற்கும் பிரம்மத்திற்குமான தொடர்பு பாதையை இங்கே சுட்டிக்காட்டுகிறார்.**

**நாம் ஒன்றை ஆழமாக புரிந்து கொள்ள வேண்டும். இங்கே இதயம் என்று குறிப்பிடப்படுவதும், நாடிகள் என்று பேசப்படுவதும் உணர்வு பூர்வமானவை. அவற்றிற்கும் இன்றைய மருத்துவம் அவ்வாறாக பெயரிட்டிருக்கும் உடல் பகுதிக்கும் தொடர்பு இல்லை.**

**இந்து மத ஸாஸ்திரங்களின்படி இதயத்தை நூற்றியோரு நாடிகள் சூழ்ந்திருக்கின்றன. அவற்றில் ஒன்று, உள்நாக்கின் வழியே உச்சந்தலைப் பகுதியில் மன்டையோட்டை கடந்து செல்கிறது. மற்றவை பல்வேறு வாயில்களை அடைகின்றன.**

**இந்த உச்சந்தலைப் பகுதியை கடக்கும் நாடியின் வழியே ப்ராணனை விடுபவன் மறுபிறப்பு எய்துவதில்லையாம்.**

**இதனால் தான் இந்த சூக்தம் இந்த நாடியை 'இறை வழி' என்று குறிப்பிடுகிறது. மரனிக்கும் போது மட்டுமல்லாமல், பிரம்மத்தோடு ஆத்ம தொடர்பு கொள்வதற்கு இந்த நாடியே உகந்தது என்பதை பல்வேறு சித்தர்களும் பாடியுள்ளனர்.**

**முழு விழிப்புணர்வோடு, தன் ப்ராணனை இந்த நாடியின் வழியே வெளியேற்றுபவனே பிறப்பற்ற நிலையை அடைகிறான். ஆசைகளற்ற யோகிகளுக்கே இது நிகழும் என்று சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன.**

भूरित्यग्नौ प्रतितिष्ठति    भुव इति वायौ   सुवरित्यादित्ये    मह् इति ब्रह्मणि
आप्नोति स्वाराज्यम्   आप्नोति मनसस्पतिम्   वाक्पति

श्ववक्षुप्पतिः श्रोत्रपति विज्ञानपतिः एतत्ततो भवति
आकाशशरीरं ब्रहमा सत्यात्मप्राणरामं मन आनंन्दस्
शान्तिसमृद्धममृतम् इति प्राचिनयोग्योपास्स्व

**பூரித்யக்னௌ ப்ரதிஷ்ட்டதி | புவ இதி வாயௌ |**
**ஸுவரிதியாதித்யே | மஹ இதி ப்ரஹ்மணி | ஆப்னோதி**
**ஸ்வராஜ்யம் |ஆப்னோதி வனஸஸ்பதிம் | வாகபதிச்சக்ஷுஷ்பதி |**
**ச்ரோத்ரபதிர் விஞ்ஞானபதி | ஏதத் ததோ பவதி | ஆகாச சரீரம்**
**ப்ரஹ்ம |ஸத்யாத்ம ப்ராணாராமம் மன ஆனந்தம் | ஸாந்தி**
**ஸம்ருத்தமம்ருதம் | இதி ப்ராசீனயோக்யோபாஸ்வ ||**

**பூ இதி – பூ என்று: அக்னௌ – அக்னியில்: புவ இதி – புவ என்று: வாயௌ – காற்றில் : ஸுவ இதி - ஸுவ என்று: ஆதித்யௌ - சூரியனில்: மஹ இதி – மஹ என்று: ப்ரஹ்மணி – பிரம்மத்தில்: ப்ரதிதிஷ்ட்டதி – நிலைபெறுகிறான்: ஸ்வராஜ்யம் - சுதந்திரம் அல்லது தனக்குத்தானே தலைவன்: மனஸ்பதிம் - மனதிற்குத் தலைவன்: சக்ஷுஷ்பதி – கண்களுக்குத் தலைவன்: ச்ரோத்ரபதி – காதுகளுக்குத் தலைவன்: விஞ்ஞானபதி – அறிவின் தலைவன்: ஆப்னோதி – ஆகிறான்: ஏதத் ததோ – அதன் பிறகு: ஆகாச – வெளியை: சரீரம் - உடலாகவும்: ஸத்ய ஆத்ம - ஸத்தியத்தை ஆத்மாவாக: ப்ராணாராமம் - ப்ராணனில் நிலைபெற்ற: ஆனந்தம் - ஆனந்தத்தை: மன: - மனமாக: ஸாந்தி ஸம்ருத்தம் - அமைதி நிறைந்த: அம்ருதம் - அழிவற்ற: பவதி – ஆகிறான்: இதி - இவ்வாறு: ப்ராசீனயோக்ய – முன்னாளில் தகுதியுடையவர்கள்: உபாஸ்வ – சிந்தித்து அறிந்துள்ளனர்.**

**வ்யாஹ்ருதிகளை தியானிப்பதால் ஏற்படும் பலன்கள் இந்த சூக்தத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. பூ என்ற வ்யாஹ்ருதியை தியானிப்பதால் அக்னியிலும் புவ என்ற வ்யாஹ்ருதியை தியானிப்பதால் காற்றிலும் ஸுவ என்பதால் சூரியனிலும் மஹ என்பதால் ப்ரம்மத்திலும் தியானிப்பவன் நிலைபெறுகிறான். இதன் பலனாக அவன் தன் பந்தங்களிலிருந்து விடுதலை பெறுகிறான். தன்னுடைய கண், காது போன்ற பொறிகளுக்கும் அறிவிற்கும் தன் மனதிற்கும் தலைவன் ஆகிறான். அதன் பிறகு பரந்திருக்கும்**

**வெளியையே தன் உடலாகவும் ஸத்யத்தை ஆத்மாவாகவும் ப்ராணனில் நிலைபெற்ற ஆனந்தத்தை மனமாகவும் கொண்டு, அமைதி நிறைந்த அழிவற்ற பிரம்மமாகவே ஆகிறான்இ இவ்வாறு முன்னாளில் தகுதியுடையவர்கள் சிந்தித்து அறிந்துள்ளனர்**

**வெளியையே தன் உடலாகக் கொள்கிறான் என்பதன் மூலம் அவனுள் இந்த ப்ரபஞ்சம் முழுவதும் அடங்கும் என்பது தெரிவிக்கப்படுகிறது.**

पृथिव्यन्तरिक्षं दयौर्दिशोऽवान्तरदिशाः अग्निर्वायुरादित्यश्चन्द्रमा नक्षत्राणि
आप ओषधयो वनस्पतय आकाश आत्मा इत्यधिभूतम् अथाध्यात्मम् प्राणो
व्यानोऽपान उदानः समानः चक्षुः श्रोत्रं मनो वाक्त्वक् चर्म मांसं स्नावास्थि मज्जा
एतदधिविधाय
ऋषिरवोचत् पाङ्क्तं वा इदं सर्वम् पाङ्क्तेनैव पाङ्क्तं स्पृणोतीति

**ப்ருத்வியந்தரிக்ஷம் த்யௌர் திசோऽவாந்தர்திசா|**
**அக்னிர் வாயராதித்ய சந்த்ரமா நக்ஷத்ராணி|**
**ஆப ஓஷதயோ வனஸ்பதய ஆகாச ஆத்மா|**
**இத்யதிபூதம் |அதாத்யாத்மம் |**
**ப்ரானோ வ்யானோऽபான உதானஸ் ஸமான|**
**சக்ஷுச்ரோத்ரம் மனோ வாக் த்வக் |**
**சர்ம மாக்மஸ்க்ம் ஸ்நாவாஸ்த்தி மஜ்ஜா |**
**ஏதத்ததிவிதாய ரிஷி ரவோசத் |**
**பாங்க்த்தம் வா இதம் ஸர்வம் |**
**பாங்க்த்தேனைவ பாங்க்தம் ஸ்ப்ருனோத இதி|**

**ப்ருத்வி – பூமி: அந்தரிக்ஷ ம் - வெளி: த்யௌ – வானம்: திசா – திசைகள்: அந்தர்திசா - இடைப்பட்ட திசைகள்: அக்னி – நெருப்பு: வாயு – காற்று: ஆதித்ய - சூரியன்: சந்த்ரமா – சந்திரன்: நக்ஷ த்ராணி – நட்சத்திரங்கள்: ஆப – நீர்: ஓஷதயோ – செடிகள்: வனஸ்பதய- மரங்கள்: ஆகாச – வெளி: ஆத்மா – மனிதன்: இதி - இவ்வாறு: அதிபூதம் - புறப்பொருட்கள்: அத – பிறகு: ஆத்மம் - அகப்பொருட்கள்: க்ஷு-கண்: ச்ரோத்ரம் - காது: மன –மனம், வாக் - பேச்சு, த்வக் -தொடுவுணர்ச்சி:**

**ப்ரான – ப்ரானன்: வ்யான – வ்யானன்: அபான- அபானன்: உதானன் - உதானன்: ஸமானன் - ஸமானன்: சர்ம – தோல்: மாம்ஸம் - சதை: ஸ்நாவ – தசை: அஸ்த்தி – எலும்பு: மஜ்ஜா – மஜ்ஜை: ஏதத் - இவை: அதிவிதாய – அதிகம் ஆராய்ந்த: ரிஷி – ரிஷி: ரவோசத் - சொன்னார்: பாங்க்தம் வா – வரிசையே: இதம் சர்வம் - இங்கு எல்லாம்: பாங்க்தேனைவ – வரிசையிலிருந்தே: பாங்கத்தம் - வரிசை: ஸ்ப்ருனோத – முளைத்தெழுந்தது: இதி - இவ்வாறு**

**இந்த சூக்கத்தில் சில புற பொருட்களும் அக பொருட்களும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது 'இந்த வரிசையே எல்லாம்;- (முந்தைய) வரிசையிலிருந்தே (அடுத்த) வரிசை முளைத்தெழுந்தது என்று அதிகம் இதனை ஆராய்ந்த ஒரு ரிஷி சொல்வதாக இது அமைந்திருக்கிறது. இனி வரிசையை பார்ப்போம்:**

**பூமி, வெளி, வானம், திசைகள், உபதிசைகள்**

**நெருப்பு காற்று சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள்**

**தண்ணீர் செடிகள் மரங்கள் வெளி உயிர்கள் -- இவை புறப்பொருட்கள்**

**இனி அகப்பொருட்கள்:**

**ப்ரானன் விபானன் அபானன் உதானன் ஸமானன் என்பதான வாயுக்கள்.**

**கண், காது, மனம், பேச்சு மற்றும் தொடுவுணர்ச்சி**

**தோல் சதை தசை எலும்பு மஜ்ஜை போன்றவை உடலில் உள்ள பருப்பொருட்கள்.**

**இந்த வரிசைபடுத்தலில் முக்கியத்துவம் ஏதும் தெரியவில்லை என்றாலும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அறிந்திருப்பது வியக்கத்தக்கதே. மேலும் இது கற்பித்தலைப் பற்றிய ஆராய்ச்சி என்பதால் 'எந்த விதமான கல்வி அளிக்கப்பட்டது?' என்பதற்கு விsக்கமாக இதனை எடுத்துக்கொள்ள முடியும்.**

ओमिति ब्रहम ओमितीदं सर्वं ओमित्येतदनुकृति

ह स्म वा अप्यो श्रावयतश्रावयन्ति ओमिति सामानि गायन्ति

ओंशोमिति शस्त्राणि शंसन्ति ओमित्यध्वर्युः

प्रतिगरं प्रतिगृणाति ओमिति ब्रहमा प्रसौति

ओमित्यग्निहोत्रमनुजानाति ओमिति ब्राह्मणः
प्रवक्षयन्नाह ब्रह्मोवाप्नवानीति ब्रह्मैवोपाप्नोति

**ஓமிதி ப்ரஹ்ம | ஓமிதீதக்ம் ஸர்வம் | ஓமித்யேதனுக்ருதி ஹஸ்ம வா அப்யோச்ராவயேத்யாச்ராவயந்தி | ஓமிதி ஸாமானி காயந்தி | ஓக்ம்சோமிதி சஸ்த்ராணி சக்ம்ஸந்தி | ஓமித்யத்வர்யு: ப்ரதிகரம் ப்ரதிக்ருணோதி | ஓமிதி ப்ரஹ்மா ப்ரஸௌதி | யக்னிஹோத்ரமனுஜானாதி | ஓமிதி ப்ராஹ்மண: ப்ரவக்ஷ் யன்னாஹ ப்ரஹ்மோவாப்னவானீதி | ப்ரஹ்மைவோபாப்னோதி ||**

**ஓம் இதி – ஓங்காரமே: ப்ரஹ்ம – ப்ரம்மம்: ஓம் இதீதம் - ஓங்காரமே: ஸர்வம் - எல்லாம்: ஓம் இதி ஏதத் - ஓம் என்பதை: அனுக்ருதி – ஆகட்டும் என்பதற்கு: ஹஸ்ம வை – முற்காலத்திலேயே வழக்கிலுள்ளது: அபி – மேலும்: ச்ராவய – கேள் : உ - கூட: ஆச்ராவயந்தி – கேட்கிறேன் என்கிறார்கள்: ஓம் இதி – ஓம் என்றே: ஸாமானி - ஸாம வேத மந்திரங்கள்: காயந்தி – பாடப்படுகிறது: ஓம் சோம் இதி – ஓம் சோம் என்றே: சஸ்த்ராணி – ரிக்வேத மந்திரங்கள்: சம்ஸந்தி - கூறப்படுகிறது: ஓம் இதி – ஓம் என்றே: அத்வர்யு – யாகம் செய்பவர்: ப்ரதிகரம் - மறுமொழி: ப்ரதிக்ருனோதி – பதிலளிக்கிறார்கள்: ஓம் இதி – ஓம் என்று: ப்ரஹ்மா – தலைமை புரோகிதர்: ப்ரஸௌதி – சம்மதம் தெரிவிக்கிறார்: ஓம் இதி – ஓம் என்று: அக்னிஹோத்ரம் - அக்னிஹோத்ரம் செய்வதற்கு: அனுஜானாதி – அனுமதி அளிக்கிறார்: ஓம் இதி – ஓம் என்றே: ப்ராஹ்மண – தூயவர்கள்: ப்ரவக்ஷ் யன் - வேத பாடம் துவங்கும்போது: ஆஹ- ஓதுகிறார்கள்: ப்ரஹ்ம உபாப்னவான்– ப்ரம்மத்தை உணர்வதற்காக: இதி -இவ்வாறு: ப்ரஹ்மைவோபாப்ன இதி - இவ்வாறு பிரம்மத்தை உணர்கிறார்கள்.**

**ஓம் எனப்படும் ஓங்காரமே பிரம்மம்: ஓங்காரமே சகலமும். ஆகட்டும் என்பதற்கு ஓம் என்று சொல்வது முற்காலத்திலேயே உள்ளது. கேள் என்று சொல்லும்போது கேட்கிறேன் என்பதற்கு ஓம் என்றே கூறுகிறார்கள். ஓம் என்று தொடங்கியே ஸாமகானம் பாடப்படுகிறது. ஓம் சோம் என்றே ரிக்வேத மந்திரங்கள் தொடங்குகின்றன. யாகம் செய்பவர் மறுமொழி சொல்லும் போது ஓம் என்றே சொல்கிறார்கள்.**

**தலைமை புரோகிதர் ஓம் என்று சொல்லியே அனுமதி அளிக்கிறார். ப்ரம்மத்தை உணர்வதற்கான கல்வியை ஆரம்பிக்கும்போது தூயவர்கள் ஓம் என்றே துவங்குகிறார்கள். இவ்வாறு ப்ரம்மத்தையும் உணர்கிறார்கள்.**

**இந்த சூக்தம் அற்புதமானது. இதுவரை பல்வேறு இடங்களில் ஓங்காரத்தையும் வ்யாஹ்ருதிகளைப் பற்றியும் பேசிய ரிஷி ஒரு அற்புதமான உன்மையை வெளியிடுகிறார். மந்திர அட்சரங்கள், அவற்றின் பெருமை முழுவதும் அறிந்து சொன்னால்தான் பலன்தரும் என்பதல்ல. மருந்தின் தன்மையை உணராமல் அருந்தினாலும் நோய் தீர்வது போல், நடைமுறை வாழ்க்கையில் சாதாரனமாக உபயோகித்தாலும் அவை அவற்றிற்குரிய பலனைத் தரும் என்கிறார்.**

**ஆனால், இது கல்வியைப் பற்றிய ஆராய்ச்சி. இதுவரை நாம் பார்த்ததெல்லாம் ப்ரம்மத்தைத் தேடுவோருக்கான இறைக்கல்வி. இவை மட்டும் தான் அந்த காலத்தில் கற்பிக்கப்பட்டதா? ஒரு கல்விச்சாலையில் எவையெல்லாம் கற்பிக்கப்பட்டது அல்லது கற்பிக்கப்பட வேண்டும்? இதோ அடுத்த சூக்தம்.**

ऋतञ्च स्वाध्यायप्रवचने च  सत्यञ्च स्वाध्यायप्रवचने च
तपश्य स्वाध्यायप्रवचने च दमश्य स्वाध्यायप्रवचने च शमश्य स्वाध्यायप्रवचने च
अगन्यश्च स्वाध्यायप्रवचने च अग्निहोत्रञ्च स्वाध्यायप्रवचने च अतिथयश्च स्वाध्यायप्रवचने च
मानुषञ्च स्वाध्यायप्रवचने च  प्रजा च स्वाध्यायप्रवचने च प्रजनश्च स्वाध्यायप्रवचने च
प्रजतिश्च स्वाध्यायप्रवचने च  सत्यमिति सत्यवचा राथीतरः

तप इति तपोनित्यः पौरूशिष्टिः स्वाध्यायप्रवचने एवेति नाको मौद्रल्यः  तद्धि तपस्तद्धि तपः

**ரிதம் ச ஸ்வாத்யாய ப்ரவசனேச்ச| ஸத்யம் ச ஸ்வாத்யாய ப்ரவசனேச்ச| தபச்ச ஸ்வாத்யாய ப்ரவசனேச்ச| தமச்ச ஸ்வாத்யாய ப்ரவசனேச்ச| சமச்ச ஸ்வாத்யாய ப்ரவசனேச்ச| அக்னயச்ச ஸ்வாத்யாய ப்ரவசனேச்ச | அக்னிஹோத்ரம் ச ஸ்வாத்யாய ப்ரவசனேச்ச | அதிதயச்ச ஸ்வாத்யாய ப்ரவசனேச்ச | மானுஷம் ச ஸ்வாத்யாய**

**ப்ரவசனேச்ச |ப்ரஜாச்ச ஸ்வாத்யாய ப்ரவசனேச்ச |ப்ரஜனச்ச ஸ்வாத்யாய ப்ரவசனேச்ச |ப்ரஜாதிச்ச ஸ்வாத்யாய ப்ரவசனேச்ச | ஸத்யமிதி ஸத்யவதா ராதீதர |தப இதி தபோநித்ய பௌருசிருஷ்டி | ஸ்வாத்யாய ப்ரவசனே ஏவேதி நாகோ மௌத்கல்ய |தத்தி தபஸ் தத்தி தப: ||**

**ரிதம் - பிரபஞ்ச ஒழுங்குமுறை: ஸ்வாத்யாய ப்ரவசனேச்ச –தானே ஆராய்ந்து கற்றலும் அதனை வெளிப்படுத்துதலும்: ஸத்யம் - ஸத்யம்: தப –தவம்: தம –புலனடக்கம்: சம –அமைதி: அக்னய –வேள்விகள்: அக்னிஹோத்ரம் - தேவர்களுக்கும் முன்னோருக்குமான கடமை: அதிதி –விருந்தினன்: மானுஷம் - மனிதகுலம்: ப்ரஜா –நன்மக்கள்: ப்ரஜன – மக்கள் பேறு: ப்ரஜாதி –பேரப் பிள்ளைகள்: ஸத்யம் இதி - ஸத்யம் என்று: ஸத்யவசா - ஸத்யம் பேசுபவரான: ராதீதர –ராதீதர முனிவர்: தப இதி –தவம் என்று: தபோநித்ய –தவத்தில் நிலைபெற்ற: பௌருசிருஷ்டி –பௌருசிருஷ்டி என்ற முனிவர்: ஸ்வாத்யாய ப்ரவசனே –கற்றலும் கற்பித்தலும்: ஏவ இதி –நிச்சயமாக: நாக உ - ஸ்வர்க்கம்: மௌத்கல்ய –முத்கலர்: தத் ஹி - இதுவே: தபஸ் - தவம்:**

**ரிதம் என்ற பிரபஞ்ச ஒழுங்குமுறை, ஸத்யம். தவம், புலக்கட்டுப்பாடு, அமைதித் தன்மை, வேள்விகள், நெருப்பு மூலமான – தெய்வங்களுக்கும் முன்னோர்களுக்குமான –வழிபாடு, மனித குலத்தின் தன்மை, மக்கள், மக்கள்பேறு, நல்ல பேரப்பிள்ளைகளைப் பெறுதல் அல்லது சந்ததி இவை அனைத்தும் ஆராய்ந்து அறிந்து வெளிப்படுத்தப்பட வேண்டும். இதுவே ஸத்யம் என்றார் ஸத்யமே பேசும் ராதீதரர் என்ற முனிவர். இதுவே தவம் என்றார் தவத்தில் நிலைபெற்ற பௌருசிருஷ்டி முனிவர். இவ்வாறான கற்றலும் கற்பித்தலும் ஸ்வர்க்க லோகத்தைப் போல் சுகமானது என்றார் முத்கலர் என்ற முனிவர். இதுவே தவம்: இவ்வாறே தவம்.**

**வேதத்தின் அங்கமான உபநிஷதம், வேதத்தில் கடமைகளாக கொடுக்கப்பட்டுள்ள வேள்விகளையும், கடமைகளையும் கூட ஆராய்ந்து அறிய வேண்டும் என்று கூறுவது உணரத்தக்கது. ஸ்வாத்யாய என்ற சொல் உன்னதமானது. ஸ்வ அத்யாய என்றால், பிறர் சொல்வதை**

**ஏற்காமல் தானே ஆராய்ந்து அறிதல் என்று பொருள். அவ்வாறு அறிய மானவர்கள் தூண்டப்பட்டிருக்கிறார்கள்.**

**தவம் என்றால் ஏதோ இறைவனைப் பற்றியது என்று எண்ணிவிடக்கூடாது. தவம் என்றால் ஒருமித்த சிந்தனையோடு இருத்தல். எந்த ஒன்றையும் ஆழ்ந்து சிந்திக்கும்போது அதன் பல்வேறு பரிமானங்கள் நமக்குப் புரியக்கூடும். எனவேதான் 'கற்றலும் கற்பித்தலும்' ஆகிய இதனை தவம் எனறார் பௌருசிருஷ்டி முனிவர். இத்தகைய ஆராய்ச்சி அறுதி உண்மைகளை வெளிப்படுத்தும் என்பதால் இதுவே சத்தியம் என்றார் ராதீதர முனிவர். இது இனிமையானது என்பதைக் குறிப்பிட 'கற்றலும் கேட்டலும்' ஆகிய இதில் கிடைப்பது ஸ்வர்க்க லோகம் போன்ற இனிமை என்கிறார் முத்கல்யர். கற்றலுக்கான ஆராய்ச்சியே தவம் என்று உரத்துக் கூறுகிறது இந்த சூக்தம்.**

**கல்வியைப் பற்றியும் கற்றலைப்பற்றியும் இத்தனை உயர்வாக சொல்கிறது இந்த உபநிஷதம். பிரம்மத்தை உணர்தலைப் பற்றி உயர்வாகப் பேசுகிறது. ஆனால் இதற்கு என்ன ஆதாரம்? யார் இந்த நிலைகளை அடைந்தவர்? ஒரு முன்மாதிரி உண்டா? என்ற கேள்விகள் மானவனின் உள்ளத்தில் எழும் என்பதால் அடுத்த சூக்தம் ஒரு முன்மாதிரியைக் காட்டுகிறது.**

अहं वृक्षस्य रेरिवा कीर्तिः पृष्ठं गिरेरिव ऊर्ध्वपवित्रो वाजनीय स्वमृतमस्मि द्रविणं सवर्चसम् सुमेधा अमृतोक्षितः इति त्रिशङ्गो वेदानुवचनम्

**அஹம் வ்ருக்ஷஸ்ய ரேரிவா | கீர்த்தி ப்ருஷ்ட்டம் கிரேரிவ | ஊர்த்வ பவித்ரோ வாஜினீவ ஸ்வம்ருதமஸ்மி | த்ரவிணக்ம் ஸ்வர்ச்சஸம் | ஸுமேதா அம்ருதோக்ஷித | இதி த்ரிசங்கோர் வேதானுவசனம்||**

**அஹம் - நான்: வ்ருக்ஷ ஸ்ய – மரத்தைப் போல: ரேரிவா – வளம் செய்பவன்: கீர்த்தி – புகழ்: கிரி ப்ருஷ்ட்டம் - மலை உச்சி அல்லது சிகரம்: இவ – போல: ஊர்த்வ பவித்ரோ – பெருமையும் புனிதமும்: வாஜினி இவ - சூரியனைப் போல: ஸ்வ அம்ருதம் அஸ்மி- நான் அழிவற்றவனாக இருக்கிறேன்: த்ரவிணம் ஸவர்ச்சஸம் - செல்வமும்**

**பேரொளியும் உள்ளவன்: ஸுமேதா – உணர்வு விழிக்கப்பெற்றவன்: அம்ருத உ – அழிவற்றவனும் கூட: அக்ஷித – குறையற்றவன்: இதி - இவ்வாறு: த்ரிசங்கோ – த்ரிசங்கு முனிவரின்: வேத – உணர்ந்த: அனுவசனம் - அனுபவ வார்த்தைகள்.**

**இதுவரை இந்த உபநிஷதம் சொன்னவையெல்லாம் அடையத்தக்கவையே என்பதற்குச் சான்;றாக, அவ்வாறு உணர்வு விழிப்புற்று பிரம்மத்தை உணர்ந்த த்ரிசங்கு என்ற முனிவரின் வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ளன.**

**நான் மரத்தை போல் வளம் சேர்ப்பவன். மலை சிகரம் போல் உயர்ந்த புகழை அடைந்துள்ளேன். பெருமையும் புனிதமும் பெற்று சூரியனைப் போல் அழிவற்றவனாக நான் இருக்கிறேன். செல்வமும் புனிதப் பேரொளியும் உள்ளவன். உணர்வு விழிக்கப்பெற்றவன். அழிவும் குறைகளும் அற்றவன். என்று கூறுகிறார் த்ரிசங்கு முனிவர்.**

**மரத்தைப் போல் வளம் சேர்ப்பவன் என்று சொன்னது மிகப் பொருத்தமானது. மரங்கள் மட்டுமே பிரதிபலனைப் பார்க்காமல் தங்களால் இயன்ற எல்லா வழிகளிலும் மற்றவற்றிற்கு உதவிகரமாக விளங்குகின்றன. பல்வேறு உயிர்களும் உணவுக்குத் தாவரங்களையே சார்ந்திருக்கின்றன. இயற்கையின் சுழற்சி மாறாமல் இருக்க மரங்களே உதவுகின்றன. பல நுண்ணுயிர்கள் பல்கிப் பெருகவும் மரங்களே காரனம். ஆனால் இந்த மரங்கள், தங்கள் தேவைக்காக இடம் பெயர்வதில்லை. சூழ்நிலைகளைப் பொருத்துத் தங்களை தாங்களே மாற்றிக்கொள்கின்றன. இதனாலேயே, மரத்தைப் போல் வளம் சேர்ப்பவன் என்கிறார் முனிவர். வேத நூல்களில் ஒருவரது அனுபவம் வெளியிடப்பட்டால் அந்தப் பகுதி நிறைவுற்றதாகப் பொருள். ஆனால், இங்கே இந்த ஸ்லோகத்திற்குப் பின்னும் 'சீக்ஷா வல்லீ' தொடர்கிறது. தொடரும் மந்திரங்கள், கற்பித்தல் முடிந்தபின் தரப்படும் அறிவுரைகளாக இருக்கின்றன. எனவே, முதல் ஸ்லோகம் விளக்கவந்த 'கல்விப்' பகுதி முடிவடைந்ததை இந்த ஸ்லோகம் குறிப்பிடுவதாகவே கொள்ளவேண்டும்.**

वेदमनूच्याऽऽचार्योऽन्तेवासिनमनुशास्ति सत्यं वद धर्मञ्चर स्वाध्यायान्मा प्रमदः
आचार्याय प्रियं धनमाहृत्य प्रजतन्तुं मा व्यवच्छेत्सीः

**வேதமனூச்யாऽऽசார்யோ ऽந்தேவாஸினமனுசாஸ்தி | ஸத்யம் வத | தர்மம் சர | ஸ்வாத்யாயன்மா ப்ரமத | ஆச்சார்யாய ப்ரியம் தனமாஹ்ருத்ய | ப்ரஜா தந்தும் மா வ்யவச்சேத் ஸி**

**வேத அனூச்ய – கற்பித்தல் முடிந்ததும்: ஆச்சார்யோ – ஆச்சார்யர்: அந்தேவாஸின – மாணவனிடம்: அனுசாஸ்தி – சொல்கிறார்: ஸத்யம் வத - ஸத்யம் பேசுங்கள்: தர்மம் சர- தர்மத்தை பின்பற்றுங்கள்: ஸ்வாத்யாயன் - ஆராய்ந்து கற்றலை: மா ப்ரமத – விலகாதீர்கள்: ஆச்சார்யாய ப்ரியம் - ஆச்சார்யரின் அன்பு: தனம் - செல்வம்: ஆஹ்ருத்ய – அடையுங்கள்: ப்ரஜா தந்தும் - சந்ததி சங்கிலி: மா வ்யவச்சேத்ஸி – வெட்டாதீர்கள்.**

**கற்பித்தல் முடிந்த பின்னர் ஆச்சார்யர் மாணவர்களுக்கு அறிவுரைகள் வழங்குகிறார்: ஸத்யம் பேசுங்கள். தர்மத்தைக் கடைபிடியுங்கள். ஆராய்ந்து கற்றலை விட்டு விலகாதீர்கள். ஆச்சார்யருக்கு ப்ரியமானவன் என்ற செல்வத்தை அடையுங்கள். சந்ததி சங்கிலியை வெட்டிவிடாதீர்கள்.**

**வாழ்க்கையின ஒவ்வொரு நொடிப்பொழுதும் நாம் கற்றுக்கொள்ள முடியும். கற்றல் நின்று போனால் வளர்ச்சி நின்று போகும். எனவே கற்றலை விட்டு விலகாதீர்கள் என்கிறார். ஆச்சார்யருக்கு ப்ரியமானவன் யார்? அறிவும் புகழும் பெற்ற மானவனே. அதனால் தான் அறிவும் புகழும் பெறவேண்டும் என்பதை 'ஆச்சார்யருக்கு ப்ரியமானவன் என்ற செல்வத்தை அடையுங்கள்' என்று சொல்கிறார். வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனுக்கும் தர்மங்கள் உண்டு. அந்த தர்மங்களைக் கடைபிடிக்க சொல்கிறார். கடைசியாக 'சந்ததி சங்கிலியை வெட்டாதீர்கள்' என்பதன் மூலம் 'நீங்களும் தக்கோருக்கு கற்பித்தல் மூலம் இந்த குரு சீட சங்கிலியை தொடருங்கள்' என்று வேண்டுகோள் விடுக்கிறார்.**

सत्यान्न प्रमदितव्यम् धर्मान्न प्रमदितव्यम् कुशलान्न प्रमदितव्यम्
भूत्यै न प्रमदितव्यम् स्वाध्यायप्रवचनाभ्यां न प्रमदितव्यम् देवपितृ कार्याभ्यां न प्रमदितव्यम्

**ஸத்யான்ன ப்ரமதிதவ்யம் | தர்மான்ன ப்ரமதிதவ்யம் | குசலான்ன ப்ரமதிதவ்யம் | பூத்யை ந ப்ரமதிதவ்யம் | ஸ்வாத்யாய ப்ரவசனாப்யாம் ந ப்ரமதிதவ்யம் | தேவபித்ரு கார்யாப்யாம் ந ப்ரமதிதவ்யம்||**

**ஸத்யாத் - ஸத்தியத்திலிருந்து: தர்மாத் - தர்மத்திலிருந்து: குசலாத் - நன்மை தருவதிலிருந்து: பூத்யை – நற்செயல்களிலிருந்து: ஸ்வாத்யாய ப்ரவசனாப்யாம் - கற்றலிலிருந்தும் கற்பித்தலிலிருந்தும்: தேவ பித்ரு கார்யாப்யாம் - தேவர்களுக்கும் முன்னோர்களுக்கும் செய்ய வேண்டியவற்றிலிருந்து: ந ப்ரமதி தவ்யம் - விலகாதீர்கள்.**

**ஸத்யத்திலிருந்தும், தர்மத்திலிருந்தும், தனக்கு நன்மை தருவனவற்றிலிருந்தும், பிறருக்கு உதவும் நற்செயல்களிலிருந்தும், கற்றலிலிருந்தும், கற்பித்தலிலிருந்தும், தேவர்கள் மற்றும் முன்னோர்களுக்கு செய்யவேண்டிய கடமைகளிலிருந்தும் விலகாதீர்கள்.**

मातृ देवो भव   पितृ देवो भव   आचार्य देवो भव   अतिथि देवो भव

**மாத்ரு தேவோ பவ | பித்ரு தேவோ பவ |**
**ஆச்சார்ய தேவோ பவ | அதிதி தேவோ பவ. ||**

**மாத்ரு – தாய்: பித்ரு – தந்தை: ஆச்சார்ய – ஆச்சார்யன்: அதிதி – விருந்தினன்: தேவோ – தெய்வமாக: பவ – ஆகட்டும்.**

**(மானவனுக்குத்) தாய், தந்தை, ஆச்சார்யர் மற்றும் அவனை நாடி வரும் விருந்தினர்களும் தெய்வமாக ஆகட்டும்.**

**தெய்வமாக ஆகட்டும் என்றால் தன்னலம் அற்று, அன்பு ஒன்றே நிறைந்தவர்களாக, ஆனந்தமான மனநிலையில் வாழ்பவராக ஆகட்டும் என்று பொருள்.**

**கல்வியைக் கற்ற மானவன் ஆனந்தமாக வாழவேண்டும் என்றால் அவனைச் சுற்றியுள்ளவர்கள் ஆனந்தமாக இருந்தால்தான் முடியும் என்பதால் இவ்வாறு கூறப்படுகிறது. மேலும், தாய், தந்தை மற்றும் ஆச்சார்யர்   இந்த மூவரும் மானவன் சிறப்பாக வாழ்;க்கையை**

**வாழ்நதால் மகிழ்வார்கள். அதிதியோ தான் நாடி வந்த பொருள் கிடைத்தால்தான் மகிழ்வார். அப்படி நாடி வருவோர் விரும்புவதைக் கொடுக்கவேண்டும் என்பது நுட்பமாக உணரவேண்டியது.**

यान्यनवद्यानि कर्माणि तानि सेवितव्यानि नो इतराणि
यान्यस्माकं सूचरितानि तानि त्वयोपास्यानि नो इतराणि

**யான்யனவத்யானி கர்மாணி | தானி ஸேவிதவ்யானி | நோ இதராணி | யான்யஸ்மாகம் ஸுசரிதானி | தானித்வயோபாஸ்யானி| நோ இதராணி ||**

**யானி – எவை: அனவத்யானி – தீமை விளைவிக்காத: கர்மாணி – செயல்களோ: தானி – அவை: ஸேவிதவ்யானி – செய்யப்பட வேண்டும்: ந உ - இல்லை: இதராணி – மற்றவைகள்:**
**யானி – எவை: அஸ்மாகம் - நமக்கு: ஸுசரிதானி – நற்பண்புகளை: தானி – அவற்றை: உபாஸ்யானி – நினைக்கவேண்டும்: இதராணி – மற்றவற்றை: ந உ – அல்ல.**

**எவை தீமை விளைவிக்காத செயல்களோ அவையே செய்யப்படவேண்டும். மற்றவை அல்ல. தனக்கு எவை நல்ல பண்புகளை வளர்க்குமோ அவையே நினைக்கப்பட வேண்டும். மற்றவை அல்ல.**

ये के चास्मच्छ्रेयांसो ब्राहमणाः तेषां त्वयाऽऽसनेन प्रश्वसितव्यम्

**யே கே சாஸ்மச்ச்ரேயாக்ம்ஸோ ப்ராஹ்மணா | தேஷாம் த்வயாऽऽஸனேன ப்ரச்வஸிதவ்யம்**

**யே கே ச – யார்: : அஸ்மத் -நம்மை விட: ச்ரேயாம்ஸோ – உயர்ந்தவர்கள்: ப்ராஹ்மணா – தூயவர்கள்: தேஷாம் - அவர்களுக்கு: த்வயா – நீங்கள்: ஆஸனேன - இருக்கை முதலியவை: ப்ரஸ்வஸி தவ்யம் - கொடுக்கவேண்டும்.**

**நம்மைவிட சிறந்தவர்கள், தூயவர்கள் யாரேனும் வந்தால் அவர்களுக்கு இருக்கை முதலானவற்றை நீங்கள் கொடுக்கவேண்டும்.**

श्रद्धया देयम्  अश्रद्धयाऽदेयम् श्रिया देयम् ह्रिया देयम् भिया देयम्  संविदा देयम्

**ச்ரத்தயா தேயம் அச்ரத்தயா ऽதேயம் ச்ரியா தேயம் ஹ்ரியா தேயம் பியா தேயம் ஸம்விதா தேயம்||**

**ச்ரத்தயா – நம்பிக்கை மிக்க ஈடுபாடுடன்: ச்ரியா – வளமானதை: ஹ்ரியா – பணிவுடன்: பியா – மரியாதையுடன்: ஸம்விதா – தகுந்த அறிவுடன்: தேயம் - கொடுக்கவேண்டும்: அச்ரத்தயா – நம்பிக்கையோ ஈடுபாடோ இல்லாமல்: அதேயம் - கொடுக்கக்கூடாது.**

**தானம் செய்யும்போது எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை இந்த சூக்தம் சொல்கிறது.**

**நம்பிக்கை மிக்க ஈடுபாட்டுடன், வளமானதை, பணிவுடன், மரியாதையுடன், தகுந்த அறிவுடன் கொடுக்க வேண்டும். மாறாக அல்ல.**

**வளமானதை கொடுக்க வேண்டும் என்பதால் வளமற்ற பயனற்ற பொருட்களை தானம் செய்யக்கூடாது என்பதாகும். தகுந்த அறிவுடன் என்பதால் பெறுபவருக்கு அதனால் பயன் உண்டாகுமாறு தானம் செய்யவேண்டும்.**

अथ यदि ते कर्मविचिकित्सा वा  वृत्त विचिकित्सा वा सयात्
ये तत्रं ब्राहमणाः संमर्शिनः युक्ता आयुक्ताः अलूक्षा  धर्मकामास्स्युः
यथा ते तत्र वर्तेरन्  तथा तत्र वर्तेथाः
अथाभ्यास्व्यातेषु  ये तत्र ब्राहमणाः
सम्मर्शिनः  युक्ता आयुक्ताः अलूक्षा  धर्मकामास्स्युः
यथा ते तत्र वर्तेरन्  तथा तत्र वर्तेथाः

**அத யதி தே தர்மவிசிகித்ஸா வா வ்ருத்த சிகித்ஸா வா ஸ்யாத்|**
**யே தத்ர ப்ராஹ்மணா ஸம்மர்சின |யுக்தா ஆயுக்தா |அலூக்ஷா தர்மகாமாஸ்ஸ்யு |யதா கே தத்ர வர்த்தேரன் |ததா தத்ர வர்த்தேதா||**
**அதாப்யாக்யாதேஷு|யே தத்ர ப்ராஹ்மணா ஸம்மர்சின |யுக்தா ஆயுக்தா |அலூக்ஷா**
**தர்மகாமாஸ்ஸ்யு |யதா கே தத்ர வர்த்தேரன் |ததா தத்ர வர்த்தேதா||**

**அத - இப்பொழுது: தே – உனக்கு: தர்ம விசிகித்ஸா – தர்மத்தின் பாதையில்: வா – மற்றும்: வ்ருத்த – பழைய: சிகித்ஸா – நடைமுறைகளில்: யதி – சந்தேகம்: ஸ்யாத் - எழுமானால்: தத்ர – அங்கே: ப்ராஹ்மனா – தூயவர்கள்: ஸம்மர்சின – சிந்திப்பவர்கள்: யுக்தா –வழிகளை உணர்ந்தவர்கள்: ஆயுக்தா – சுதந்திரமானவர்கள்: தர்மகாமா – தர்மத்தில் விருப்பமுடையவர்கள்: யே – எவர்: ஸ்யு- இருக்கிறார்களோ: தே – அவர்கள்: தத்ர – அந்த விஷயங்களில்: யதா – எவ்வாறு: வர்த்தேரன் - நடந்து கொள்வார்களோ: ததா – அவ்வாறே: வர்த்தேதா – நடந்துகொள்ளவேண்டும்.**
**அதாப்யாக்யாதேஷு- குற்றம் சாட்டப்பட்டவர்கள் விஷயத்திலும்.**

**தர்மத்தின் பாதையிலோ பழைய நடைமுறைகளிலோ உனக்கு ஏதேனும் சந்தேகம் எழுமானால், அந்த விஷயங்களில் தூயவர்கள், சிந்திப்பவர்கள், நல்வழிகளை அறிந்தவர்கள். சுதந்திரமானவர்கள், தர்மத்தில் நாட்டம் உடையவர்கள் இவ்வாறான சான்றோர் யார் உள்ளனரோ அவர்கள் எப்படி நடந்து கொள்வார்களோ அவ்வாறே நடந்துகொள்ள வேண்டும்.**

**குற்றம் சாட்டப்பட்டவர்கள் விஷயத்திலும் அவ்வாறே.**

एष आदेशः एष उपदेशः एषा वेदोपनिषत् एतदनुशासनम् एवमुपासितव्यम्
एवमुचैतदुपास्यम्

**ஏஷ ஆதேச: | ஏஷ உபதேச| ஏஷா வேத உபநிஷத் |**
**ஏததனுசாஸனம் | ஏவமுபாஸிதவ்யம் | ஏவமுசைததுபாஸ்யம். ||**

**ஏஷ - இது: ஆதேச – கட்டளை: உபதேச – உபதேசம்: வேத உபநிஷத் - ரகசிய அறிவு: ஏதத் - இது: அனுசாஸனம் - இறை ஆணை: ஏவம் - இவ்வாறே: உபாஸிதவ்யம் - நினைக்கப்பட வேண்டும்: ஏவம் - இவ்வாறே: ஏதத் - இதனை: உபாஸ்யம் ச – ஏற்கவேண்டும்.**

**இதுவரை சொல்லப்பட்டவை கட்டளை, உபதேசம், ரகசிய அறிவு, இது இறை ஆணை. இவ்வாறு இதனை நினைக்கவேண்டும், இவ்வாறே இவை ஏற்கப்படவேண்டும்.**

ॐ शं नो मित्रः शं वरूणः शं नो भवत्वर्यमान  शं न इन्द्रो बृहस्पतिः शं नो विष्णुरूरूक्रम नमो ब्रहमणे  नमस्ते वायो त्वमेव प्रत्यक्षं प्रहमासि त्वमेव प्रत्यक्षं ब्रहम वादिषम् ऋतं वादिषम् सत्यं वादिषम् तन्मामावीत्  तदवक्तारमावीत्  आवीनमाम्  आवीद्वक्तारम्

ஓம் சன்னோ மித்ர: சம் வருண: | சன்னோ பவத்வர்யமான்|
சன்ன இந்த்ரோ பிருஹஸ்பதி: | சன்னோ விஷ்ணுருருக்ரம:|
நமோ பிரம்மணே | நமஸ்தே வாயோ| த்வமேவ ப்ரத்யக்ஷ ம்
பிரம்மாஸி | த்வமேவ ப்ரத்யக்ஷ ம் பிரஹ்மா வாதிஷம்| ரிதம்
வாதிஷம் |
ஸத்யம் வாதிஷம்| தன்மாமாவீத் | தத்வக்தாரமாவீத் |
அவீன் மாம் | ஆவீத் வக்தாரம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

சம் -நன்மை செய்யட்டும்: ந உ – நம் இருவருக்கும்: மிதர: - மித்ரன்: சம் - நன்மை செய்யட்டும்: வருண: - வருணன்: சம் - நன்மை செய்யட்டும்: ந உ – நம் இருவருக்கும்: பவதி – ஆகட்டும்: அர்யமான் - அர்யமான்: சம் - நன்மை செய்யட்டும்: ந – நமக்கு: இந்த்ர உ - இந்திரனும்: பிரஹஸ்பதி – பிருஹஸ்பதி: சம் - நன்மை செய்யட்டும்: விஷ்ணு – திருமால்: உருக்ரம: - எங்கும் உள்ளவராகிய: நம உ – வணங்குகிறேன்: பிரம்மணே – பிரம்மத்தை: நமஸ் - நமஸ்காரம்: தே – உனக்கு: வாயு – வாயுதேவன்: த்வம் ஏவ – நீயே: பிரத்யக்ஷ ம் - கண்கண்ட: பிரஹ்ம அஸி – பிரம்மமாக இருக்கிறாய், பிரம்ம – பிரம்மம்: வாதிஷம் - சொன்னேன்: ரிதம் - பிரபஞ்ச ஒழுங்கு: ஸத்யம் - பேருண்மை: தத் - அது: மாம் - என்னை: ஆவீத்-காத்தது: தத் - அது: வக்தாரம் -குருவை: ஆவீத் – காத்தது: அவீன்மாம் - என்னைக் காத்தது: அவீத் வக்தாரம் -குருவைக் காத்தது.

மித்ரன் என்ற தேவன் நமக்கு நன்மை செய்யட்டும்: வருணன் நன்மை செய்யட்டும்: அர்யமான் என்ற தேவன் நமக்கு நன்மை செய்பவனாக இருக்கட்டும்: இந்திரனும் பிரஹஸ்பதியும் நமக்கு நன்மை செய்யட்டும்: எங்கும் நிறைந்தவராகிய விஷ்ணு நமக்கு நன்மை செய்யட்டும்: பிரம்மமே உன்னை வணங்குகிறேன்: வாயு தேவனே உமக்கு நமஸ்காரம். நீயே கண்களுக்குப் புலனாகும் பிரம்மம். உன்னை புலனாகும் பிரம்மம் என்று போற்றினேன். பிரபஞ்ச ஒழுங்கு முறையை

**போற்றினேன். பேருண்மையைப் போற்றினேன். அந்த பிரம்மம் என்னைக் காத்தது. குருவைக் காத்தது. என்னைக் காத்தது, குருவைக் காத்தது.**

**வாக்கு மனம் மற்றும் உடலளவில் அமைதி தவழட்டும்**

**ஆரம்பத்தில் பிரார்த்தனையில் 'காப்பாற்றட்டும்' என்று வேண்டிய சீடன் இங்கு 'காத்தது' என்று கூறுவதாக அமைந்துள்ளது கவனிக்கத்தக்கது. வேத மரபில் அனுபவம் வெளியிடப்பட்டால் அந்தப் பகுதியின் முடிவுரையாக அது கொள்ளப்படும். இதனால் இந்தப் பகுதி நிறைவுற்றதையே இது குறிக்கிறது.**

**இவ்வாறு, சீ க்ஷா வல்லீ என்ற கல்வி பற்றி படர்ந்த சிந்தனைகள் பகுதி நிறைவு பெறுகிறது.**

**सह नो भवतु सह नौ भुनक्तु सह वीर्यं करवावहै तेजस्वीनावतीदमस्तु माविद्विषावहै**

**ॐ शान्तिः शान्तिः शान्तिः**

# आनन्त वल्लि

## ஆனந்த வல்லீ

**தைத்திரிய உபநிஷத்தின் இரண்டாவது பகுதியான 'ஆனந்த வல்லீ', ஆனந்தம் என்பதைப்பற்றி நுட்பமாக ஆராய்கிறது. பிரம்மானந்தம் என்ற பேரானந்தத்தை அளவிடுகிறது. மேலும், இந்த ஆராய்ச்சிப் பாதையில், பிரபஞ்சத்தின் 'மனிதன்' எப்படி தோன்றினான்? அவனுக்கும் இயற்கைச் சக்திகளான பஞ்ச பூதங்களுக்கும் என்ன தொடர்பு? தன்னியல்பான ஆனந்தத்தை ஏன் மனிதனால் அனுபவிக்க முடியவில்லை? போன்ற பல கேள்விகளுக்கு நுட்பமாக பதிலைத் தேடுகிறது இந்த பகுதி.**

**முந்தைய அத்தியாயத்தில் ஆராய்ந்தது 'ஆரம்பக் கல்வி' என்று வைத்துக்கொண்டால் இந்தப் பகுதி 'மேல் நிலைக்கல்வி'.**

**सह नो भवतु सह नौ भुनक्तु सह वीर्यं करवावहै तेजस्वीनावतीदमस्तु माविद्विषावहै**

**ॐ शान्तिः शान्तिः शान्तिः**

**ஓம் ஸஹ நாவவது | ஸஹ நௌ புனக்து| ஸஹ வீர்யம் கரவாவஹை|**

**தேஜஸ்வி நாவதீதமஸ்து| மா வித்விஷாவஹை||**

**ஓம் என்ற பிரணவ மந்திரத்துடன் தொடங்குவது மரபு.**

**ஸஹ நௌ – நம் இருவரையும்: அவது-காப்பாற்றட்டும்: ஸஹநௌ – நம் இருவரையும்: புனக்து – ஊக்குவிக்கட்டும்: ஸஹ - நம்: வீர்யம் - சக்தி: கர வாவ ஹ - உறுதியாக செயல் படட்டும். தேஜஸ்வி நௌ – நம் இருவரின் (அறிவு) ஒளி: அதீத – பெருகி: அஸ்து – நிலைக்கட்டும்: மா – நாம்: வித்விஷாவ ஹ - வெறுப்படையாதிருப்போமாக.**

**ஓம் என்ற அந்த ஆதார ஒலி நம் இருவரையும் காக்கட்டும், ஊக்குவிக்கட்டும். நம் இருவரின் சக்தி உறுதியாக செயல்படட்டும். நம் அறிவு ஒளி பெருகி நிலைக்கட்டும். நாம் (நம் சாதனைப் பாதையில்) வெறுப்படையாதிருப்போமாக.**

**(குருவும் சீடனும் சேர்ந்து இவ்வாறு வேண்டுகிறார்கள்)**

**ॐ ब्रहमविदाप्नोति परम्   तदेषऽप्युक्ता सत्यं ज्ञानमनंतम् ब्रहम**

**यो वेद निहितं गुहायां परमे वयामन्  सोऽश्नुते सर्वान् कामान्त्सह ब्राहमणा विप्रश्र्चितेति**

**ஓம் பிரஹ்மவிதாப்னோதி பரம் | ததேஷப்யுக்தா|**
**ஸத்யம் ஞானமனந்தம் ப்ரஹ்ம|**
**யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமன் |**
**ஸோऽச்னுதே ஸர்வான் காமான் ஸஹ |**
**ப்ரஹ்மணா விபச்சிதேதி||**

**ஓம் -ஓங்காரம்: ப்ரஹ்ம வித் - இறைவனை அறிந்தவன்: ஆப்னோதி – அடைகிறான்: பரம் - மேலான நிலை: தத் ஏஷ - அதைப்பற்றி: அப்யுக்தா - கூறப்படுகிறது: ஸத்யம் - பேருண்மை: ஞானம் - அறிவுத் தெளிவு: அனந்தம் - நிறைந்திருத்தல்: ப்ரஹ்ம - இறைத்தன்மை: ய உ – யார் தான்: வேத – அறிகிறானோ: நிஹிதம் - இருப்பது: குஹாயாம் - இதயக்குகையில்: பரமே – மேலானதான: வ்யோமன் - வெளி: ஸ உ – அவன்: அச்னுதே – அடைகிறான்: ஸர்வான் - எல்லா: காமான் ஸஹ - ஆசைகளுடனும்: ப்ரஹ்மணா - இறைவனை: விபச்சித – எல்லாவற்றிலும்: இதி - இவ்வாறு.**

**ஓங்காரத்தை இறைவனாக அறிந்தவன் மேலான நிலையை அடைகிறான். இதைப்பற்றி (இவ்வாறு) கூறப்படுகிறது. பேருண்மை,**

**அறிவுத்தெளிவு, நிறைந்திருத்தல் (ஆகிய இத்தன்மையராக) இறைவனை யார் ஒருவன் தன் இதயக் குகையில் உள்ள மேலான வெளியில் இருப்பவராக அறிகிறானோ, அவன் தன் எல்லா ஆசைகளும் நிறைவேறப்பெற்று, எல்லா இடங்களிலும் நிறைந்தவராக இறைவனைக் காண்கிறான்.**

**ஓங்காரத்தை இறைவனாக அறிபவன் மேலான நிலையை அடைகிறான், சத் சித் ஆனந்தம் என்றபடி, இறைவனை பேருண்மை வடிவினராகவும், அறிவுத்தெளிவு பெற்றவராகவும், எங்கும் நிறைந்தவராகவும் உணர்ந்து, அவர் தன் இதயக்குகையில் உள்ள வெளியில் உறைந்திருப்பதை உணர்பவன், தன் எல்லா ஆசைகளும் நிறைவேறப்பெற்று எல்லா இடங்களிலும் நிறைந்தவராக இறைவனைக் காண்கிறான்.**

**எல்லா ஆசைகளும் நிறைவேறப்பெறுகிறான் என்பது அவனது ஆசைகள் நிறைவேறியதான ஒரு நிறைவை அவன் பெறுகிறான் என்பதாகும்.**

**இந்த சூக்தம் இறைநிலை அடைந்தவன் பெறக்கூடிய பலன்களைப்பற்றிச் சொல்வதன் மூலம் மானவனுக்கு ஊக்கத்தைத் தருகிறது.**

**तसमाद्वा एतस्मदात्मन आकाशः संभूतः  आकाशद्वायुः वायोरग्निः अग्नेरापः**
**अदभयः पृथिवी पृथिव्या ओषधयः   ओषधीभ्योन्न्म् अन्नात्पुरूषः**

**தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மன் ஆகாஷஸ்ஸம்பூத: | ஆகாஷாத் வாயு: |**
**வாயோரக்னி: |அக்னோராப: | அதப்ய ப்ருத்வீ | பிருதிவ்யா ஓஷதய: |**
**ஓஷதீப்யோSன்னம் | அன்னாத் புருஷ: ||**

**தஸ்மாத் - அதனிடமிருந்து: ஏதஸ்மாத் - அதனிடமிருந்தே: ஆத்மன் - ஆத்மா: ஆகாஷ- வெளி: ஸம்பூத – தோன்றியது: ஆகாஷாத் - வெளியிலிருந்து: வாயு-காற்று: வாயோ – காற்றலிருந்து: அக்னி – நெருப்பு: அக்னே – நெருப்பிலிருந்து: ஆப – நீர்: அத அப்ய – பிறகு நீரிலிருந்து: ப்ருத்வீ – நிலம்: பிருதிவ்யா – நிலத்திலிருந்து: ஓஷதய –**

**தாவரங்கள்: ஓஷதீப்ய – தாவரங்களிலிருந்து: அன்னம் -உணவு: அன்னாத் - உணவினால்: புருஷ- மனிதன்.**

**அதனிடமிருந்து – ஆத்மாவான அதனிடமிருந்தே , வெளி உருவானது. வெளியிலிருந்து காற்று, காற்றிலிருந்து நெருப்பு, நெருப்பிலிருந்து நீர், நீரிலிருந்து பூமி, பூமியிலிருந்து தாவரங்கள், தாவரங்களிலிருந்து உணவு, உணவினால் மனிதன்.**

**பிரபஞ்சத் தோற்றத்தை – படைப்பின் வரிசையை - இங்கே சொல்லவேண்டிய அவசியமென்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த சூக்தம் முக்கியமான சில உன்மைகளை வெளிப்படுத்துகிறது.**

**படைப்பின் வரிசை: மனிதன் என்பவன் ஏதோ இறைவனின் பிரத்யேகப் படைப்பு அல்ல.**

**படைப்பின் வரிசையில் அவனும் ஒன்றே.**

**பஞ்ச பூதத் தொடர்பு: இயற்கை சக்திகளான நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் என்ற ஐந்து**

**மூல சக்திகளின் கலவையே மனிதன். இயற்கை சீர்குலைந்தால் மனிதனும்**

**சீர்குலைவான். மனிதத்தன்மை சீர்குலைந்தால் இயற்கை சீற்றமடையும்**

**உணவே மருந்து: தாவரங்களைக் குறிக்க 'ஓஷதீய' - மூலிகைகள் - என்ற சொல்**

**பயன்படுத்தப்பட்டிருப்பதால் உணவே மருந்து என்பது குறிப்பால் உணர்த்தப்படுகிறது.**

**உடலே ஆதாரம். உணவிலிருந்து வந்தவனே மனிதன் என்பதன் மூலம் 'உணவினால் பலம்**

**பெற்ற உடலே ஆத்ம சாதனைகளுக்கு ஆதாரம்' என்பது நுட்பமாக உணரத்தக்கது.**

**'உடலார் அழியின் உயிரார் அழிவர்' என்கிறார் திருமூலர் எனும் சித்தர்.**

**மனிதன் ஆனந்தமயமானவன்: இறைவன் அல்லது ஆத்மாவில் தொடங்கிப் படிப்படியாக வந்து**

**கடைசியில் வருபவன் மனிதன். இதனால் மனிதன் என்பவன் இறைவனின் அல்லது**

**இறைத்தன்மையின் ஒரு பகுதியே என்பது உணர்த்தப்படுகிறது. அப்படியானால்**

**இறைத்தன்மையான 'ஆனந்தம்' மனிதனின் இயல்பே அல்லவா?**

**எல்லாம் சரிதான். மனிதன் ஆனந்தமயமானவன் என்கிறது இந்த சூக்தம். வாழ்க்கை ஆனந்தமயமானது என்கின்றனர் ஞானியர். ஆனால், நிதர்சனம் அப்படி இல்லையே? துக்கமும் சோர்வும் ஏமாற்றமும் கொடுமையும் அல்லவா மனிதனின் வாழ்க்கையாக இருக்கிறது?**

**இந்த நிலைக்கு என்ன காரனம் என்பதை தொடரும் சூக்தங்கள் ஆராய்கின்றன. இந்தக் கேள்விகள், மனிதன் தோன்றிய காலம் தொட்டே சிந்தனையாளர்களின் களமாக இருப்பதுதான். ஆழ்ந்து ஆராய்ந்து, கிடைத்த விடைகளை நம்மோடு பகிர்ந்து கொள்கின்றன உபநிஷத்துக்கள். தொடரும் சூக்தங்கள், ஒரு அற்புதமான உண்மையைத் தெளிவாக எடுத்துச் சொல்கிறது. இதனை ஆழமாக புரிந்து கொள்ள முயலுங்கள். இந்த சூக்தங்கள், நம் உடலைச் சுற்றியுள்ள ஐந்து உறைகளைப் பற்றி பேசுகின்றன. இந்த உறைகள் இங்கே உடல் - ஆன்மா – என்று குறிப்பிடப்பட்டாலும் உன்மையில் இவை உறைகளாகவே இருக்கின்றன. இவற்றை சில இடங்களில் 'கோசங்கள்' என்றே வேதம் குறிப்பிடுகிறது. இவற்றைப் பற்றி இங்கே சொல்வது வெறும் அறிவு விளக்கம் மட்டுமல்ல. இந்த உறைகள் ஒவ்வொன்றும் தன்னளவில் நிறைவு பெற்று தனித்தனியே இருப்பவை. இவை இதே போல் தனித்தனியாக ஒரு மனிதனிடம் இருக்குமானால் அவனே ஞானி. இந்த உறைகளே நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கும் நம் கற்பனைகளுக்கும் காரணம். இவை தனித்தனியே இருக்குமானால், நம் உணர்ச்சிகளை நாம் விருப்பத்திற்க்கேற்ப கையாள முடியும். ஆனால், சாதாரண மனிதர்களிடம் இவை ஒன்றோடொன்று பின்னிப் பினைந்துக் காணப்படுகின்றன. இதனால் அவன் இன்பத்தை அனுபவிக்கும்போதே துக்கத்திற்குத் தாவுகிறான். அறிவு பூர்வமாக சிந்திக்க வேண்டிய நேரத்தில் உணர்ச்சிகளின் வசப்படுகிறான். மொத்தத்தில், எதிலும் தெளிவில்லாமல் நீடித்த துக்கத்தில் ஆழ்கிறான்.**

வாழும் காலத்தில் மட்டுமல்லாமல், இந்த உறைகள் மரணத்திலும் மனிதனை வேதனைப்படுத்துகின்றன. இவை பின்னிப் பினைந்திருப்பதால், உயிர் பிரியும் நேரத்தில், ஒவ்வொரு உறையிலும் உள்ள சிக்கல்களிலிருந்து மீண்டு உடலை விட்டு உயிர் வெளியேறத் துடிக்கிறது. இதுவே மரண வேதனை எனப்படுகிறது என்று சான்றோர்கள் சொல்கிறார்கள். இந்த உறைகள், சிக்கல்களின்றி தெளிவாக இருக்கும் ஞானியரும் யோகியரும் மரண வேதனையை அனுபவிப்பதில்லை. அவர்களது உயிர், உடலிலிருந்து வெளியேறுவதே தெரியாமல் பிரிகிறது.

இதே உண்மையை 'சித் - சக்தி' (உணர்வு மற்றும் ஆற்றல்) என்ற முறையில் தந்திர சாஸ்திரமும் "நினைவு, கனவு, தூக்கம், அறிதுயில்" என்ற பகுப்பில் மாண்டுக்ய உபநிஷத்தும் விளக்குகின்றன.

இந்த உறைகளை சிக்கலிலில்லாமல் வைத்துக் கொள்ள வேண்டுமானால், அவற்றின் அமைப்பு பற்றிய தெளிவு வேண்டுமல்லவா? அதைத்தான் இந்த சூக்தங்கள் கொடுக்கின்றன.

स वा एष पुरूषोऽन्त्ररसमयः तस्येदमेव शिरः अयं दक्षिणः पक्षः
अयमुत्तरः पक्षः अयं आत्मा इदं पुच्छं प्रतिष्ठा  तदपयेष श्लोको भवति

ஸ வா ஏஷ புருஷோ ऽன்னரஸமய | தஸ்யே தமேவ சிர: |
அயம் தக்ஷிண பக்ஷ : | அயம் உத்தர பக்ஷ : | அயமாத்மா |
இதம் புச்சம் பிரதிஷ்ட்டா | ததப்யேஷ ஸ்லோகோ பவதி. ||

ஸ – அவன்: வா – நிச்சயமாக: ஏஷ புருஷ உ - இந்த உடல்: அன்ன ரஸ மய – உணவினால் ஆனது: தஸ்ய – அவனது: தமேவ – அதுவே: சிர – தலை: அயம் - அதுவே: தக்ஷிண பக்ஷ  - வலது பக்கம்: அயம் - அதுவே: உத்தர பக்ஷ  - இடது பக்கம்: அயமாத்மா: உடலும் அதுவே: இதம் - இங்கே: புச்சம் - கீழ்ப்பகுதி: பிரதிஷ்ட்டா – ஆதாரம்: தத் அபி - இதைப்பற்றி மேலும்: எஷ - இந்த: ஸ்லோகோ - ஸ்லோகமும்: பவதி – உள்ளது.

மனிதனின் இந்த உடல் நிச்சயமாக உணவினால் ஆனது. அந்த உருவத்தின் தலையும் அதுவே: இடப்பக்கமும் வலப்பக்கமும் உணவின்

**சக்தியே: முழு உடலும் அதுவே: ஆதாரமான கீழ்ப்பகுதியும் அதுவே. இதைப் பற்றி மேலும் பின்வரும் ஸ்லோகமும் உள்ளது.**

**இது நாம் காணக்கூடிய பருவுடல் பற்றியது. இந்த தூல உடல் என்பது உணவின் சக்தியாலேயே நிரம்பியுள்ளது என்கிறது இந்த சூக்தம். இதன் விரிவான விளக்கத்தை அடுத்த ஸ்லோகம் கொடுக்கிறது.**

**अन्नाद्वै प्रजाः प्रजायन्ते याः काश्च पृथिवी श्रिताः अथो अन्नेनैव जीवन्ति अथैन्नदपि यनत्यन्ततः अन्न हि भूतानां ज्येष्ठम् तस्मात् सर्वौषध्मुच्यते सर्व वै तेऽन्नमाप्नुवन्ति ये ऽन्न ब्रहमोपासते अन्न हि भुतानां ज्येष्ठम् तसमात सर्वषधमुच्यते अन्नाद भूतानि जयन्ते जातान्यन्नेन वर्धन्ते अदयतेऽत्ति च भूतानि तसमादन्नं तदुश्यतेति**

**அன்னாத்வை ப்ரஜா ப்ரஜாயந்தே | யா: காச்ச ப்ருத்வீம் ச்ரிதா |**
**அதோ அன்னேனைவ ஜீவந்தி | அதைனதபியந்த்யந்தத: |**
**அன்னக்ம் ஹி பூதானாம் ஜ்யேஷ்ட்டம் | தஸ்மாத்**
**ஸர்வௌஷதமுச்யதே | ஸர்வம் வை தேऽன்னமாப்னுவந்தி |**
**யேऽன்னம் ப்ரஹ்மோபாஸதே | அன்னக்ம் ஹி பூதானாம் ஜ்யேஷ்ட்டம் |**
**தஸ்மாத் ஸர்வௌஷதமுச்யதே | அன்னாத் பூதானி ஜாயந்தே |**
**ஜாதான்யன்னேன வர்தந்தே | அத்யதேऽத்தி ச பூதானி**
**தஸ்மாதன்னம் ததுச்யத இதி**

**அன்னாத் வை – நிச்சயமாக உணவினால்: ப்ரஜா – மக்கள்: ப்ரஜாயந்தே-பிறக்கிறார்கள்: யா: -யாரெல்லாம்: கா ச – எவையெல்லாம்: ப்ருத்வீம் - உலகில்: ச்ரிதா – வாழ்கின்றனவோ: அத உ – மேலும்: அன்னேன ஏவ – உணவினாலேயே: ஜீவந்தி – வாழ்கின்றன: அத- மேலும்: ஏனத் - அதிலேயே: அந்த்ய – கடைசியில்: அபயந்தி – சேர்கின்றன. அன்னம் ஹி – உணவே: பூதானி – உயிர்களின்: ஜ்யேஷ்ட்டம் - ஆரம்பம்: தஸ்மாத் - அதனால்: ஸர்வ ஔஷதம் - எல்லா மருந்தும்: உச்யதே – சொல்லப்பட்டது: ஸர்வம் வை – முழுவதும் நிச்சயமாக: தே – அவர்கள்: அன்னம் - உணவு: ஆப்னுவந்தி – பெறுகின்றனர்: யே – யார்: அன்னம் - உணவு: ப்ரஹ்ம - இறைவன்: உபாஸதே – நினைக்கிறவன்: அன்னம் ஹி – உணவே: பூதானி –**

**உயிர்களின்: ஜ்யேஷ்ட்டம் - ஆரம்பம்: தஸ்மாத் - அதனால்: ஸர்வ ஔஷதம் - எல்லா மருந்தும்: உச்யதே – சொல்லப்பட்டது: அன்னாத் - உணவினால்: பூதானி – உயிர்கள்: ஜாயந்தே – தோன்றுகின்றன: ஜாதானி – தோன்றியவை: அன்னேன - உணவினால்: வர்தந்தே – வளர்கின்றன: அத்யதே – உண்ணபடுவது: அத்தி ச – உண்பதும் கூட: பூதானி – உயிர்கள்: தஸ்மாத்- அதனால்: அன்னம் - அன்னம்: தத் - அது: உச்யத – சொல்லப்பட்டது: இதி - இவ்வாறு.**

**நிச்சயமாக உணவினாலேயே மக்கள் பிறக்கிறார்கள்: யாரெல்லாம், எவையெல்லாம் உலகில் வாழ்கின்றனவோ, (அவை யாவும்) உணவினாலேயே வாழ்கின்றன. மேலும், இறுதியில் அதிலேயே சேர்கின்றன. உணவே உயிர்களின் ஆரம்பம். அதனால் அது முழுமையான மருந்து என்று சொல்லப்பட்டது. யார் உணவை தெய்வமாக போற்றுகின்றனரோ, அவர்கள் முழுமையாக உணவை பெறுகின்றனர். உணவே உயிர்களின் ஆரம்பம். அதனால் அது முழுமையான மருந்து என்று சொல்லப்பட்டது. உணவினாலேயே உயிர்கள் தோன்றுகின்றன: தோன்றியவை வளர்கின்றன. உண்ணப்படும் உணவே உயிர்களை உண்பதும் ஆகிறது. இதனால் அது 'அன்னம்' என்று சொல்லப்பட்டது.**

**இறுதியில் உணவிலேயே சேர்தல். - இந்த பருவுடல் உணவிலிருந்து பெறப்படும் சக்தியால் வளர்கிறது. ஒரு காலக்கட்டத்தில், உணவிலிருந்து சக்தியை எடுக்க முடியாமல், அந்த உணவே அதற்கு சுமையாக மாறுகிறது. அதனாலேயே வயோதிகமும் மரணமும் வருகின்றன. இதைத்தான் 'கடைசியில் உணவிலேயே உயிர்கள் சேர்கின்றன' என்று இந்த ஸ்லோகம் குறிப்பிடுகிறது.**
**உணவே மருந்து – நோய் என்பது சக்தி சீர்குலைவு. அந்த சக்தியைத் தரும் உணவே மருந்து. இவ்வாறு 'உணவே மருந்து' என்று வாழ மறந்ததால் தான் இன்று 'மருந்தே உணவு' என்று வாழ நேர்கிறது.**
**உணவை இறைவனாக எண்ணுதல். - இறைவன் மட்டுமே சக்திமயமானவன். உணவின் சக்தியும் இறைவனின் சக்தியே. அதனால் உணவை 'சக்தி வழங்கும் இறைவன்' என்று போற்றவேண்டும். இந்த பருவுடல் நீண்ட நாள் வாழ உணவே காரணம். எனவே அன்னத்தை**

அளவோடு ஏற்கவேண்டும். அன்னத்தை மதிக்க வேண்டும். அன்னத்தை ஒருநாளும் இகழக்கூடாது.

உண்பதும் உண்ணப்படுவதும்.- உணவு உயிர்களால் உண்ணப்படுகிறது. உணவே அந்த உயிர்களின் உடலை உண்கிறது. இந்த உண்ணுதலால் அது 'அன்னம்' என்று அழைக்கப்படுகிறது. ('அன்னம்' என்ற வடமொழிச் சொல்லின் ஆதாரம் 'அத்'. அத் என்றால் உண்ணுதல். )

तस्माद्वा एतस्मादन्नरसमयात् अनयोऽन्तर आत्मा प्राणमयः
तेनैष पूर्णः स वा एष पुरूषविध एव तस्य पुरूषविधताम् अन्वयं पुरूषविधः
तस्य प्राण एव श्रिः व्यानो दक्षिणः पक्षः अपान उत्तरः पक्षः आकाश आत्मा
पृथिवी पुच्छं प्रतिष्ठा तदप्येष श्लोको भवति

தஸ்மாத்வா ஏதஸ்மாதன்ன ரஸமயாத் | அன்யோऽந்தர ஆத்மா
ப்ராணமய: | தேனைஷ பூர்ண: | ஸ வா ஏஷ புருஷவித | ஏவ தஸ்ய
புருஷவிததாம் | அன்வயம் புருஷவித: | தஸ்ய ப்ராண ஏவ சிர: |
வ்யானோ தக்ஷிண பக்ஷ : | அபான உத்தர பக்ஷ : | ஆகாஷ ஆத்மா |
ப்ருத்வீ புச்சம் ப்ரதிஷ்ட்டா | ததப்யேஷ ஸ்லோகோ பவதி

தஸ்மாத் - அதனிலிருந்து: ஏதஸ்மாத் - நிச்சயமாக அதனிலிருந்து: அன்ன ரஸ மயாத் - உணவினால் நிறைந்த: அன்யோ – வேறான: அந்தர – உள்ளே: ஆத்மா – உடல்: ப்ராணமய: - ப்ராணன் அல்லது வாயுக்களால் ஆனது: தேன ஏஷ - அதனாலேயே: பூர்ண- நிறைக்கப்பட்டுள்ளது: ஸ – அது: வா – நிச்சயம்: புருஷவித – மனித உருவம்: ஏவ – போன்றது: தஸ்ய – அது: புருஷ வித தாம் - மனிதனின் உருவத்தை உடையது: அனு – அதுபோல்: அவயம் - அங்கங்கள்: புருஷவித: மனித உருவம்: தஸ்ய – அதற்கு: ப்ராண – ப்ராணன்: சிர ஏவ – தலையைப் போன்றது: வ்யானோ – வ்யானன் என்ற வாயு: தக்ஷிண பக்ஷ - வலது பக்கம்: அபான – அபானன் எனும் வாயு: உத்தர பக்ஷ : இடது பக்கம்: ஆகாஷ - வெளி: ஆத்மா – உடல்: ப்ருத்வீ – நிலப்பகுதி அல்லது திடத்தன்மை: புச்சம் -

**கீழே: ப்ரதிஷ்ட்டா – ஆதாரம்: தத் அபி - இதைப்பற்றி மேலும்: எஷ - இந்த: ஸ்லோகோ - ஸ்லோகமும்: பவதி – உள்ளது.**

**உணவினால் நிறைந்த (பருவுடல்) அதனிடமிருந்து, நிச்சயம் அதிலிருந்து வேறானதாக. உள்ளே வாயுக்களால் ஆன உடல் உள்ளது. அந்த உடல் வாயுக்களால் நிறைந்துள்ளது. நிச்சயம் அது மனித (பரு உடலின்) உருவத்தைக் கொண்டுள்ளது. அதன் உருவம் மனித உருவத்தை ஒத்தது. அது போல் அங்கங்கள். ப்ராண வாயு அதற்கு தலை போன்றது. வ்யானன் என்ற வாயு இடது பக்கம்: அபான வாயு அதன் வலது பக்கம். வெளி அதன் உடல்: திடத்தன்மை கீழே இதற்கு ஆதாரம். இதைப்பற்றி இந்த ஸ்லோகமும் உள்ளது.**

**முந்தைய ஸ்லோகம் குறிப்பிட்ட 'உணவினால் ஆன உடல்' பருவுடல் ஆகும். அதனை நாம் கண்களால் பார்க்க முடியும். ஆனால் இந்த ஸ்லோகம் குறிப்பிடும் உடல் காண முடியாதது. அதனால் இதனை பருவுடலிலிருந்து வேறுபட்டதாக குறிப்பிடுகிறது இந்த சூக்தம். இது வாயுக்களால் ஆனது. இன்றைய விஞ்ஞானம் 'ஒளியுடல்' 'ஆரா' என்று குறிப்பிடுவது இதனைத்தான். ப்ராண வாயு உயிர் வாழ்விற்கு ஆதாரம் ஆனதால் அது இங்கே தலையாகக் காட்டப்பட்டது. வ்யானன் என்ற வாயுவும், அபான வாயுவும் பக்கங்கள். இதன் உடல் பகுதி வெளி. வெறும் வாயுக்கள் ஒரு உருவமாக நிற்க முடியாது என்பதால் 'திடத்தன்மை' இதன் ஆதாரமாகக் குறிப்பிடப்படுகிறது.**

**प्राणं देवा अनु प्राणन्ति  मनुष्याः पशवश्च ये प्राणो हि भूतानमायुः तस्मात् सर्वायुषमुच्यते सर्वमेव त आयुर्यन्ति ये प्राणां ब्रहमोपासते प्राणो हि भूतानमायुः तस्मात् सर्वायुषमुच्यत इति तस्यैष एव शारीर आतमा  यः पूर्वस्य**

**ப்ராணம் தேவா அனுப்ராணந்தி | மனுஷ்யா பசவச்ச| யே
ப்ராணோ ஹி பூதானாமாயு: | தஸ்மாத் ஸர்வாயுஷமுச்யதே |
ஸர்வமேவ த ஆயுர்யந்தி: | யே ப்ராணம் ப்ரஹ்மோபாஸதே |
ப்ராணோ ஹி பூதானாமாயு: | தஸ்மாத் ஸர்வாயுஷமுச்யத இதி|
தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா | ய: பூர்வஸ்ய ||**

ப்ராணம் - ப்ராணன்: தேவா – அங்கங்கள்: அனுப்பராணந்தி – தொடர்கின்றன: மனுஷ்யா – மனிதர்கள்: பசவச்ச – விலங்குகளும்: யே - இந்த: ப்ராண உ – வாயுவே: ஹி – நிச்சயம்: பூதானாம் - உயிர்களுக்கு: ஆயு: - ஆயுள்: தஸ்மாத் - அதனால்: ஸர்வா – யாவற்றின்: ஆயுஷம் - ஆயுள்: உச்யதே – சொல்லப்பட்டது: ஸர்வம் ஏவ – முழமையான: த – அவர்கள்: ஆயுர்யந்தி – ஆயளை அடைகிறார்கள்: யே – யார்: ப்ராணம் - ப்ராணனை: ப்ரஹ்ம உபாஸதே – தெய்வமாக நினைக்கிறார்களோ: தஸ்ய ஏஷ ஏவ - இதுவே: சாரீர –உடல்: ஆத்மா-ஆதாரம்: ய – எது: பூர்வஸ்ய – முன்பு சொல்லப்பட்டது.

அங்கங்கள் ப்ராணனின் பின் செல்கின்றன. மனிதன் மட்டுமல்ல எல்லா விலங்குகளுமே. வாயுக்களே நிச்சயமாக உயிர்களுக்கு ஆயுளைத் தருவது. அதனால் (வாயுக்கள்) யாவற்றின் ஆயுள் என்று சொல்லப்பட்டது. யார் வாயுக்களை தெய்வமாகப் போற்றுகிறார்களோ அவர்கள் முழுமையான ஆயுளை அடைகிறார்கள். இந்த ப்ராண உடலே முன்பு சொல்லப்பட்ட பருவுடலுக்கு ஆதாரம்.

மூச்சுக்காற்று நின்று போனால் உயிர் வாழ்வதெப்படி? அதனால் தான் காற்று அல்லது ப்ராணனே வாழ்க்கையை நிர்ணயிக்கிறது என்று இந்த ஸ்லோகம் சொல்கிறது. இது மனிதனுக்கு மட்டுமல்ல, விலங்குகளுக்கும் பொருந்தும்.

ப்ராணன் அல்லது வாயுக்கள், எங்கும் நிறைந்ததாக, எப்பொழுதும் செயல் புரிவதாக உள்ளது. இருந்தாலும் நாம் அதன் இருப்பை உணர்வதில்லை. 'தெய்வமாகப் போற்றுவது' என்றால் அதன் இருப்பை உணர்வதும், அதனை நேர்த்தியாகக் கையாள்வதும் ஆகும். இந்தக் கலைக்கு ப்ராணாயாமம் என்று பெயர்.

வாயுக்களும் அவற்றின் இயக்கமும் இல்லையென்றால் அங்கங்கள் செயல்படாது. எனவே, இது முந்தைய ஸ்லோகம் சொன்ன பருவுடலுக்கு ஆதாரமாகக் குறிப்பிடப்பட்டது. மேலும், ப்ராணனை அங்கங்கள் பின்தொடர்கின்றன என்றதும் இதனால் தான்.

நோயின் மிக நுண்ணிய தோற்றமும் இந்த வாயு உடலில் உடனே வெளிப்பட்டுவிடும்.

மாண்டுக்ய உபநிஷதம் குறிப்பிடும் 'ஜாக்ரத்' என்ற விழிப்பு நிலையிலேயே மேற்கண்ட இரண்டு உடல்களையும் உணர முடியும்.

तस्माद्वा एतस्मात् प्राणमयात् अन्योऽन्तर आत्मा मनोमयः तेनैष पूर्णः स वा एष पुरूषविध एव तस्य पुरूषविधताम् अन्वयं पुरूषविधः तस्य यजुरेव शिरः ऋग्दक्षिणः पक्षः सामोत्तरः पक्षः आदैश आतमा अथर्वाग्ङिरसः पुच्छं प्रतिष्ठा तदप्येष श्लोको भवति

தஸ்மாத்வா ஏதஸ்மாத் ப்ராணமயாத் | அன்யோऽந்தர ஆத்மா
மனோமய: | தேனைஷ பூர்ண: | ஸ வா ஏஷ புருஷவித | ஏவ தஸ்ய
புருஷவிததாம் | அன்வயம் புருஷவித: | தஸ்ய யஜுர் ஏவ சிர: |
ரிக் தக்ஷிண பக்ஷ : | ஸாம உத்தர பக்ஷ : | ஆதேச ஆத்மா|
அதர்வாங்கிரஸம் புச்சம் ப்ரதிஷ்ட்டா | ததப்யேஷ ஸ்லோகோ பவதி

தஸ்மாத் - அதனிலிருந்து: ஏதஸ்மாத் - நிச்சயமாக அதனிலிருந்து: ப்ராணமயாத்: - ப்ராணன் அல்லது வாயுக்களால் ஆனது: அன்யோ – வேறான: அந்தர – உள்ளே: ஆத்மா – உடல்: மனோமய – மனதால் ஆனது: தேன ஏஷ - அதனாலேயே: பூர்ண- நிறைக்கப்பட்டுள்ளது: ஸ – அது: வா – நிச்சயம்: புருஷவித – மனித உருவம்: ஏவ – போன்றது: தஸ்ய – அது: புருஷ வித தாம் - மனிதனின் உருவத்தை உடையது: அனு – அதுபோல்: அவயம் - அங்கங்கள்: புருஷவித: மனித உருவம்: தஸ்ய – அதற்கு: யஜுர் - யஜுர் வேதம்: சிர ஏவ – தலையைப் போன்றது: ரிக் - ரிக்வேதம்: தக்ஷிண பக்ஷ - வலது பக்கம்: ஸாம - ஸாமவேதம்: உத்தர பக்ஷ : இடது பக்கம்: ஆதேச - இறையானை: ஆத்மா – உடல்: அதர்வங்கீரஸ – அதர்வங்கீரஸம் எனும் அதர்வ வேதம்: புச்சம் - கீழே: ப்ரதிஷ்ட்டா – ஆதாரம்: தத் அபி - இதைப்பற்றி மேலும்: எஷ - இந்த: ஸ்லோகோ - ஸ்லோகமும்: பவதி – உள்ளது.

ப்ராணமய உடலிலிருந்து வேறானதாக, அதனுள்ளே மனதால் ஆன 'மன உடல்' உள்ளது. அது மனதினாலேயே நிறைக்கபட்டது. அதன் உருவம் மனித உருவைப் போன்றதே. மனித உடலின் உருவத்திலேயே அது அமைந்துள்ளது. அந்த உடலைப்போன்றே அங்கங்கள். யஜுர்

**வேதம் தலை: ரிக்வேதம் வலது பக்கம்: ஸாம வேதம் இடது பக்கம்: இறையாணை இதன் உடல் பாகம்: அதர்வ வேதம் இதற்கு ஆதாரமாக உள்ள கீழ்ப்பகுதி. இதைப்பற்றி மேலும் ஒரு ஸ்லோகம் உள்ளது.**

**ப்ராணமய உடல் வாயுக்களால் ஆனதாக இருப்பதால் அதனை பார்க்க முடியாவிட்டாலும் உணர முடியும். ஆனால் அதிலிருந்து வேறுபட்டதாக, உணரவும் முடியாததாக இருப்பது, மன உடல். இதன் அங்கங்களாக வேதங்கள் காட்டப்பட்டுள்ளன. வேத மந்திரங்களின் நோக்கமே மனதை செம்மைப் படுத்துவது தான். எனவே வேதங்களும் இறையாணையும் இதன் அங்கங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. "மனமது செம்மையானால் மந்திரம் தேவையில்லை" என்பது ஆன்றோர் வாக்கு.**

**यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह  आनन्दं ब्रहमणो विद्वान् न बिभेति कदाचनेति तस्य्ैष एव शरीर आत्मा यः पूर्वस्य**

**யதோ வாசோ நிவர்த்தந்தே | அப்ராப்ய மனஸா ஸஹ |**
**ஆனந்தம் ப்ரஹ்மனோ வித்வான் | ந பிபேதி கதாசனேதி|**
**தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா ய: பூர்வஸ்ய**

**யதா – எங்கே: வாச – வாக்கு: நிவர்த்தந்தே – திரும்புகிறதோ: அப்ராப்ய – அடைய முடியாமல்: மனஸா ஸஹ - மனதுடன் கூட: ஆனந்தம் - ஆனந்தம்: ப்ரஹ்மனோ - இறைவன்: வித்வான் - அறிபவன்: ந பிப இதி – பயப்படுவதில்லை என்று: கதாசன இதி – ஒருபோதும்: தஸ்ய ஏஷ ஏவ - இதுவே: சாரீர –உடல்: ஆத்மா-ஆதாரம்: ய – எது: பூர்வஸ்ய – முன்பு சொல்லப்பட்டது.**

**வாக்கும் மனமும் எந்த இடத்தை அடைய முடியாமல் திரும்புகிறதோ, அந்த இறைத்தன்மையை ஆனந்தமாக உணர்பவன் ஒருபோதும் பயப்படுவதில்லை. இந்த மனவுடல் முன்பு சொல்லப்பட்ட ப்ராண உடலுக்கு ஆதாரமாக உள்ளது.**

**ஆனந்தம் என்பது மகிழ்ச்சி அல்ல. அது சமத்தன்மை. சமத்தன்மை என்பது இயக்கமற்றிருத்தல். அதனால் தான் இயக்கமான வாக்கும் மனமும் அதனை அடைய முடியவில்லை. சமத்தன்மையில் இருப்பவன் 'புன்னியம்' 'பாவம்' சம்ஸ்காரங்கள்' என்று எதைப்பற்றியும்**

ஒருபோதும் பயப்படுவதில்லை. மனதை சலனப்படுத்துவது ஆசையும் பயமும். இவை இரண்டும் சமநிலைப் பட்ட மனதில் இருப்பதில்லை.

மனதின் அசைவுகள் உடலின் பல்வேறு இரசாயன சலனங்களுக்குக் காரணமாகும். அந்த சலனங்கள், வாயுக்களின் அசைவுகளையும் வீர்யத்தையும் பாதிக்கும். எனவேதான், இந்த மனவுடல் முன்பு சொல்லப்பட்ட ப்ராண உடலுக்கு ஆதாரமாகக் குறிப்பிடப்படுகிறது.

மாண்டூக்ய உபநிஷதம் குறிப்பிடும் 'ஸ்வப்னம்' என்ற கணவு நிலையில் இந்த உடல் அறியப்படும்.

तस्माद्वा एतस्मनोमयात अन्योऽन्तर आत्मा विज्ञानमयः
तनैष पूर्णः स वा एष पुरूषविध एव तस्य पुरूषविधताम्
अन्वयं पुरूषविधः तस्य श्रद्धैव श्रिः ऋतं दक्षिणः पक्षः सत्यमुत्तरः पक्षः
योग आत्मा महः पुच्छं प्रतिष्ठा तदप्येष श्लोको भवति

தஸ்மாத்வா ஏதஸ்மாத் மனோமயாத் | அன்யோऽந்தர ஆத்மா
விஞ்ஞானமய: | தேனைஷ பூர்ண: | ஸ வா ஏஷ புருஷவித | ஏவ தஸ்ய
புருஷவிததாம் | அன்வயம் புருஷவித: தஸ்ய ஸ்ரத்தா ஏவ சிர: |
ரிதம்; தக்ஷிண பக்ஷ : | ஸத்யம் உத்தர பக்ஷ : | யோக ஆத்மா|
மஹ: புச்சம் ப்ரதிஷ்ட்டா | ததப்யேஷ ஸ்லோகோ பவதி

தஸ்மாத் - அதனிலிருந்து: ஏதஸ்மாத் - நிச்சயமாக அதனிலிருந்து: மனோமயாத் - மனதால் ஆன: அன்யோ – வேறான: அந்தர – உள்ளே: ஆத்மா – உடல்: விஞ்ஞானமய – புத்தியால் ஆனது: தேன ஏஷ - அதனாலேயே: பூர்ண- நிறைக்கப்பட்டுள்ளது: ஸ – அது: வா – நிச்சயம்: புருஷவித – மனித உருவம்: ஏவ – போன்றது: தஸ்ய – அது: புருஷ வித தாம் - மனிதனின் உருவத்தை உடையது: அனு – அதுபோல்: அவயம் - அங்கங்கள்: புருஷவித: மனித உருவம்: தஸ்ய – அதற்கு: ஸ்ரத்தா – நம்பிக்கையுடனான முயற்சி: சிர ஏவ – தலையைப் போன்றது: ரிதம் - பிரபஞ்ச ஒழுங்குமுறை: தக்ஷிண பக்ஷ - வலது பக்கம்: ஸத்யம் -

**பேருண்மை: உத்தர பக்ஷ : இடது பக்கம்: யோக - இனைப்பு: ஆத்மா – உடல்: மஹ: - பிரபஞ்ச புத்தி: புச்சம் - கீழே: ப்ரதிஷ்ட்டா – ஆதாரம்: தத் அபி - இதைப்பற்றி மேலும்: எஷ - இந்த: ஸ்லோகோ - ஸ்லோகமும்: பவதி – உள்ளது.**

**மனதால் ஆன உடலிலிருந்து வேறானதாக அதனுள்ளே ஒரு உடல் உள்ளது. அது புத்தி உடல். அது புத்தியால் நிறைக்கப்பட்டுள்ளது. அது மனித உடலின் உருவத்தையே கொண்டது. மனித உருவத்தை போன்றே அதன் அங்கங்கள். நம்பிக்கையுடனான முயற்சி இதன் தலைப்பாகம். ஒழுங்குமுறையும், ஸத்யமும் இதன் இட வல பாகங்கள். யோகம் எனும் இனைப்புப்பாலம் இதன் உடல் பகுதி. மஹ எனப்படும் பிரபஞ்ச புத்தி இதன் ஆதாரமான கீழ்ப்பகுதி. இதைப்பற்றி அடுத்து வரும் ஸ்லோகமும் உள்ளது.**

**இதுவரை நாம் பார்த்த உடல்கள் எல்லாம் பூமி சார்ந்தவை. இந்த புத்தி உடல் பிரபஞ்சம் சார்ந்தது. மனவுடலை நாம் உணராவிட்டாலும் அது எல்லா மனிதர்களிடமும் விழிப்புற்றிருக்கும். ஆனால் சாதாரணமாக இந்த புத்தி விழிப்புறுவதில்லை.**

**இந்த புத்தி உடல் உருவத்தில் மனித உடலை போன்றதே. இதற்கு தலை போன்றது நம்பிக்கையுடனான முயற்சி என்னும் ஸ்ரத்தை. ஒழுங்கு முறையும் ஸத்யமும் இதன் பக்கங்கள். உடல் மற்றும் மன சக்தியைப் பிரபஞ்ச சக்தியோடு இனைக்கும் யோகம் இதன் உடல். பிரபஞ்ச புத்தியே இந்த உடலுக்கு ஆதாரம்.**

**विज्ञानं यज्ञं तनुते कर्माणि तनुतेऽपि च विज्ञानं देवाः सर्वे**
**ब्रहम ज्येष्ठमुपासते विज्ञानं ब्रहम चेद्वेद तस्माच्चेत्र प्रमाद्यति**
**शरीरे पाप्मनो हित्वा सर्वान्कामान् समश्नुत इति तस्यैष एव शारीर आतमा यः पूर्वस्य**

**விஞ்ஞானம் யஜ்ஞம் தனுதே | கர்மாணி தனுதேऽபி |**
**விஞ்ஞானம் தேவாஸ் ஸர்வே | ப்ரஹ்ம ஜ்யேஷ்ட்டமுபாஸதே|**
**விஞ்ஞானம் பிரஹ்ம சேத்வேத | தஸ்மாச்சேன்ன ப்ரமாத்யதி |**
**சரீரே பாப்மனோ ஹித்வா | ஸர்வான் காமான் ஸமச்னுத இதி |**
**தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா | ய: பூர்வஸ்ய||**

விஞ்ஞானம் - புத்தி: யஜ்ஞம் - வேள்வி: தனுதே – செய்கிறது: கர்மானி – செயல்களையும்: தனுதே – செய்கிறது: அபி - கூட: விஞ்ஞானம் - புத்தி: தேவாஸ் ஸர்வே – எல்லா தேவர்களும்: ப்ரஹ்ம ஜ்யேஷ்ட்டம் - முழு முதற்க் கடவுள்: உபாஸதே – போற்றுகின்றனர்: விஞ்ஞானம் - புத்தி: ப்ரஹ்ம - இறைவன்: சேத் வேத – அறிந்தால்: தஸ்மாத் - அதிலிருந்து: ந ப்ரமாத்யதி சேத் ச – விலகாமலுமிருந்தால்: சரீரே – வாழும்போதே: பாப்மனோ – பாவங்களிலிருந்து: ஹித்வா – விடுபட்டு: ஸர்வான் காமான் - எல்லா ஆசைகளையும்: ஸமச்னுத இதி – அமைதியாக அனுபவிப்பான். தஸ்ய ஏஷ ஏவ - இதுவே: சாரீர –உடல்: ஆத்மா-ஆதாரம்: ய – எது: பூர்வஸ்ய – முன்பு சொல்லப்பட்டது.

புத்தியே வேள்வியை செய்கிறது. செயல்களையும் கூட செய்கிறது. புத்தியை முழு முதற்க் கடவுளாக எல்லா தேவர்களும் போற்றுகின்றனர். புத்தி இறைத்தன்மை உடையது என்பதை உணர்ந்து, அந்த புத்தியின் பாதையிலிருந்து விலகாமலிருந்தால் அவன் வாழும்போதே பாவங்களிலிருந்து விடுபட்டு, அவனது எல்லா ஆசைகளையும் அமைதியாக அனுபவிக்கின்றான். இந்த புத்தி உடலே, முன்பு சொல்லப்பட்ட மனோமய உடலுக்கு ஆதாரம்.

வேள்வி அல்லது தவம் என்றால் ஒருமைப்பட்ட சிந்தனை. சிந்தனை ஒருமுகப்பட மனம் அடங்கவேண்டும். மனதை அடக்க புத்தியால்தான் முடியும். “மனஸஸ்து பரா புத்தி” (புத்தி மனதைவிட உயர்ந்தது) என்கிறது கட உபநிஷதம். அதனால் தான் புத்தியே வேள்வியையும் பல செயல்களையும் செய்கிறது என்று இந்த சூக்தம் சொல்கிறது.

புத்தி தன்னிலிருந்து உருவாவதில்லை. அது இறைத்தன்மை கொண்டது என்ற உன்மையை உணர்ந்து, அந்த புத்தியின் வழியில் நடக்கும் ஒருவன், தன் பாவ புன்னியப் பதிவுகளிலிருந்து வாழும்போதே விடுபடுகிறான். பதிவுகளற்றத் தன்மையை – பற்றற்றத் தன்மையை அவன் அடைந்துவிடுகிறான். பற்றின்மையால் அவன் தன் ஆசைகளைக்கூட அமைதியாக அனுபவிக்கிறான்.

மனதைவிட புத்தி உயர்ந்தது. ஆகையால் புத்தி உடலே, மன உடலுக்கு ஆதாரமாகிறது.

**மாண்டுக்ய உபநிஷதம் காட்டும் 'ஸுஷ{ப்தி' என்ற தூக்க நிலையில் இந்த உடல் அனுபவமாகும்.**

**तस्माद्वा एतस्माद्विज्ञानमयात् अन्योऽन्तर आत्माऽऽनन्दमयः तेनैष पूर्णः**
**स वा एष पुरूषविध एव  तस्य पुरूषविधताम् अन्वयं पुरूषविधः  तस्य प्रियमेव शिरः  मोदो**
**दक्षिणः पक्षः प्रमोद उत्तरः पक्षः आनन्द आत्मा ब्रहम पुच्छं प्रतिष्ठा**
**तदप्येष श्लोको भवति**

**தஸ்மாத்வா ஏதஸ்மாதவிஞ்ஞானமயாத் |அன்யோऽந்தர ஆத்மா**
**ஆனந்தமய: |தேனைஷ பூர்ண: |ஸ வா ஏஷ புருஷவித |ஏவ தஸ்ய**
**புருஷவிததாம் |அன்வயம் புருஷவித: |தஸ்ய ப்ரியம் ஏவ சிர: |**
**மோதோ தக்ஷிண பக்ஷ : |ப்ரமோதோ உத்தர பக்ஷ : |ஆனந்த ஆத்மா|**
**ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்ட்டா |ததப்யேஷ ஸ்லோகோ பவதி. ||**

**தஸ்மாத் - அதனிலிருந்து: ஏதஸ்மாத் - நிச்சயமாக அதனிலிருந்து: விஞ்ஞானமயாத் - புத்தியால் ஆன: அன்யோ – வேறான: அந்தர – உள்ளே: ஆத்மா – உடல்: ஆனந்த மய- ஆனந்தத்தால் ஆனது: தேன ஏஷ - அதனாலேயே: பூர்ண- நிறைக்கப்பட்டுள்ளது: ஸ – அது: வா – நிச்சயம்: புருஷவித – மனித உருவம்: ஏவ – போன்றது: தஸ்ய – அது: புருஷ வித தாம் - மனிதனின் உருவத்தை உடையது: அனு – அதுபோல்: அவயம் - அங்கங்கள்: புருஷவித: மனித உருவம்: தஸ்ய – அதற்கு: ப்ரியம் - இனிமை: சிர ஏவ – தலையைப் போன்றது: மோத – மகிழ்ச்சி: தக்ஷிண பக்ஷ - வலது பக்கம்: ப்ரமோத – பெருமகிழ்ச்சி: உத்தர பக்ஷ : இடது பக்கம்: ஆனந்த – ஆனந்தம்: ஆத்மா – உடல்: ப்ரஹ்ம - இறைத்தன்மை: புச்சம் - கீழே: ப்ரதிஷ்ட்டா – ஆதாரம்: தத் அபி - இதைப்பற்றி மேலும்: ஏஷ - இந்த: ஸ்லோகோ - ஸ்லோகமும்: பவதி – உள்ளது.**

**புத்தி உடலிலிருந்து மாறுபட்டதாக, அதனுள்ளே ஆனந்த உடல் இருக்கிறது. அது ஆனந்தத்தால் நிறைக்கப்பட்டுள்ளது. இதுவும் மனித உடலைப் போன்ற உருவத்தையே உடையது. மனித உருவத்தைப்**

**போலவே இதற்கும் அங்கங்கள். இனிமை இதற்கு தலையை போன்றது. மகிழ்ச்சி இதன் வலது பக்கம். பெருமகிழ்ச்சி இதன் இடது பக்கம். ஆனந்தம் என்ற நடுநிலை இதற்கு உடம்பு போன்றது. இறைத்தன்மையே இந்த ஆனந்த உடலுக்கு ஆதாரம். இதைப்பற்றி மேலும் ஒரு ஸ்லோகமும் உள்ளது.**

**ஆனந்தம் என்பது இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்ட நடுநிலை. புத்தி உடல் இன்ப நாட்டம் உடையது. இதனால் புத்தி உடலிலிருந்து ஆனந்த உடல் மாறுபடுகிறது. இதுவும் மனித உடலைப் போன்ற உருவத்தையே கொண்டது.**

**இனிமை இதற்கு தலை. மகிழ்ச்சியும் பெருமகிழ்ச்சியும் இதன் இரு பக்கங்கள்.**
**நடுநிலையான ஆனந்தம் இதற்கு உடம்பு பகுதி. இறைத்தன்மையே இதற்கு ஆதாரம்.**

**असन्नेव स भवति  असद्ब्रहमेति वेद चेद्  अस्ति ब्रहमेति चेद्वेद सन्तमेनं**
**ततो विदुरिति तस्यैष एव शारीर आत्मा  यः पूर्वस्य**

**அஸன்னேவ ஸ பவதி | அஸத் ப்ரஹ்மேதி வேதசேத் | அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத |**
**சந்தமேனம் ததோ விதுரிதி | தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா | ய: பூர்வஸ்ய||**

**அஸத் ப்ரஹம் இதி- ஆத்மா இல்லை என்று: வேதசேத் - அறிந்தால்: ஸ – அவன்: அஸத் ஏவ – ஒன்றுமில்லாதவனாக: பவதி – ஆகிறான். அஸ்தி பிரஹ்ம இதி – ஆத்மா இருப்பதை: சேத்வேத – அறிபவன்: தத் - அவனை: ஸந்தம் ஏனம் - சான்றோன் என்று: விது இதி - இவ்வாறு அறிகிறார்கள். தஸ்ய ஏஷ ஏவ - இதுவே: சாரீர –உடல்: ஆத்மா-ஆதாரம்: ய – எது: பூர்வஸ்ய – முன்பு சொல்லப்பட்டது.**

**இறைத்தன்மையான ஆத்மா இல்லை என்று அறிபவன் எதுவும் இல்லாதவனாகவே ஆகிறான். இறைத்தன்மையின் இருப்பை**

**உணர்பவன் சான்றோன் என்று அறியப்படுகிறான். இந்த ஆனந்த உடலே முன்பு சொல்லப்பட்ட புத்தி உடலுக்கு ஆதாரமாக இருக்கிறது.**

**ஆத்மாவை இல்லை என்று ஒருவன் முடிவு செய்தால் அவனைப் பொருத்தவரை ஆத்மா இல்லாததாகவே ஆகிறது. எந்த ஒரு பொருளும், அதன் இருப்பும் பயன்பாடும் நமக்குத் தெரியாத வரையில். அது இருந்தாலும் நம்மைப் பொருத்தவரை அது இல்லாததாகவே இருக்கும். அதுபோலவே, ஆத்மாவின் இருப்பை ஒருவன் உணராத வரையில் அவன் ஆத்மா இல்லாதவனாகவே கருதப்படுகிறான்.**

**ஆத்மாவின் இருப்பை, இறைத்தன்மையை உணர்ந்தவனோ, அந்த இறைத்தன்மையின் வசப்பட்டு, இறைவனாகவே, எல்லாம் உடையவனாகவே ஆகிறான்.**

**अथातोऽनुप्रश्नाः उताविद्वानमुं लोकं प्रत्य**
**कश्च्चन गच्छती 3 आहो विद्वानमुं लोकं प्रेत्य कश्चित्समश्नुता 3 उ ।**

**அதாதோऽனு ப்ரச்னா: | உதா வித்வானமும் லோகம் ப்ரேத்ய |**
**கச்சன கச்சதீ | ஆஹோ வித்வானமும் லோகம் ப்ரேத்ய |**
**கச்சித் ஸமச்னுதா உ||**

**அத – எனவே: அத - இப்பொழுது: அனுப்ரச்னா – ஒரு சந்தேகம்: அவித்வான்- அறியாதவன்: அமும் லோகம் - இந்த உலகில்: ப்ரேத்ய – விடுபட்ட பிறகு: கச்சன – எதையாவது: கச்சதீ – அடைகிறானா?: வித்வான்- அறிந்தவன்: அமும் லோகம் - இந்த உலகை: ப்ரேத்ய – பிரிந்த பிறகு: கச்சித் - எதையாவது: ஸமச்னுதா உ – மேலும் அடைகிறானா? (உத மற்றும் ஆஹோ என்ற பதங்கள் சந்தேகக் குறிகளாகும்.)**

**எனவே, இப்பொழுது ஒரு சந்தேகம். ஆத்மாவை அறியாதவன் இந்த உலகை பிரிந்த பிறகு எதையாவது அடைகிறானா அல்லது ஆத்மாவை உணர்ந்தவன் இந்த உலகைவிட்டு பிரிந்த பிறகு மேலும் எதையாவது அடைகிறானா?**

ஆத்மாவை உணர்வதால், இறையனுபூதியால் என்ன பயன் என்று கேள்வி எழுப்புகிறது இந்த சூக்தம். ஆத்மாவை உணராதவன் எதுவுமில்லாதவன், ஆத்மாவை உணர்ந்தவன் எல்லாம் உடையவன் என்றது முந்தைய ஸ்லோகம். அப்படியானால், ஆத்மாவை உணராதவன் ஏதுமற்றவனாக இந்த உலகில் இருந்து, பிறகு வேறு எதையாவது அடைகிறானா? (ஏதுமில்லாதவனுக்கு எது கிடைத்தாலும் மகிழ்ச்சி தானே). மேலும், ஆத்மாவை உணர்ந்தவன் எல்லாம் உடையவன் என்றால், இந்த உலகை விட்ட பிறகு அவன் எதை அடைகிறான்? (எல்லாம் உடையவனுக்கு அடைவதற்கு என்ன இருக்கிறது)

அடுத்து வரும் ஸ்லோகங்கள் இதற்கு விடையைத் தருகின்றன.

सो ऽकामयत बहु स्यां प्रजयेयेति स तपोऽतप्यत स तपस्तप्त्वा
इदं सर्वमसृजत् यदिदं किञ्च तत्सृष्टवा तदेवानुप्राविशत्
तदनु प्रविश्य सच्च त्यच्चाभवत् निरूक्तं चानिरूक्तं च निलयनं चानिलयनं च
विज्ञानं चाविज्ञानं च सत्यं चानृतं च सत्यमभवत् यदिदं किञ्च वत्सत्यमित्याचक्षते
तदप्येष श्लोको भवति

ஸோऽகாமயத | பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி | ஸ
தபோऽதப்யத | ஸ தபஸ்தப்த்வா | இதக்ம் ஸர்வமஸ்ருஜத|
யதிதம் கிஞ்ச | தத் ஸ்ருஷ்ட்வா | ததேவானுப்ராவிசத் |
ததனுப்ரவிச்ய | ஸச்ச தயச்சா பவத் | நிருக்தம் சாநிருக்தம் ச|
நிலயனம் சாநிலயனம் ச | விஞ்ஞானம் சாவிஞ்ஞானம் ச|
ஸத்யம் சான்ருதம் ச| ஸத்யமபவத் | யதிதம் கிஞ்ச| தத்
ஸத்யமித்யாசக்ஷ தே | ததப்யேஷ ஸ்லோகோ பவதி||

ஸ – அவர்: அகாமயத – ஆசைகளற்று: பஹு ஸ்யாம் - பலவாக ஆவேனாக:

ப்ரஜாயேய இதி – பிறப்பேனாக என்று: ஸ – அவர்: தப உ – ஒன்றான சிந்தனை: அதப்யத – சிந்திக்கலானார்: ஸ – அவர்: தபஸ் - ஒருமித்த சிந்தனை: தப்த்வா – செய்த பிறகு: இதம் - இங்கே: ஸர்வம் - யாவற்றையும்: ஸ்ருஜத – பெருகச்செய்தார்;: யத் இதம் - எவை இங்கே:

**கிம் ச – உள்ளனவோ: தத் - அது: ஸ்ருஷ்ட்வா – படைக்கப்பட்ட பின்: தத் ஏவ – அவரே: அனுப்ராவிசத் - புகுந்தார்: தத்- அதனுள்: அனுப்ரவிச்ய – புகந்த பிறகு: ஸத் ச – வெளிப்பட்டவையாகவும்: தயத் ச – வெளிப்படாதவையாகவும்: பவத் - ஆனார்: நிருக்தம் - விளக்கப்பட்டவை: அநிருக்தம் - விளக்கப்படாதவை: நிலயனம் - இருப்பிடமுள்ளவை: அநிலயனம் - இருப்பிடமில்லாதவை: விஞ்ஞானம் - அறிவு: அவிஞ்ஞானம் - அறியாமை: ஸத்யம் - உண்மை: அன்ருதம் - மற்றவை: ச – மேலும்: ஸத்யம் - அடிப்படை: அபவத் - இல்லாதவை: யத் - எவை: இதம் - இங்கே: கிம் ச – உண்டோ: தத் - அவற்றின்: ஸத்யம் - அடிப்படை: இதி- என்று: ஆசக்ஷ தே – சொல்லப்படுகிறது: தத் அபி ஏஷ - இதைப்பற்றி மேலும்: ஸ்லோகோ - ஸ்லோகம்: பவதி – உள்ளது.**

**அவர் (பிரம்மம்) ஆசைகளற்று, 'பலவாக ஆவேனாக' என்று நினைத்தார். 'பிறப்பேனாக' என்ற ஒருமித்த சிந்தனையோடு இருந்தார். ஆழ்ந்த அந்த தவத்திற்குப்பின் இங்கே யாவற்றையும் (தன்னிலிருந்து) பெருகச் செய்தார். எவை இங்கே உள்ளனவோ, அவை யாவும் படைக்கப்பட்டபின் அவற்றில் புகுந்தார். புகுந்த பிறகு, வெளிப்பட்டவையாகவும், வெளிப்படாதவையாகவும் ஆனார். விளக்கப்பட்டவையும், விளக்கப்படாதவையும், இருப்பிடம் உள்ளவையும் அல்லாதவையும், அறிவும் அறியாமையும், ஸத்யமும் ஸத்யமற்றதும் எல்லாமே அடிப்படை இல்லாதவை. இங்கே எவை உள்ளனவோ, (மேலே குறிப்பிடப்பட்ட) அவற்றின் அடிப்படை அவரே என்று சொல்லப்படுகிறது. இதைப்பற்றி மேலும் ஸ்லோகம் உள்ளது.**

**பிரபஞ்சத்தின் தோற்றம் இங்கே அழகாகத் தொகுக்கப்பட்டுள்ளது. முதலில் இறைவனின் சிந்தனைத் துளிர்த்தது. சிந்தனை வலுப்பெற்று தவமாக ஆனபிறகு, இறைவன் தன்னைத் தானே பல்வேறாக பெருக்கிக்கொண்டார். பெருகியவற்றில் அடிப்படையான சக்தி இல்லாமலிருந்தது. அதனால், தானே சக்தி வடிவாக அவற்றுள் புகுந்தார். அவரின்றி இவை யாவும் சாரமற்றவை. அந்த இறைத்தன்மையே இவற்றின் அடிப்படை என்று சொல்லப்படுகிறது. மேலும் விளக்கத்தை அடுத்த ஸ்லோகத்தில் பார்க்கலாம்.**

असद्वा इदमग्र आसीत् ततो वै सदजायत तदात्मानं स्वयमकरूत
तस्मात्तत्सुकृतमुच्यत इति

**அஸத்வா இதமக்ரம் ஆஸீத் |ததோ வை ஸதஜாயத|**
**ததாத்மானக்க்ம் ஸ்வயமகுருத |தஸ்மாத் தத் ஸுக்ருதமுச்யத இதி||**

**இதம் - இங்கே: அக்ரம் - ஆரம்பத்தில்: அஸத் வா - இல்லாமையே: ஆஸீத் - இருந்தது: தத் உ – பிறகே: வை- நிச்சயமாக: ஸத – தோற்றம்: அஜாயத – உருவானது: தத் - அது: ஆத்மானம் - தன்னை: ஸ்வயம் - தானே: அகுருத – தோற்றுவித்தது: தஸ்மாத் - அதனால்: தத் - அது: ஸுக்ருதம் - தானே தோன்றியவர்: இதி – என்று: உச்யத – சொல்லப்பட்டது.**

**ஆரம்பத்தில் இங்கு எதுவுமே இல்லை. பிறகு பிரம்மம் தன்னைத் தானே பிறப்பித்துக்கொண்டது. அதனால் அது ‘தான் தோன்றி’ என்று சொல்லப்பட்டது.**

**முந்தைய ஸ்லோகத்தில் சொல்லப்பட்டவையே உறுதிபடுத்தலுக்காக மீண்டும் சொல்லப்பட்டிருக்கிறது. பிரம்மம் தன்னைத்தானே தோற்றுவித்துக் கொண்டது என்பதே செய்தி.**

यद्वै तत् सुकृतम्  रसो वै सः रस ह्येवायं लब्ध्वाऽऽनन्दी भवति
को ह्येवान्यातकः प्राण्यात् यदेष आकाश आनन्दो न स्यात्
एष ह्येवऽऽनन्दयाति

**யத்வை தத் ஸுக்ருதம் |ரஸோ வை ஸ: |ரஸக்க்ம் ஹ்யேவாயம் லப்த்வாऽऽனந்தீ பவதி |கோ ஹ்யேவான்யாத் க: ப்ராண்யாத் |யதேஷ ஆகாச ஆனந்தோ ந ஸ்யாத் |ஏஷ ஹயேவானந்தயாதி ||**

**யத் - எது: வை –நிச்சயமாக: தத் - அது: ஸுக்ருதம் - தானே தோன்றியது: ரஸ உ – அடிப்படை சக்தி: வை – நிச்சயமாக: ஸ – அதுவே:**

**ரஸம் - அடிப்படை சக்தி: ஹ ஏவ – உறுதியாக அதனால்: அயம் - இவை: ஸப்த்வா- பெற்றதால்: ஆனந்தீ – ஆனந்தமயமாக: பவதி – ஆகியுள்ளன: க உ – மேலும் யார்: ஹ ஏவ –உறுதியாக அதனால்: அன்யாத் - இல்லாவிட்டால்: க: - எவ்வாறு: ப்ராண்யாத் - உயிர்வாழ்க்கை: யத்-எது: ஏஷ -இதனில்: ஆகாச – வெளியில்: ஆனந்தோ – ஆனந்தத்தை: ந ஸ்யாத் - இல்லாவிட்டால்: ஏஷ - அதுவே: ஹ ஏவ – நிச்சயமாக: ஆனந்தயாதி – ஆனந்தம் தருபவர்.**

**எது இங்கே உள்ளதோ, அது தானே தோன்றிய பிரம்மமே. அதுவே (பிரம்மமே) அடிப்படை சக்தி. அந்த ஆதார சக்தியை பெற்றதால் இவை (உலக உயிர்கள்)ஆனந்தமயமாக ஆகியுள்ளன. மேலும், (அந்த சக்தி) இல்லாவிட்டால் யார் அல்லது எது இங்கே வாழ்;க்கைத் தரும்? இவற்றின் இதய வெளியில் (பிரம்மம்) இல்லாவிட்டால் ஆனந்தம் ஏது? நிச்சயமாக பிரம்மமே ஆனந்தத்தை தருபவர்.**

**பிரம்மம் ஆசைகளற்றது என்று முந்தைய ஸ்லோகம் குறிப்பிட்டது. ஆசைகள் இல்லாததால் ஆனந்தமாக இருப்பது பிரம்மம். இங்கே உலகிலுள்ள உயிர்கள் யாவும் 'தானே தோன்றிய பிரம்மம்' என்று பார்த்தோம். இவற்றின் உள்ளே அடிப்படை சக்தியாக இருப்பது பிரம்ம சக்தியே. பிரம்ம சக்தி இல்லாவிட்டால், இந்த உயிர்களுக்கு வாழ்க்கையும் இல்லை. ஆனந்தமும் இல்லை.**

**यदा हयेवैष एतस्मिन् ऽदृश्ये ऽनात्म्ये ऽनिकृते ऽनिलयने ऽभयं प्रतिष्ठां विन्तते यदा हयेवैष एतस्मिन्नुदरमन्तरं कुरूते अथ तस्य भयं भवति तत्वेव भयं विदुषोऽमन्वानस्य तदप्येष स्लोको भवति**

**யதா ஹ்யேவைஷ ஏதஸ்மின் அத்ருச்யே ऽனாத்ம்யே ऽநிருக்தே ऽநிலயனே ऽபயம் ப்ரதிஷ்ட்டாம் விந்ததே | அத ஸோ ऽபயம் கதோ பவதி | யதா ஹ்யேவைஷ ஏதஸ்மின்னுதரமந்தரம் குருதே | அத தஸ்ய பயம் பவதி | தத்வேவ பயம் விதுஷோ ऽமன்வானஸ்ய | ததப்யேஷ ஸ்லோகோ பவதி**

யதா – எப்பொழுது: ஏஷ - இவன்: ஹ ஏவ – நிச்சயமாக: ஏதஸ்மின்- பிரம்மதில்: அத்ருச்யே – காண முடியாததான: அனாத்ம்யே – உடலில்லாத: அநிலயனே – ஓரிடம் என்று இல்லாத: அபயம் - பயமற்ற: பிரதிஷ்ட்டாம் - நிலைபெறல்: விந்ததே – அடைகிறானோ: அத – பிறகு: ஸ உ – அவன் மேலும்: அபயம் - பயமற்ற நிலை: கத உ - இறுதியில்: பவதி – அடைகிறான்: யதா – எப்பொழுது: ஏஷ - அவன்: ஹ ஏவ – நிச்சயமாக: உதரம் - வயிறு: அந்தரம் - உள்ளே: குருதே – சோறு: அத – பிறகு: தஸ்ய – அவன்: பயம் - பயம்: பவதி – அடைகிறான்: தத் உ ஏவ – அதுவே: பயம் - பயம்: விதுஷோ – பொழுது போக்குபவனுக்கு: அமன்வானஸ்ய – சிந்திக்காதவனுக்கு: தத் அபி ஏஷ - இதைப் பற்றி இந்த: ஸ்லோகோ - ஸ்லோகமும்: பவதி – உள்ளது.

எப்பொழுது இந்த மனிதன், காணமுடியாத, உடலில்லாத, ஓரிடம் என்று இல்லாத, பயம் இல்லாத பிரம்மத்தில் நிலைப்பேற்றை அடைகிறானோ, அப்பொழுது இவனும் பயமற்ற நிலையை அடைகிறான். எப்பொழுது வயிற்றுப் பசிக்கு சோறு தேடுவதான உலக விஷயங்களில் ஈடுபடுகிறானோ அப்பொழுது அவனுக்கு பயம் உண்டாகிறது. சிந்திக்காதவனுக்கும், உன்மையான ஈடுபாடு இல்லாமல் பொழுது போக்குபவனுக்கும் இதுவே பயத்தின் காரணம். இது பற்றி மேலும் ஒரு ஸ்லோகமும் உள்ளது.

பயமற்றதான பிரம்மத்தில் நிலைபெறுபவன் அதே பயமற்ற நிலையை அடைகிறான். பிரம்மத்தைத் தவிர உலக விஷயங்களில் ஈடுபாடு கொள்பவன் பயத்தை அடைகிறான்.
தீவிரமான நாட்டம் இல்லாமல், பொழுது போக்குபவனும், சிந்திக்காமல் பேசித்திரிபவனும் பயத்தையே அடைகின்றனர்.

முந்தைய ஒரு ஸ்லோகத்தில் ஆசைகளற்றதாக பிரம்மம் வர்ணிக்கப்பட்டது. இங்கே அது பயமற்றதாக சொல்லப்படுகிறது. ஆசையையும் பயத்தையும் குறிப்பிடவேண்டிய அவசியத்தை, அந்த ஆழ்ந்த உண்மையை அடுத்து வரும் ஸ்லோகம் தெரிவிக்கிறது.

भीषाऽस्माद्वातः पवते भीषोदेति सूर्यः भीषाऽस्मादग्निश्चन्द्रश्च
मृत्युर्धावति पञ्चम इति

**பீஷாஸ்மாத் வாத: பவதே |பீஷோதேதி ஸுர்ய: |**
**பீஷோsஸ்மாதக்னிச்சேந்தரச்ச| ம்ருத்யுர் தாவதி பஞ்சம் இதி. ||**

**பீ – பயம்: இஷ - ஆசை: அஸ்மாத் - அதனால்: வாத: வாயுக்கள்: பவதே - இருக்கின்றன: பீ – பயம்: இஷ - ஆசை: உத இதி – உதிக்கிறது: ஸுர்யன் - சூரியன்: பீ – பயம்: இஷ - ஆசை: அஸ்மாத் - அதனால்: அக்னி – வெப்பம்: இந்த்ர - இயக்கம்: ச – மேலும்: ம்ருத்யுர் – மரணம்: தாவதி – நடைபோடுகிறது: பஞ்சம – ஐந்தாவதாக: இதி - இவ்வாறு.**

**பயம் மற்றும் ஆசையின் காரணமாகவே (மனிதனிடத்தில்) வாயுக்கள் நிலைக்கின்றன. சூரியன் அதாவது ஒளி உண்டாகிறது. உடல் வெப்பமும் இயக்கமும் உண்டாகிறது. ஐந்தாவதாக மரணமும் நடைபோடுகிறது.**

**உடலில் பிராணன் பல்வேறு வாயுக்களாக செயலாற்றுகிறது. இந்த வாயுக்களின் சீற்றத்திற்கும் மாற்றத்திற்கும் மனிதனின் ஆசையும் பயமுமே காரணம். ஆசையோ பயமோ கொள்ளும்போது, உடலில் பல்வேறு மாற்றங்கள் நடைபெறுகின்றன. பல இரசாயனங்கள் சுரக்கின்றன. இந்த மாற்றங்களே உடலின் வெப்பத்தையும், செயல்பாடுகளையும், ஒளிர்வையும் உருவாக்குகின்றன. கடைசியில் ஐந்தாவதான மரணத்திற்கும் அதுவே காரணமாகிறது.**

**நாம் எடுத்துக்கொண்ட கேள்வியை இப்பொழுது பார்க்கலாம்.**

**ஆத்மாவை உணராதவன் எதுவுமில்லாதவன், ஆத்மாவை உணர்ந்தவன் எல்லாம் உடையவன் என்றது முந்தைய ஸ்லோகம். அப்படியானால், ஆத்மாவை உணராதவன் ஏதுமற்றவனாக இந்த உலகில் இருந்து, பிறகு வேறு எதையாவது அடைகிறானா? (ஏதுமில்லாதவனுக்கு எது கிடைத்தாலும் மகிழ்ச்சி தானே). மேலும், ஆத்மாவை உணர்ந்தவன் எல்லாம் உடையவன் என்றால், இந்த உலகை விட்ட பிறகு அவன் எதை அடைகிறான்? (எல்லாம் உடையவனுக்கு அடைவதற்கு என்ன இருக்கிறது)**

ஆத்மாவை உணராதவன் ஆனந்தத்தை உணர்வதில்லை. அதற்கான வழியையும் தேடுவதில்லை. அதனால், அவன் இன்ப துன்பங்கள் கலந்த இந்த உலக வாழ்க்கையை வாழ்ந்து, பயம் மற்றும் ஆசைகளின் பிடியில் இருந்து விலகாமல், மரணத்தைத் தழுவி, இறந்த பின்னும் மீண்டும் மீண்டும் பிறக்கிறான்.

ஆத்மாவை உணர்ந்தவனோ, பயமற்றதும் ஆசைகளற்றதுமாகிய பிரம்மத்தில் நிலைபெறுவதால், வாழும்போதே ஆனந்தத்தை அடைவதோடு, உயிர் பிரிந்த பின்னும் அந்த பேரானந்தத்தில் நிலைக்கிறான். ஒன்றை நாம் நினைவில் நிறுத்த வேண்டும். 'ஆனந்தம்' என்று குறிப்பிடப்படுவது மகிழ்ச்சி அல்ல. மகிழ்ச்சியும் துக்கமும் பிரிக்க முடியாத இரட்டைகள். ஒன்றிருந்தால் மற்றொன்று இருந்தே தீரும். ஆனந்தம் என்பது சமத்தன்மை. இந்த சமத்தன்மையில் இருப்பவன் இன்பம் துன்பம் என்ற இரண்டு எல்லைகளாலும் பாதிக்கப்படுவதில்லை.

இப்பொழுது நாம் பேரானந்தம் என்று குறிப்பிடப்படும் ஆனந்தத்தின் அளவைப் பார்ப்போம்.

மனித வாழ்க்கையின் தேடல்கள் எல்லாம், செயல்பாடுகள் எல்லாம் இன்பத்தை நோக்கித்தான். உலக வாழக்கையில் நாம் சில கணங்கள் அனுபவிக்கும் அந்த இன்பங்களைக் காட்டிலும் எத்தனை மடங்கு அதிகமானது இறைத்தன்மையில் உறையும் அந்த பேரானந்தம் என்பதை இந்த சூக்தங்கள் தெளிவாகத் தருகின்றன. மானவனை பிரம்மத்தை நாடச்செய்யும் அற்புத முயற்சி இது.

सैषाऽऽनन्दस्य मीमासा भवति
युवा स्यत्साधुयुवाऽध्यायकः आशिष्ठो दृढिष्ठो बलिष्ठः
तस्येयं पृथिवी सर्वा वित्तस्य पूर्णा स्यात्
स एको मानुष आनन्दः ते ये शतं मानुषा आनन्दाः स एको मनुष्यगन्धर्वाणामानन्दः
श्रोत्रियस्य चाकामहतस्य

ஸைஷாऽऽனந்தஸ்ய மீமாம்கம்ஸோ பவதி | யுவா ஸ்யாத் ஸாது யுவாऽத்யாயக | ஆசிஷ்ட்டோ த்ருடிஷ்ட்டோ பலிஷ்ட்ட: |

**தஸ்யேயம் ப்ருத்வீ ஸர்வா வித்தஸ்ய பூர்ணா ஸ்யாத் | ஸ ஏகோ மானுஷ ஆனந்த: | தே யே சதம் மானுஷா ஆனந்தா: | ஸ ஏகோ மனுஷ்ய கந்தர்வாணாமானந்த: | ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய ||**

**ஸ - இது: ஏஷா – மனிதனின்: ஆனந்தஸ்ய – ஆனந்தத்தின்: மீமாம்ஸ – விசாரனை: பவதி – ஆகட்டும். யுவா - இளைஞன்: ஸ்யாத் - எடுத்துக்கொள்வோம்: ஸாது – நல்லவன்: யுவா - இளைஞன்: அதயாயக – படித்தவன்: ஆசிஷ்ட்டா – சுயக் கட்டுப்பாடுள்ளவன்: த்ருடிஷ்ட்டா – மன உறுதி உள்ளவன்: பலிஷ்ட்ட – பலம் உள்ளவன்: தஸ்ய- அவனுக்கு: அயம் - இந்த ப்ருத்வீ – உலகம்: ஸர்வா- எல்லாம்: வித்தஸ்ய செல்வங்களாலும்: பூர்ணா – நிரம்பிய: ஸ்யாத் - உரியதானால்: ஸ – அது: ஏக: - ஒரு: மானுஷ ஆனந்த – மனித ஆனந்தம்: தே யே – அத்தகைய: சதம் - நூறு: மானுஷா ஆனந்தா- மனித ஆனந்தம்: ஸ – அது: ஏக – ஒரு: மனுஷ்ய கந்தர்வ ஆனந்த – மனித கந்தர்வ ஆனந்தம்: ச்ரோத்ரியஸ்ய – அறிவாளி: அகாமஹதஸ்ய – ஆசைகள் அற்றவன்.**

**இது மனிதனின் ஆனந்தத்தின் விசாரனை ஆகும். ஒரு இளைஞனை எடுத்துக் கொள்வோம். நல்லவன், இளைஞன், படித்தவன், சுயக்கட்டுப்பாடுள்ளவன், மன உறுதி வாய்ந்தவன், பலம் உள்ளவன். இத்தகைய அவனுக்கு எல்லா செல்வங்களும் நிரம்பிய இந்த பூமி முழுவதும் உரியதானால் அவனுக்குக் கிடைக்கும் ஆனந்தம் ஒரு மனித ஆனந்தம். இவ்வாறான நூறு மனித ஆனந்தத்தினை ஒத்தது ஒரு மனித கந்தர்வ ஆனந்தம்.**

**ஆசைகள் அற்றவனும் அறிவாளியுமான ஒருவன் இந்த ஆனந்தத்தை அடைகிறான்.**

ते ये शतं मनुष्यगन्धर्वाणामानन्दाः  स एको देवगन्धर्वाणामानन्दः श्रोत्रियस्य चाकामहतस्य

**தே யே சதம் மனுஷ்ய கந்தர்வாணாமானந்தா: | ஸ ஏகோ தேவ கந்தர்வாணாமானந்த: | ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய ||**

**பதவுரை முந்தைய ஸ்லோகத்தில் உள்ளதே.**

**நூறு மனுஷ்ய கந்தர்வ ஆனந்தம் ஒரு தேவ கந்தர்வ ஆனந்தம். அறிவாளியும் ஆசைகளற்றவனுமான ஒருவன் இந்த ஆனந்தத்தை அடைகிறான்.**

ते ये शतं देवगन्धर्वाणामानन्दाः स एकः पितृणां चिरलोकलोकानामानन्दः श्रोत्रियस्य चाकामहतस्य

**தே யே சதம் தேவ கந்தர்வாணாமானந்த: |ஸ ஏகோ பித்ருணாம் சிரலோக லோகானாமானந்த |ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய||**

**பித்ருணாம் - முன்னோர்கள்: சிர லோகானாம் - நீண்ட ஆயுளையுடைய**

**நூறு தேவ கந்தர்வ ஆனந்தம் நீண்ட ஆயுளை உடைய முன்னோர்களின் உலகத்தின் ஒரு ஆனந்தம். அறிவாளியும் ஆசைகளற்றவனுமான ஒருவன் இந்த ஆனந்தத்தை அடைகிறான்.**

**ते ये शतं पितृणां चिरलोकलोकानामानन्दाः स एक आजानजानां देवानामानन्दः श्रोत्रियस्य चाकामहतस्य**

**தே யே சதம் பித்ருணாம் சிரலோக லோகானாமானந்த: |ஸ ஏகோ அஜானஜானாம் தேவானாமானந்த: |ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய||**

**அஜானஜானாம் -தேவ லோகத்தில் பிறந்த: தேவானாம் - தேவர்கள்.**

**நூறு நீணட ஆயுளைக்கொண்ட முன்னோர்களின் உலக ஆனந்தம் தேவலோகத்தில் பிறந்த தேவர்களின் ஒரு ஆனந்தம். அறிவாளியும் ஆசைகளற்றவனுமான ஒருவன் இந்த ஆனந்தத்தை அடைகிறான்.**

ते ये शतं आजानजानां देवानामानन्दाः सए कः कर्मदेवानां देवानामानन्दः ये कर्मणा देवानपियन्ति श्रोत्रियस्य चाकामहतस्य

**தே யே சதம் அஜானஜானாம் தேவானாமானந்த: | ஸ ஏக கர்ம தேவானாம் தேவானந்தம்: | யே கர்மனா தேவானபியந்தி | ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய||**

**கர்ம தேவானாம்: தங்கள் செயல்களால் தேவர்களானவர்கள்: யே - இவர்கள்: கர்மணா – வினைப்பயன்கள் காரனமாக: தேவான் - தேவ நிலையை: அபியந்தி – அடைந்தவர்கள்.**

**நூறு தேவலோகத்தில் பிறந்த தேவர்களின் தேவ ஆனந்தம் வினைப்பயன்கள் காரணமாக தேவர்களின் உலகை அடைந்த தேவர்களின் ஒரு ஆனந்தம். அறிவாளியும் ஆசைகளற்றவனுமான ஒருவன் இந்த ஆனந்தத்தை அடைகிறான்.**

**தேவ லோகத்திலேயே பிறந்து வளர்ந்த தேவர்களை விட தங்கள் நல்வினைப்பயன்கள் காரணமாக தேவர்களான கர்ம தேவர்களுக்கு அங்கே கிடைக்கும் ஆனந்தம் அதிகமாகத்தானே இருக்கும்.**

**ते ये शतं कर्मदेवानां देवानामनन्दाः  स एको देवानामानन्दः श्रोत्रियस्य चाकामहतस्य**

**தே யே சதம் கர்ம தேவானாம் தேவானாமானந்த: | ஸ ஏகோ தேவானாமானந்த: | ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய||**

**நூறு கர்ம தேவ ஆனந்தம் ஒரு முக்கிய தேவ ஆனந்தம். அறிவாளியும் ஆசைகளற்றவனுமான ஒருவன் இந்த ஆனந்தத்தை அடைகிறான்.**

ते ये शतं देवानामानन्दाः सए क इन्द्रस्याऽऽनन्दः श्रोत्रियस्य चाकामहतस्य

**தே யே சதம் தேவாணாமானந்த: | ஸ ஏக இந்த்ரஸ்யானந்த | ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய||**

**நூறு முக்கிய தேவ ஆனந்தம்; ஒரு இந்திர ஆனந்தம். அறிவாளியும் ஆசைகளற்றவனுமான ஒருவன் இந்த ஆனந்தத்தை அடைகிறான்.**

**ते ये शतं इन्द्रस्याऽऽनन्दाः स एको बृहस्पतेरानन्दः श्रोत्रियस्य चाकामहतस्य**

**தே யே சதம் இந்த்ரஸ்யானந்த ।ஸ ஏக ப்ருகஸ்பதேரானந்த: । ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய॥**

**ப்ருகஸ்பதி என்பவர் தேவர்களின் குரு.**

**நூறு இந்திர ஆனந்தம்; ஒரு ப்ருகஸ்பதி ஆனந்தம். அறிவாளியும் ஆசைகளற்றவனுமான ஒருவன் இந்த ஆனந்தத்தை அடைகிறான்.**

ते ये शतं बृहस्पतेरानन्दाः स एकः प्रजपतेरानन्दः श्रोत्रियस्य चाकामहतस्य

**தே யே சதம் ப்ருகஸ்பதேரானந்த: ।ஸ ஏக ப்ரஜாபதேரானந்த: । ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய॥**

**ப்ரஜாபதி என்பவர் மனித மற்றும் அரக்கர் குலத்தின் தந்தை.**

**நூறு ப்ருகஸ்பதி ஆனந்தம்; ஒரு ப்ரஜாபதி ஆனந்தம். அறிவாளியும் ஆசைகளற்றவனுமான ஒருவன் இந்த ஆனந்தத்தை அடைகிறான்.**

ते ये शतं प्रजपतेरानन्दाः स एको ब्रहमण आनन्दः श्रोत्रियस्य चाकामहतस्य

**தே யே சதம் ப்ரஜாபதேரானந்த: ।ஸ ஏகோ ப்ராஹ்மண ஆனந்த: । ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய॥**

**நூறு ப்ரஜாபதி ஆனந்தம்; ஒரு ப்ரஹ்ம ஆனந்தம். அறிவாளியும் ஆசைகளற்றவனுமான ஒருவன் இந்த ஆனந்தத்தை அடைகிறான்.**

**இப்பொழுது இந்த அளவீட்டைப் பாருங்கள்:**

100 **மனித ஆனந்தம் - ஒரு மனித கந்தர்வ ஆனந்தம்**

100 **மனித கந்தர்வ ஆனந்தம் - ஒரு தேவ கந்தர்வ ஆனந்தம்**

100 **தேவ கந்தர்வ ஆனந்தம் - ஒரு பித்ரு லோக ஆனந்தம்**

100 **பித்ரு லோக ஆனந்தம் - ஒரு தேவலோக தேவ ஆனந்தம்**

100 **தேவலோக தேவ ஆனந்தம் - ஒரு கர்ம தேவ ஆனந்தம்.**

100 **கர்ம தேவ ஆனந்தம் - ஒரு முக்ய தேவ ஆனந்தம்**

100 **முக்ய தேவ ஆனந்தம் - ஒரு இந்திர ஆனந்தம்**

100 **இந்திர ஆனந்தம் - ஒரு பிருகஸ்பதி ஆனந்தம்**

100 **ப்ருகஸ்பதி ஆனந்தம் - ஒரு பிரஜாபதி ஆனந்தம்**

100 **ப்ரஜாபதி ஆனந்தம் - ஒரு ப்ரஹ்ம ஆனந்தம்**

स यश्चायं पुरूषे यश्चासावादित्ये स एकः सय एवंवित्
अस्मल्लोकात्प्रेत्य एतमन्नमयमातमानमुपसङ्क्रामति
एतं प्राणमयमातमानमुपसङ्क्रामति एतं मनोमयमातमानमुपसङ्क्रामति
एतं विज्ञानमयमातमानमुपसङ्क्रामति एतमनन्दमयमातमानमुपसङ्क्रामति
तदप्येष श्लोको भवति

**ஸ யச்சாயம் புருஷே | யச்சாஸாவாதித்யே | ஸ ஏக: | ஸ ய ஏவம் வித் |**

**அஸ்மாத் லோகாத் ப்ரேத்ய | ஏதம் அன்னமயமாத்மானம் உபஸங்க்ராமதி|**

**ஏதம் ப்ராணமயமாத்மானம் உபஸங்க்ராமதி | ஏதம் மனோமயமாத்மானம் உபஸங்க்ராமதி|**

**ஏதம் விஞ்ஞானமயமாத்மானம் உபஸங்க்ராமதி | ஏதம் ஆனந்தமயமாத்மானம்**

**உபஸங்க்ராமதி | ததப்யேஷ ஸ்லோகோ பவதி. ||**

**ஸ – அவர்: ய ச – யார்: அயம் - இந்த: புருஷே- மனிதனில்: ய ச – யார்: ஸ வா – நிச்சயமாக அவரே:**

**ஆதித்யே - சூரியனில்: ஸ – அவர்: ஏக: - ஒருவரே: ஸ-அவரை: ய – யார்: ஏவம் - இவ்வாறு:**

**வித் - அறிகிறானோ: அஸ்மாத் - இந்த: லோகாத் - உலகத்திலிருந்து: ப்ரேத்ய –விடுபட்டு: ஏதம் - இந்த:**

**அன்னமய – உணவினால் ஆன: ஆத்மானம் -உடலை: உபஸங்க்ராமதி – கடந்து செல்கிறான். ப்ராணமய –**

**ப்ராணனால் ஆன: மனோமய – மனதால் ஆன: விஞ்ஞானமய – புத்தியால் ஆன: ஆனந்த மய –**

**ஆனந்தத்தால் நிறைந்த: தத் அபி ஏஷ - இதைப் பற்றி மேலும்: ஸ்லோகோ – ஸ்லோகம்: பவதி – உள்ளது.**

**யார் இந்த மனிதனில் இருக்கிறாரோ, யார் அந்த சூரியனில் இருக்கிறாரோ, அவர் ஒருவரே. இவ்வாறு அவர் ஒருவரே என்பதை உணர்ந்தவன் இந்த உலகத்தை விட்டுப் பிரியும்போது உணவு உடல், ப்ராண உடல், மன உடல், புத்தி உடல், ஆனந்த உடல் என்றிவ்வாறு சொல்லப்பட்ட எல்லா உடல்களையும் எளிதாக கடந்து செல்கிறான்.இதைப் பற்றி மேலும் ஸ்லோகம் உள்ளது.**

**பிரம்மத்தை, இறைவனின் தன்மையை உணர்ந்தவனது மரணம் உயிர் இழப்பாக இல்லாமல் உயிர் பிரிதலாக இருக்கும். இந்த ஐந்து உறைகளும் அதனதன் தனித்தன்மையோடு இருந்தால்தான் இவ்வாறு நிகழ்வது சாத்தியமாகும். சாதாரண மனிதர்களுக்கு இவை யாவும் ஒன்றோடொன்று பின்னிப் பினைந்து காணப்படும். உயிர் பிரியும்போது இந்த சிக்கல்களால் வேதனை அதிகமாகும் என்று சான்றோர்கள் சொல்கிறார்கள்.**

**यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह आनन्दं ब्रहमणो विद्वान् न बिभेति कुतश्चनेति एत ह वाव न तपति किमह साधु नाकरवम् किमह पापमकरवमिति स य एवं विद्वानेते आत्मान स्पृणुते उभे हयेवैष एते आत्मानं स्पृणुते य एवं वेद इत्युपनिषत्**

**யதோ வாசோ நிவர்த்தந்தே | அப்ராப்ய மனஸா ஸஹ |**
**ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான் | ந பிபேதி குதச்சனேதி|**
**ஏதக்ம் ஹ வா வ ந தபதி | கிமஹக்ம் ஸாது நாகரவம் | கிமஹம்**
**பாபமகரவமிதி | ஸ ய ஏவம் வித்வானேதே ஆத்மானக்க்ம்**
**ஸ்ப்ருணுதே | உபே ஹ்யேவைஷ ஏதே ஆத்மானக்க்ம் ஸ்ப்ருணுதே |**
**இத்யுபநிஷத். ||**

**யத் -எது : வாச உ – வாக்கும்: நிவர்த்தந்தே – திரும்புகிறதோ: அப்ராப்ய – அடைய முடியாமல்: மனஸா ஸஹ - மனதோடு கூட: ஆனந்தம் - ஆனந்தம்: ப்ராஹ்மணோ – பிரம்மம்: வித்வான் - அறிந்தவன்: ந பிபேதி – பயப்படுவதில்லை: குதச்சன இதி – எதற்கும்: ஏதம் - இவன்: ஹ - உன்மையில்: வாவ – நிச்சயமாக: ந தபதி – கலங்குவதில்லை: கிம் அஹம் - ஏன் நான்: ஸாது – நல்லனவற்றை: ந அகரவம் - செய்யவில்லை: கிம் அஹம் - நான் ஏன்: பாபம் - பாவச்செயல்களை: அகரவம் - செய்கிறேன்: ஸ – அவை: ய – அந்த: வித்வான் – அறிவாளியின்: ஏதே - இவை: ஆத்மானம் - ஆத்ம தரிசனத்தை: ஸ்ப்ருணுதே – பொங்கச் செய்கிறது: உபே - இரண்டும்: ஹ ஏவ ஏஷ - நிச்சயமாக அவனுடைய: ஏதே – இவை: ஆத்மானம் - ஆத்ம தரிசனத்தை: ஸ்ப்ருணுதே – பொங்கச்செய்கின்றன. இதி உபநிஷதம் - இவ்வாறு இந்த உபநிஷதம்.**

**வாக்கும் மனமும் எதை அடைய முடியாமல் திரும்புகிறதோ, அந்த பிரம்மத்தை 'ஆனந்தம்' என்று அறிந்தவன் எதற்கும் பயப்படுவதில்லை. இவன் நிச்சயம் கலங்குவதில்லை. 'நான் ஏன் நல்ல செயல்களைச் செய்யவில்லை' 'நான் ஏன் பாவச்செயல்களைச் செய்கிறேன்' என்ற கேள்விகள் அவனிடம் எழுவதில்லை. இரண்டுமே அவனிடம் ஆத்ம தரிசனத்தைப் பொங்கச் செயகின்றன. அவனது ஆத்ம அனுபூதி திடப்படுகிறது.**

**இவ்வாறு இந்த உபநிஷதம்.**

**"நான் ஏன் தீய செயல்களை செய்கிறேன என்று கலங்குவதில்லை" என்று சொல்வதால் அத்தகைய ஞானி பாபச்செயல்களைச் செய்கிறார் என்பதல்ல. இறையனுபூதியில் திளைக்கும் ஒரு ஞானி இன்பம்- துன்பம், பாவ புன்னியம், நன்மை தீமை போன்ற இரட்டைகளைக் கடந்தும் விலகியும் நிற்கிறார் என்பது உணரத்தக்கது. பாவமும் புன்னியமும் செயல்களில் இல்லை. அதை செய்பவனது மனோ நிலையில் உள்ளது.**

**எனவே பிரம்மத்தை உணர்ந்த ஒரு ஞானியின் எந்த செயலும் அவருக்கு எந்த பதிவையும் ஏற்படுத்துவதில்லை.**

இவ்வாறாக, ஆனந்தம் பற்றி ஆராயும் 'ஆனந்த வல்லீ' என்ற பகுதி நிறைவு பெறுகிறது.

सह नो भवतु सह नौ भुनक्तु सह वीर्यं करवावहै तेजस्वीनावतीदमस्तु माविद्विषावहै
ॐ शान्तिः शान्तिः शान्तिः

ஓம் ஸஹ நாவவது| ஸஹ நெள புனக்து| ஸஹ வீர்யம் கரவாவஹை|
தேஜஸ்வி நாவதீதமஸ்து| மா வித்விஷாவஹை||
ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

# बृगु वल्लि ப்ருகு வல்லீ

முந்தைய அத்தியாயம் மேல்நிலைக் கல்வி என்றால் இது ஆய்வுக்கல்வி. இது சீடனின் சுய முயற்சியைத் தூண்டி, அவனை அவனது அனுபவங்களால் கற்கச்செய்வது. வார்த்தைகளாக இல்லாமல் வாழ்க்கையாக கற்பிக்கும் முறை. இந்த சாதனை முறைக்கு பார்கவ - வாருணீ வித்தை என்று பெயர். இதே போன்ற ஒரு முறையை புத்த மதம் கடைபிடிக்கிறது. அதற்கு 'ஜென் கோன்' என்று பெயர்.

இந்தப் பகுதி வருண முனிவரின் மகனான ப்ருகு, ப்ரம்மத்தை அறிய முயல்வது போல் அமைந்துள்ளது.

பிரார்த்தனை

**सह नो भवतु सह नौ भुनक्तु सह वीर्यं करवावहै तेजस्वीनावतीदमस्तु मा विद्विषावहै**

**ॐ शान्तिः शान्तिः शान्तिः**

ஓம் ஸஹ நாவவது| ஸஹ நெள புனக்து| ஸஹ வீர்யம் கரவாவஹை|
தேஜஸ்வி நாவதீதமஸ்து| மா வித்விஷாவஹை||
ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

**ॐ बृगुवै वारूणिः वरूणं पितरमुपससार**
**अधीहि भगवो ब्रहमेति तस्मा एतत्प्रोवाच**
**अन्नं प्राणं चक्षुः श्रोत्र मनो वाचमिति**

**ப்ருகுர்வை வாருணி | வருணம் பிதரமுபஸஸார | அதீஹி பகவோ ப்ரஹ்மேதி | தஸ்மா ஏதத் ப்ரோவாச | அன்னம் ப்ராணம் க்ஷுச்ச்ரோத்ரம் மனோ வாசமிதி||**

**ப்ருகு – ப்ருகு: வாருணி – வருணனின் மகன்: வருணம் - வருண முனிவர்: பிதரம் - தந்தை: உபஸஸார – நெருங்கி: பகவோ – ஆசிர்வதிக்கப்பட்டவரே: அதீஹி – உபதேசியுங்கள்: பிரஹ்ம – பிரம்மம்: இதி – என்று: தஸ்மா – அவனுக்கு: ஏதத் - இவ்வாறு: ப்ரோவாச – உபதேசித்தார்: அன்னம்- உணவு: ப்ராணம் - ப்ராணன்: க்ஷு- கண்: ச்ரோத்ரம் - காது: மனோ – மனம்: வாச – பேச்சு: இதி – என்று.**

**வருண முனிவரின் மகனான ப்ருகு, தன் தந்தையை அனுகி, "ஆசிர்வதிக்கப்பட்டவரே, ப்ரம்மம் பற்றி உபதேசியுங்கள்" என்று கேட்டான். தந்தையாகிய ப்ருகு அவனுக்கு இவ்வாறு உபதேசித்தார். "உணவு, ப்ராணன், கண், காது, மனம், பேச்சு - இவை ப்ரம்மம்"**

**தன் மகனான ப்ருகு தன்னை அனுகி ப்ரம்மத்தைப் பற்றி உபதேசிக்குமாறு கேட்டவுடன், வருண முனிவர் அதனை நேரடியாக உபதேசிக்காமல் ஒரு பாதையைக் காட்டுகிறார். ப்ரம்ம ஞானம் உபதேசத்திற்கு அப்பாற்பட்டது. அனுபூதிக்கே வசப்படுவது. இதில் பாதை என்று எதுவுமே இல்லை. அதனால் வருண முனிவர் ஒரு ஆரம்பத்தைக் காட்டுகிறார். நல்ல குருவானவர், தன் சீடன் ப்ரம்ம ஞானம் பெறுவதற்கான சூழலைத்தான் உருவாக்கித்தர முடியும். அவனுக்கு ஞானத்தை புகட்ட முடியாது என்பது நுட்பமாக அறியத்தக்கது.**

**ஆனால், வருண முனிவரின் வார்த்தைகளிலிருந்து ப்ருகுவால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. (நமக்கும் தான்) அதனால், வருண முனிவர் தொடர்கிறார்.**

## त होवाच यतो व इमानि भूतानि जायन्ते येन जातानि जीवन्ति यत्प्रयन्त्यभिसंविशन्ति तद्विजिज्ञासस्व तद् ब्रह्मेति स तपोऽतप्यत स तपस्तप्त्वा

**தம் ஹோவாச | யதோ வா இமானி பூதானி ஜாயந்தே | யேன ஜாதானி ஜீவந்தி | யத் ப்ரயந்த்யபி ஸம்விசந்தி | தத் விஞ்ஞானஸ்வ | தத் ப்ரஹ்மேதி | ஸ தபோऽதப்யத | ஸ தபஸ் தப்த்வா||**

**தம் - அவர்: ஹ உவாச – சொன்னார்: யத உ – எதனால்: இமானி - இந்த: பூதானி – உயிர்கள்: ஜாயந்தே – பிறக்கின்றனவோ: யேன-எதனால்: ஜாதானி – பிறந்தவை: ஜீவந்தி – வாழ்கின்றனவோ: யத் - எதில்: ப்ரயந்த அபி – மரணத்திற்குப் பிறகு: ஸம்விசந்தி – ஒடுங்குகின்றனவோ: தத் - அது: விஞ்ஞானஸ்வ – அறியத்தக்கது: தத் - அது: ப்ரஹ்ம– பிரம்மம்: இதி - இவ்வாறு: ஸ – அவன்: தப உ – தவம்: அதப்யத – ஈடுபட்;டான்: ஸ – அவன்: தபஸ் தப்த்வா – தவம் செய்த பிறகு,**

**அவர் (வருண முனிவர்) இவ்வாறு சொன்னார், “எதனால் இந்த உயிர்கள் பிறக்கின்றனவோ, பிறந்தவை எதனால் வாழ்கின்றனவோ, மேலும் மரணத்தில் எதில் ஒடுங்குகின்றனவோ, அது அறியத்தக்கது. அதுவே பிரம்மம்”. (அதனைக் கேட்ட ப்ருகு) தவத்தில் ஈடுபட்டான். தவம் நிறைவுற்ற பிறகு.**

**இந்த ஸ்லோகத்திலும் பிரம்மத்தைப் பற்றி நேரடி உபதேசம் இல்லை. பிரம்மத்தின் சில வெளிப்பாடுகளைச் சொல்லி, ‘அறியத்தக்கது’ என்று முடித்து விடுகிறார். அந்த பிரம்மத்தை அறிவதற்காக, வருண முனிவரின் வார்த்தைகளை மனதில் இருத்தியவனாக ப்ருகு தவத்தில் ஈடுபட்டான்.**

**தவம் என்றால் என்ன? தன் புலன்களையும் மனதையும் ஒருமுகப்படுத்தி, ஒரு குறிப்பிட்ட விஷயத்தை ஆராய்வதே தவம். ஆழமாக இந்த சிந்தனையில் மூழ்கிய ப்ருகு, தவம் முடித்து....**

**अन्नं ब्रहमेति व्यजानात् अन्नादध्येव स्वल्विमानि**

**भुतानि जयन्ते अन्नेव जातानि जीवन्ति**

**अन्नं प्रयन्त्यभिसंविशन्तीति तद्विज्ञाय**

**पुनरेव वरूणं पितरमूपससार अधीहि भगवो ब्रहमेति**

**त होवाच तपसा ब्रहम विजिज्ञासस्व तपो ब्रहमति**

**स तपोऽतप्यत  स तपस्तप्त्वा**

**அன்னம் ப்ரஹ்மேதி வ்யஜானாத் | அன்னாத்யேவ கல்விமானி பூதானி ஜாயந்தே | அன்னேன ஜாதானி ஜீவந்தி | அன்னம் ப்ரயந்த்யபிஸ்ம்விசந்தீதி | தத் விஞ்ஞாய | புனரேவ வருணம் பிதரமுபஸஸார | அதீஹி பகவோ ப்ரஹ்மேதி | தக்ம் ஹோவாச| தபஸா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ: | தபோ ப்ரஹ்மேதி | ஸ தபோऽதப்யத | ஸ தபஸ் தப்த்வா||**

**அன்னம் - உணவு: ப்ரஹம இதி – பிரம்மம் என்று: வ்யஜானாத் - அறிந்தான்: அன்னாத் ஏவ – உணவினாலேயே: கலு – நிச்சயமாக: இமானி - இந்த: ப10தானி – உயிர்கள்: ஜாயந்தே – பிறக்கின்றன: அன்ன ஏன – உணவினாலேயே: ஜாதானி – பிறந்தவை: ஜீவந்தி – வாழ்கின்றன: அன்னம் - உணவு: ப்ரயந்தயபி – மரணத்திற்கு பிறகு: ஸம்விசந்தி – ஒடுங்குகிறது: இதி – என்று: தத் - இதனை: விஞ்ஞாய – அறிந்த பிறகு: புனரேவ – மீண்டும்: வருணம் - வருண முனிவரை: பிதரம் - தந்தை: உபஸஸார – அனுகினான்: அதீஹி – உபதேசியுங்கள்: பகவோ – ஆசீர்வதிக்கப்பட்டவரே: ப்ரஹ்ம இதி – பிரம்மம் இது: தம் - அவர்: ஹ உவாச – சொன்னார்: தபஸா – தவத்தால்: ப்ரஹ்ம – பிரம்மம்: வஜிஜ்ஞாஸஸ்வ – உணரத்தக்கது: தப உ – தவமே: ப்ரஹ்ம இதி –**

பிரம்மம்: ஸ – அவன்: தப உ – தவம்: அதப்யத – ஈடுபட்;டான்: ஸ – அவன்: தபஸ் தப்த்வா – தவம் செய்த பிறகு,

தவத்தில் இருந்த ப்ருகு ஒரு உண்மையை அறிந்தான். உணவே ப்ரம்மம் என்று அறிந்தான். உணவினாலேயே இந்த உயிர்கள் தோன்றுகின்றன. பிறந்தவை, உணவினாலேயே வளர்கின்றன. மரணத்திற்குப் பிறகு உணவிலேயே ஒடுங்குகின்றன. எனவே உணவே பிரம்மம். இவ்வாறு அறிந்த ப்ருகு, மீண்டும் தந்தையாகிய வருண முனிவரை அனுகி, "பிரம்மம் இது என்று எனக்கு உபதேசியுங்கள்" என்று கேட்டான். அவர் சொன்னார், "தவத்தால் பிரம்மம் உணரத்தக்கது. தவமே பிரம்மம்" என்றார். இதைக் கேட்ட பிருகு தவத்தில் ஈடுபட்டான். தவம் நிறைவுற்ற பிறகு......

வருண முனிவரின் வார்த்தைகளோடு தவத்தில் ஈடுபட்;ட ப்ருகு ஒரு உண்மையை அறிகிறான். பிரம்மத்திற்கு வருண முனிவர் கூறிய விளக்கம் உணவிற்கு பொருந்துகிறது. இந்த உண்மையை அறிந்த பிருகு தன் தந்தையிடம் மீண்டும் செல்கிறான். பிரம்மத்தை உணர்ந்தவனுக்கு சந்தேகங்கள் மறைந்து ஒரு நிறைவு கிடைத்திருக்கும். ஆனால் ப்ருகு மீண்டும் வருணரிடம் செல்கிறான். வருண முனிவர் முன்னர் "பிரம்மத்தைப் பற்றி அறியத்தக்கது" என்று கூறியவர் இப்பொழுது "உணரத்தக்கது" என்று கூறி, தவமே அதற்கு வழி என்பதையும் சொல்கிறார்.
முதல் ஸ்லோகத்தில் வருண முனிவரால் முதலாவதாக சொல்லப்பட்ட உணவு இங்கே சிந்திக்கப்பட்டுள்ளது. ப்ரம்ம ஞானத்திற்கான பயனம், இருக்குமிடத்திலிருந்தே தொடங்கப்பட வேண்டும் என்பது நுட்பமாக உணரத்தக்கது. இதை உணர்த்துவதற்காகவே வருண முனிவர் "கண், காது, பேச்சு எல்லாம் பிரம்மம்" என்கிறார். எவையெல்லாம் நம் முன் உள்ளனவோ, அவற்றிலிருந்தே பிரம்மத்தைப் பற்றி நாம் உணர முடியும்.

மேலும், தன்னை உணவாலாகிய உடலாகக் கருதும் வரை, அவன் உணவையே பிரம்மமாக உணர்வான் என்பதும் அறியத்தக்கது. ப்ருகு அறிந்த இந்த உன்மையை முழுவதுமாக மறுக்காமலும், அதே நேரத்தில். பயனம் முடியவில்லை என்பதை குறிப்பிடவே "தவமே

**பிரம்மம்" என்றார். முதல் உடலான 'உணவு உடல்' இப்போது மீறப்படுகிறது. ப்ருகு மீண்டும் தவத்தில் ஆழ்கிறான்.**

प्राणो ब्रहमेति व्यजानात् प्राणादध्येव खल्विमानि भूतानि जायन्ते
प्राणेन जातानि जीव्न्ति प्राणं प्रय्न्त्यभिसंविशन्तीति
तद्विज्ञाय पुनरेव वरूणं पितरमूपससार अधीहि भगवो ब्रहमेतित होवाच तपसा ब्रहम
विजिज्ञासस्व तपो ब्रहमति स तपोऽतप्यत स तपस्तप्त्वा

**ப்ராணோ ப்ரஹ்மேதி வ்யஜானாத் | ப்ராணாத்யேவ கல்விமானி பூதானி ஜாயந்தே | ப்ராணேன ஜாதானி ஜீவந்தி | ப்ராண் ப்ரயந்த்யபிஸ்ம்விசந்தீதி | தத் விஞ்ஞாய | புனரேவ வருணம் பிதரமுபஸஸார | அதீஹி பகவோ ப்ரஹ்மேதி | தக்ம் ஹோவாச| தபஸா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ: | தபோ ப்ரஹ்மேதி | ஸ தபோऽதப்யத | ஸ தபஸ் தப்த்வா**

**ப்ராணன் - ப்ராணன் அல்லது வாயு: ப்ரஹம இதி – பிரம்மம் என்று: வ்யஜானாத் - அறிந்தான்: ப்ராணாத் ஏவ – ப்ராணனாலேயே: கலு – நிச்சயமாக: இமானி - இந்த: ப10தானி – உயிர்கள்: ஜாயந்தே – பிறக்கின்றன: ப்ராண ஏன – ப்ராணனினாலேயே: ஜாதானி – பிறந்தவை: ஜீவந்தி – வாழ்கின்றன: ப்ரான் - வாயு: ப்ரயந்தயபி – மரணத்திற்கு பிறகு: ஸம்விசந்தி – ஒடுங்குகிறது: இதி – என்று: தத் - இதனை: விஞ்ஞாய – அறிந்த பிறகு: புனரேவ – மீண்டும்: வருணம் - வருண முனிவரை: பிதரம் - தந்தை: உபஸஸார – அனுகினான்: அதீஹி – உபதேசியுங்கள்: பகவோ – ஆசீர்வதிக்கப்பட்டவரே: ப்ரஹ்ம இதி – பிரம்மம் இது: தம் - அவர்: ஹ உவாச – சொன்னார்: தபஸா – தவத்தால்: ப்ரஹ்ம – பிரம்மம்: வஜிஜ்ஞாஸஸ்வ – உணரத்தக்கது: தப உ – தவமே: ப்ரஹ்ம இதி – பிரம்மம்: ஸ – அவன்: தப உ – தவம்: அதப்யத – ஈடுபட்;டான்: ஸ – அவன்: தபஸ் தப்த்வா – தவம் செய்த பிறகு,**

**தவத்தில் ஆழ்ந்த பிருகுவிற்கு, "ப்ராணனே பிரம்மம்" என்று தோன்றியது. ப்ராணனினாலேயே உயிர்கள் பிறக்கின்றன. ப்ராணனினாலேயே அவை வளர்கின்றன. மரணத்தில் அவை பிராணனிலேயே ஒடுங்குகின்றன. எனவே ப்ராணனே பிரம்மம்.**

**இவ்வாறு முடிவு செய்த பிருகு, மீண்டும் தந்தையாகிய வருண முனிவரை அனுகி, "ஆசிர்வதிக்கப்பட்டவரே, பிரம்மம் இது என்று எனக்கு உபதேசியுங்கள்" என்று கேட்டான். அவர் சொன்னார், "தவத்தால் பிரம்மம் உணரத்தக்கது. தவமே பிரம்மம்" என்றார். இதைக் கேட்ட பிருகு தவத்தில் ஈடுபட்டான். தவம் நிறைவுற்ற பிறகு......**

**உணவே பிரம்மம் என்று அறிந்த ப்ருகு, வருண முனிவர் அதனை ஏற்காததால் மீண்டும் தவத்தில் ஆழந்தான். அவனுக்கு "பிராணனே பிரம்மம்" என்ற முடிவு கிடைத்தது. ஆனால் இம்முறையும் வருண முனிவர் இதனை ஏற்கவுமில்லை, முழுமையாக மறுக்கவுமில்லை. தொடர்ந்து தவத்தில் ஈடுபடுமாறு ஊக்குவிக்கிறார். மீண்டும் தவத்தில் ஆழ்கிறான் பிருகு.**

**முந்தைய அத்தியாயமான 'ஆனந்த வல்லீ" பகுதியில் உணவு உடலுக்குப் பிறகு பிராண உடல் இருப்பதைப் பார்த்தோம். ப்ருகு முதலில் அந்த உணவு உடலை உணர்ந்தவன், இப்போது ப்ராண உடலை உணர்கிறான்.**

मनो ब्रहमेति व्यजानात मनसो ह्येव खल्विमानि भूतानि जायन्ते मनसा जातानि जीवन्ति मनः प्रयन्त्यभिसंविशन्तीति तद्विज्ञाय पुनरेव वरूणं पितरमूपससार अधीहि भगवो ब्रहमेति त होवाच तपसा ब्रहम विजिज्ञासस्व तपो ब्रहमति स तपोऽतप्यत स तपस्तप्त्वा

**மனோ ப்ரஹ்மேதி வ்யஜானாத் | மனஸோஹ்யேவ கல்விமானி பூதானி ஜாயந்தே | மனஸா ஜாதானி ஜீவந்தி | மன: ப்ரயந்த்யபிஸ்ம்விசந்தீதி | தத் விஞ்ஞாய | புனரேவ வருணம் பிதரமுபஸஸார | அதீஹி பகவோ ப்ரஹ்மேதி | தக்ம் ஹோவாச| தபஸா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ: | தபோ ப்ரஹ்மேதி | ஸ தபோऽதப்யத | ஸ தபஸ் தப்த்வா||**

**மனோ-மனம்: ப்ரஹ்ம இதி – பிரம்மம் என்று: வ்யஜானாத் - அறிந்தான்: மனஸோ ஹ ஏவ –மனதினாலேயே: கலு – நிச்சயமாக: இமானி - இந்த: ப10தானி – உயிர்கள்: ஜாயந்தே – பிறக்கின்றன: மனஸா – மனதினாலேயே: ஜாதானி – பிறந்தவை: ஜீவந்தி – வாழ்கின்றன: மன: -**

**மனதிலேயே: ப்ரயந்தயபி – மரணத்திற்கு பிறகு: ஸம்விசந்தி – ஒடுங்குகிறது: இதி – என்று: தத் - இதனை: விஞ்ஞாய – அறிந்த பிறகு: புனரேவ – மீண்டும்: வருணம் - வருண முனிவரை: பிதரம் - தந்தை: உபஸஸார – அனுகினான்: அதீஹி – உபதேசியுங்கள்: பகவோ – ஆசீர்வதிக்கப்பட்டவரே: ப்ரஹ்ம இதி – பிரம்மம் இது: தம் - அவர்: ஹ உவாச – சொன்னார்: தபஸா – தவத்தால்: ப்ரஹ்ம – பிரம்மம்: வஜிஜ்ஞாஸஸ்வ – உணரத்தக்கது: தப உ – தவமே: ப்ரஹ்ம இதி – பிரம்மம்: ஸ – அவன்: தப உ – தவம்: அதப்யத – ஈடுபட்;டான்: ஸ – அவன்: தபஸ் தப்த்வா – தவம் செய்த பிறகு,**

**மேலும் தவத்தில் ஆழ்ந்த பிருகு, "மனமே பிரம்மம்" என்று உணர்கிறான். மனதினாலேயே உயிர்கள் பிறக்கின்றன. வளர்கின்றன. மரணத்தில் அவை மனதிலேயே ஒடுங்குகின்றன. எனவே மனமே பிரம்மம். இவ்வாறு முடிவு செய்த பிருகு, மீண்டும் தந்தையாகிய வருண முனிவரை அனுகி, "ஆசிர்வதிக்கப்பட்டவரே, பிரம்மம் இது என்று எனக்கு உபதேசியுங்கள்" என்று கேட்டான். அவர் சொன்னார், "தவத்தால் பிரம்மம் உணரத்தக்கது. தவமே பிரம்மம்" என்றார். இதைக் கேட்ட பிருகு தவத்தில் ஈடுபட்டான். தவம் நிறைவுற்ற பிறகு......**

**பிராண உடலைக் கடந்த பிருகு மன உடலை உணர்கிறான்.**

विज्ञानं ब्रहमेति व्यजानात् विज्ञानादध्येव खल्विमानि भूतानि जायन्ते
विज्ञानेन जातानि जीवन्ति विज्ञानं प्रयन्त्यभिसंविशन्तीति
तद्विज्ञाय पुनरेव वरूणं पितरमूपससार अधीहि ब्रहमेति
त होवाच तपसा ब्रहम विजिज्ञासस्व तपो ब्रहमति स तपोऽतप्यत स तपस्तप्त्वा

**விஞ்ஞானம் ப்ரஹ்மேதி வ்யஜானாத் | விஞ்ஞானாத்யேவ கல்விமானி பூதானி ஜாயந்தே | விஞ்ஞானேன ஜாதானி ஜீவந்தி | விஞ்ஞானம் ப்ரயந்த்யபிஸ்ம்விசந்தீதி | தத் விஞ்ஞாய | புனரேவ வருணம் பிதரமுபஸஸார | அதீஹி பகவோ ப்ரஹ்மேதி | தக்ம் ஹோவாச| தபஸா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ: | தபோ ப்ரஹ்மேதி | ஸ தபோऽதப்யத | ஸ தபஸ் தப்த்வா**

**விஞ்ஞானம் - புத்தி: ப்ரஹம இதி – பிரம்மம் என்று: வ்யஜானாத் - அறிந்தான்: விஞ்ஞானாத் ஏவ –புத்தியினாலேயே: கலு – நிச்சயமாக: இமானி - இந்த: ப10தானி – உயிர்கள்: ஜாயந்தே – பிறக்கின்றன: விஞ்ஞானேன- புத்தியால்:  ஜாதானி – பிறந்தவை: ஜீவந்தி – வாழ்கின்றன: விஞ்ஞானம் - புத்தியிலேயே: ப்ரயந்தயபி – மரணத்திற்கு பிறகு: ஸம்விசந்தி – ஒடுங்குகிறது: இதி – என்று: தத் - இதனை: விஞ்ஞாய – அறிந்த பிறகு: புனரேவ – மீண்டும்: வருணம் - வருண முனிவரை: பிதரம் - தந்தை: உபஸஸார – அனுகினான்: அதீஹி – உபதேசியுங்கள்: பகவோ – ஆசீர்வதிக்கப்பட்டவரே:  ப்ரஹ்ம இதி – பிரம்மம் இது: தம் - அவர்: ஹ உவாச – சொன்னார்: தபஸா – தவத்தால்: ப்ரஹ்ம – பிரம்மம்: வஜிஜ்ஞாஸஸ்வ – உணரத்தக்கது: தப உ – தவமே: ப்ரஹ்ம இதி – பிரம்மம்: ஸ – அவன்: தப உ – தவம்: அதப்யத – ஈடுபட்;டான்: ஸ – அவன்: தபஸ் தப்த்வா – தவம் செய்த பிறகு,**

**மீண்டும் தவத்தில் ஆழ்ந்த பிருகு, "புத்தியே பிரம்மம்" என்ற முடிவை அடைகிறான். புத்தியினாலேயே உயிர்கள் பிறக்கின்றன. புத்தியால் அவை வளர்கின்றன. மரணத்தில் அவை புத்தியிலேயே ஒடுங்குகின்றன. எனவே புத்தியே பிரம்மம். இவ்வாறு முடிவு செய்த பிருகு, மீண்டும் தந்தையாகிய வருண முனிவரை அனுகி, "ஆசிர்வதிக்கப்பட்டவரே, பிரம்மம் இது என்று எனக்கு உபதேசியுங்கள்" என்று கேட்டான். அவர் சொன்னார், "தவத்தால் பிரம்மம் உணரத்தக்கது. தவமே பிரம்மம்" என்றார். இதைக் கேட்ட பிருகு தவத்தில் ஈடுபட்டான். தவம் நிறைவுற்ற பிறகு......**

आनन्दो ब्रह्मेति व्यजानात्  आनन्दाध्येव खल्विमानि भूतानि जायन्ते
आनन्देन जातानि जीवन्ति  आनन्दं  प्रयन्त्यभिसंविशन्तीति

**ஆனந்தம் ப்ரஹ்மேதி வ்யஜானாத் | ஆனந்தாத்யேவ கல்விமானி பூதானி ஜாயந்தே | ஆனந்தேன ஜாதானி ஜீவந்தி | ஆனந்தம் ப்ரயந்த்யபிஸ்ம்விசந்தீதி||**

**ஆனந்தம் - ஆனந்தம்: ப்ரஹ்ம இதி – பிரம்மம் என்று: வ்யஜானாத் - அறிந்தான்: ஆனந்தாத் ஏவ –ஆனந்தத்தினாலேயே: கலு – நிச்சயமாக: இமானி - இந்த: ப10தானி – உயிர்கள்: ஜாயந்தே – பிறக்கின்றன: ஆனந்தேன- ஆனந்தத்hல்: ஜாதானி – பிறந்தவை: ஜீவந்தி – வாழ்கின்றன: ஆனந்தம்- ஆனந்தத்திலேயே: ப்ரயந்தயபி – மரணத்திற்கு பிறகு: ஸம்விசந்தி – ஒடுங்குகிறது: இதி – என்று:**

**பிறகு தவத்தில் ஆழ்ந்த பிருகு, ஆனந்தமே பிரம்மம் என்று உணர்ந்தான். ஆனந்தத்தாலேயே உயிர்கள் பி;றக்கின்றன. பிறந்தவை ஆனந்ததில் வாழ்கின்றன. மரணத்திற்குப் பிறகு ஆனந்தத்திலேயே ஒடுங்குகின்றன. எனவே ஆனந்தமே பிரம்மம் என்று உணர்ந்தான் பிருகு.**

**இதுவரை பல்வேறு உடல்களை கடந்து வந்த போது, ஒவ்வொரு முடிவை அவன் தொட்டபோதும், பிருகுவிற்கு சந்தேகம் இருந்தது. தான் கற்க வேண்டியது இன்னும் உண்டு என்ற எண்ணம் இருந்தது. ஆனால் ஆனந்த நிலையைத் தொட்டவுடன் அவன் சந்தேகம் மறைந்து, கற்க வேண்டியது ஏதுமில்லை என்ற நிறைவு தோன்றியிருக்கிறது.**

**இதனால் தான், இதுவரை தன் தந்தையாகிய வருண முனிவரை ஒவ்வொரு முறையும் அனுகிய பிருகு முனிவர், இப்பொழுது அவ்வாறு செய்யவில்லை.**

**ஆனந்த நிலையைத் தொட்டவனது எல்லா ஆசைகளும் நிறைவேறுகின்றன என்பதற்கு சான்று இது.**

**இதற்கு பின் வரும் சில ஸ்லோகங்கள் உணவைப் பற்றிப் பேசுகின்றன. உணவு என்பது வாயு ரூபமாகவோ, திட உருவமாகவோ, திரவ வடிவிலோ இருக்கலாம். 'உண்ணப்படுவதும் உண்பதுமாக இருப்பதாலேயே உணவு 'அன்னம்' என்று அழைக்கப்படுகிறது' என்று முன்னர் பார்த்தோம். இந்த கருத்து இந்த ஸ்லோகங்களில் விளக்கப்படுகிறது.**

**ஆத்ம அனுபூதியை – ஆனந்த நிலையைப் பற்றிப் பேசிய உபநிஷதம் உடனே உணவைப் பற்றிப் பேசுவதில் ஒரு நுட்பமாக கருத்தும் உண்டு. "ஆகார சுத்தௌ சித்த சுத்தி" (உணவின் தன்மையாலேயே சித்தம் தூய்மையடைகிறது) என்பது இந்து மதத்தின்**

**அடிப்படைக் கருத்து. “உடலார் அழியின் உயிரார் அழிவர் – திறம்பட மெய்ஞானம் அடையவும் மாட்டார்” என்பது திருமூலரின் வாக்கு.**

**अन्नं न निन्द्यात्  तदव्रतम् प्राणो वा अन्नम्**

**शरीएमन्नदम् प्राणे शरीरं प्रतिष्ठितम्**

**शरीरे प्राणः प्रतिष्ठितः तदेतदन्नमन्ने प्रतिष्ठितम्**

**स ये एतदन्नमन्ने प्रतिष्ठितं वेद प्रतितिष्ठति अन्नवानन्नादो भवति**

**महान्भवति प्रजया पशुभिब्रह्मवर्चसेन**

**महान् कीर्त्या**

**அன்னம் ந நிந்த்யாத் | தத் வ்ரதம் | ப்ராணோ வா அன்னம் | சரீரமன்னாதம் | ப்ராணே சரீரம் ப்ரதிஷ்ட்டிதம் | சரீரே ப்ராண ப்ரதிஷ்ட்டித: | ததேதன்னமன்னே ப்ரதிஷ்ட்டிதம் | ஸ ய ஏததன்னமன்னே ப்ரதிஷ்ட்டிதம் வேத ப்ரதிதிஷ்ட்டதி | அன்னவானன்னாதோ பவதி மஹான் பவதி ப்ரஜயா பசுபி ப்ரஹ்மவர்ச்சஸேன | மஹான் கீர்த்தயா||**

**அன்னம் - உணவு: ந நிந்த்யாத் - பழிக்கக்கூடாது: தத் - அது: வ்ரதம் - கடமை: ப்ராணோ – ப்ராணனே: வா – நிச்சயமாக: அன்னம் - உணவு: சரீரம் - உடல்: அன்னாதம் - உண்பது: ப்ராணே – ப்ராணனில்: சரீரம் - உடல்: ப்ரதிஷ்ட்டிதம் - நிலைபெற்றுள்ளது: சரீரே – உடலில்: ப்ராண – ப்ராணனை: ப்ரதிஷ்ட்டித: - நிலைபெற்றுள்ளது: தத் - இவ்வாறு: அன்னம் அன்னம் - உணவில் உணவு: ப்ரதிஷ்ட்டிதம் - நிலைபெற்றுள்ளது. ஸ – அவன்: ய – யார்: ஏதத் - இவ்வாறு: அன்னம் அன்னே – உணவு உணவில்: ப்ரதிஷ்ட்டிதம் - நிலைபெற்றுள்ளதை: வேத – அறிகிறானோ: ப்ரதிதிஷ்ட்டதி –நிலைபெறுகிறான்: அன்னவான் - உணவு உடையவன்: அன்னாதோ – உண்பவன்: பவதி – ஆகிறான்: மஹான் பவதி – புனிதன் ஆகிறான்: ப்ரஜயா – மக்கள் செல்வம்: பசுபி – கால்நடைகள்: ப்ரஹ்ம வர்ச்சஸேன – புனிதப்பேரொளி: மஹான் கீர்த்தயா – புகழ் மிக்கவன்:**

உணவைப் பழிக்கக்கூடாது. அது (உங்கள்) கடமை. ப்ராணனே நிச்சயமாக உணவு. உடல் உண்பது. ப்ராணனில் உடல் நிலைபெற்றுள்ளது: உடலில் ப்ராணன் நிலைபெற்றுள்ளது: இவ்வாறாக உணவில் உணவு நிலைபெற்றுள்ளது. இவ்வாறு யார் உணவில் உணவு நிலைபெற்றுள்ளதை அறிகிறானோ அவன் (ஞானத்தில்) நிலைபெறுகிறான். உணவு உடையவனாகவும் உண்பவனாகவும், மக்கட்செல்வம், கால்நடைகள், புனிதப்பேரொளி இவை பெற்று புகழ்பெற்ற புனிதனாக ஆகிறான்.

ப்ராணன் என்பது வாயு. சரீரம் என்பது திட வடிவம். உணவிற்கு இரண்டு பண்புகள் கூறப்பட்டுள்ளது – உண்பது, உண்ணப்படுவது. இதில் சரீரம் என்பது உண்பது என்று இந்த ஸ்லோகம் குறிப்பிடுவதால் ப்ராணன் உண்ணப்படுவது என்பது அறியத்தக்கது.

உடல் உண்பது. ப்ராணன் உண்ணப்படுவது. உடல் ப்ராணனை உண்பதால், உடல் ப்ராணனில் உறைவதாக சொல்லப்பட்டது. ப்ராணன் உடலால் உண்ணப்படுவதால், ப்ராணன் (உடலாக மாறி) உடலில் கலந்து விடுகிறது.

இவ்வாறு உணவாகிய உடலும் ப்ராணனும் ஒன்றோடொன்று கலப்பதால், உணவு உணவிலேயே நிலைபெறுவதாகிறது. இந்த உண்மையை உணர்பவன் ஞானத்தில் நிலைபெறுகிறான். பிரம்ம ஞானத்தில் நிலைபெற்ற அவன், உணவு உடையவனாகவும், உண்டு மகிழ்பவனாகவும், மக்கட்செல்வம், கால்நடை, புனிதப்பேரொளி போன்றவற்றை அடைகிறான். புகழ் பெறுகிறான்.

**अन्नं न परिचक्षीत तद्व्रतम्**

**आपो वा अन्नम् ज्योतिरन्नदम् अप्सु ज्योतिः प्रतिष्ठितम्**

**ज्योतिष्यापः प्रतिष्ठिताः तदेतदन्नमन्ने प्रतिष्ठितम्**

**स ये एतदन्नमन्ने प्रतिष्ठितं वेद प्रतितिष्ठति अन्नवानन्नादो**

**भवति महान्भवति प्रजया पशुभिब्रह्मवर्चसेन महान् कीर्त्या**

**அன்னம் ந பரிசக்ஷி Pத | தத் வ்ரதம் | ஆபோ வா அன்னம் | ஜ்யோதிரன்னாதம் | அப்ஸு ஜ்யோதி: ப்ரதிஷ்ட்டிதம் | ஜ்யோதிஷ்யாப ப்ரதிஷ்ட்டிதா: | ததேதன்னமன்னே ப்ரதிஷ்ட்டிதம் | ஸ ய ஏததன்னமன்னே ப்ரதிஷ்ட்டிதம் வேத ப்ரதிதிஷ்ட்டதி || அன்னவானன்னாதோ பவதி | மஹான் பவதி | ப்ரஜயா பசுபி | ப்ரஹ்மவர்ச்சஸேன | மஹான் கீர்த்தயா||**

**அன்னம் - உணவு: ந பரிசக்ஷி Pத- வெறுக்கக்கூடாது: தத் - அது: வ்ரதம் - கடமை: ஆப- தண்ணீர்: வா – நிச்சயமாக: அன்னம் - உண்ணப்படுவது: ஜ்யோதி – நெருப்பு: அன்னாதம்- உண்பது: அப்ஸு - தண்ணீரில்: ஜயோதி – நெருப்பு: ப்ரதிஷ்ட்டிதம்- நிலைபெற்றுள்ளது: ஜ்யோதிஷ் - நெருப்பில்: ஆப – தண்ணீர்: ப்ரதிஷ்ட்டிதா - நிலைபெற்றுள்ளது: தத் - இவ்வாறு: அன்னம் அன்னம் - உணவில் உணவு: ப்ரதிஷ்ட்டிதம் - நிலைபெற்றுள்ளது. ஸ – அவன்: ய – யார்: ஏதத் - இவ்வாறு: அன்னம் அன்னே – உணவு உணவில்: ப்ரதிஷ்ட்டிதம் - நிலைபெற்றுள்ளதை: வேத – அறிகிறானோ: ப்ரதிதிஷ்ட்டதி –நிலைபெறுகிறான்: அன்னவான் - உணவு உடையவன்: அன்னாதோ – உண்பவன்: பவதி – ஆகிறான்: மஹான் பவதி – புனிதன் ஆகிறான்: ப்ரஜயா – மக்கள் செல்வம்: பசுபி – கால்நடைகள்: ப்ரஹ்ம வர்ச்சஸேன – புனிதப்பேரொளி: மஹான் கீர்த்தயா – புகழ் மிக்கவன்:**

**உணவைப் வெறுக்கக்கூடாது. அது (உங்கள்) கடமை. தண்ணீரே நிச்சயமாக உண்ணப்படுவது. நெருப்பு உண்பது. தண்ணீரில் நெருப்பு நிலைபெற்றுள்ளது: நெருப்பில் தண்ணீர் நிலைபெற்றுள்ளது: இவ்வாறாக உணவில் உணவு நிலைபெற்றுள்ளது. இவ்வாறு யார் உணவில் உணவு நிலைபெற்றுள்ளதை அறிகிறானோ அவன் (ஞானத்தில்) நிலைபெறுகிறான். உணவு உடையவனாகவும் உண்பவனாகவும், மக்கட்செல்வம், கால்நடைகள், புனிதப்பேரொளி இவை பெற்று புகழ்பெற்ற புனிதனாக ஆகிறான்.**

**நெருப்பு தண்ணீரை ஆவியாக்கிவிடுவதால், நெருப்பு உண்பதாகவும், தண்ணீர் உண்ணப்படுவதாகவும் சொல்லப்பட்டது. அதே நேரம், நெருப்பு அல்லது வெப்பம் இல்லாவிட்டால் அங்கு தண்ணீர் இல்லாது போய்**

**பணிக்கட்டியாகிவிடும். எனவே நெருப்பும் தண்ணீரும் ஒன்றிலொன்று நிலைபெற்றிருப்பதாக சொல்லப்பட்டது.**

**अन्नं बहु कुर्वीत  तद्व्रतम् पृथिवी वा अन्नम्**

**आकाशोऽन्नदः पृथिव्यामाकाशः प्रतिष्ठितः**

**आकाशे पृथिवी प्रतिष्ठिता तदेतदन्नमन्ने प्रतिष्ठितम्**

**स य एतदन्न्मन्ने प्रतिष्ठितं वेद प्रतितिष्ठति  अन्नवानन्नादो भवति**

**महान्भवति प्रजया पशुभिब्रहमवर्चसेन महान् कीर्त्या**

**அன்னம் பஹு குர்வீத் | தத் வ்ரதம் | ப்ருத்வீ வா அன்னம் | ஆகாசோꜱன்னாதம் | ப்ருதிவ்யாமாகாச: ப்ரதிஷ்ட்டிதம் | ஆகாசே ப்ருத்வீ ப்ரதிஷ்ட்டிதா: | ததேதன்னமன்னே ப்ரதிஷ்ட்டிதம் | ஸ ய ஏததன்னமன்னே  ப்ரதிஷ்ட்டிதம் வேத ப்ரதிதிஷ்ட்டதி| அன்னவானன்னாதோ பவதி | மஹான் பவதி | ப்ரஜயா பசுபி | ப்ரஹ்மவர்ச்சஸேன | மஹான் கீர்த்தயா||**

**அன்னம் - உணவு: பஹு குர்வீத் - நிறைய உற்பத்தி செய்யவேண்டும்: தத் - அது: வ்ரதம் - கடமை: ப்ருத்வீ – நிலப்பரப்பு: வா – நிச்சயமாக: அன்னம் - உண்ணப்படுவது: ஆகாச - வெளி அன்னாதம் - உண்பது: ப்ருத்வீ- நிலத்தில்: ஆகாச – வெளி: ப்ரதிஷ்ட்டிதம் - நிலைபெற்றுள்ளது: ஆகாசே – வெளியில்: ப்ருத்வீ – நிலம்: ப்ரதிஷ்ட்டித: - நிலைபெற்றுள்ளது: தத் - இவ்வாறு: அன்னம் அன்னம் - உணவில் உணவு: ப்ரதிஷ்ட்டிதம் - நிலைபெற்றுள்ளது. ஸ – அவன்: ய – யார்: ஏதத் - இவ்வாறு: அன்னம் அன்னே – உணவு உணவில்: ப்ரதிஷ்ட்டிதம் - நிலைபெற்றுள்ளதை: வேத – அறிகிறானோ: ப்ரதிதிஷ்ட்டதி – நிலைபெறுகிறான்: அன்னவான் - உணவு உடையவன்: அன்னாதோ – உண்பவன்: பவதி – ஆகிறான்: மஹான் பவதி – புனிதன் ஆகிறான்: ப்ரஜயா – மக்கள் செல்வம்: பசுபி – கால்நடைகள்: ப்ரஹ்ம வர்ச்சஸேன – புனிதப்பேரொளி: மஹான் கீர்த்தயா – புகழ் மிக்கவன்:**

**உணவைப் அதிகம் உற்பத்தி செய்ய வேண்டும். அது (உங்கள்) கடமை. நிலமே நிச்சயமாக உண்ணப்படுவது. வெளி உண்பது. நிலத்தில் வெளி நிலைபெற்றுள்ளது: வெளியில் நிலம் நிலைபெற்றுள்ளது: இவ்வாறாக உணவில் உணவு நிலைபெற்றுள்ளது. இவ்வாறு யார் உணவில் உணவு நிலைபெற்றுள்ளதை அறிகிறானோ அவன் (ஞானத்தில்) நிலைபெறுகிறான். உணவு உடையவனாகவும் உண்பவனாகவும், மக்கட்செல்வம், கால்நடைகள், புனிதப்பேரொளி இவை பெற்று புகழ்பெற்ற புனிதனாக ஆகிறான்.**

**வெளி, நிலப்பகுதியை சூழந்து நிற்பதால் வெளி உண்பதாகவும், நிலப்பகுதி உண்ணப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. நிலப்பரப்பு இல்லாமல் வெளி மட்டும் தனித்திருக்க முடியாது. அதுபோலவே வெளியே இல்லாமல் நிலப்பரப்பும் இருக்க முடியாது. எனவே தான் நிலமும் வெளியும் ஒன்றிலொன்று நிலைபெறுவதாக ஸ்லோகம் சொல்கிறது.**

न कञ्चन वसतौ प्रत्याचक्षीत  तद्व्रतम् तस्माद्यया कया च विधया बहवन्नं प्राप्नुयात् अराध्यस्मा अन्नमित्याचक्षते एतद्वे मुखतोऽन राद्धम्  मुखतोऽस्मा अन्न राध्यते एतद्वै मध्यतोऽन राद्धम् मध्यतोऽस्मा अन्न राध्यते एदद्वा अन्ततोऽन्न राद्धम् अन्ततोऽस्मा अन्न राध्यते य एवं वेद

**ந கஞ்சன வஸதௌ ப்ரத்யாசக்ஷித | தத் வ்ரதம் | தஸ்மாத் யயா கயா ச விதயா பஹ்வன்னம் ப்ராப்னுயாத் | அராத்யஸ்மா அன்னமித்யாசக்ஷ தே | ஏதத்வை முகதோऽன்னக்ம் ராத்தம் | முகதோ ऽஸ்மா அன்னக்ம் ராத்யதே | ஏதத்வை மத்யதோ அன்னக்ம் ராத்தம் | மத்யதோ ऽஸ்மா அன்னக்ம் ராத்யதே | ஏதத்வா அந்ததோऽன்னக்ம் ராத்தம் | அந்ததோ ऽஸ்மா அன்னக்ம் ராத்யதே | ய ஏவம் வேத||**

**கஞ்சன – எவரும்: வஸதௌ – வீட்டில்: ந ப்ரத்யாசக்ஷித – மறுக்கப்படக்கூடாது: தத் வ்ரதம் - அது (உங்கள்) கடமை: தஸ்மாத்: - அதனால்: யயா கயா ச விதயா – எந்தெந்த வழிகளிலாவது: பஹு- நிறைய: அன்னம் - உணவு: ப்ராப்னுயாத் - கிடைக்கச்செய்தல்: அராத் - த்ருப்திபடுத்துவது: அஸ்மா – அவனுக்கு: அன்னம் - உணவு: இதி – என்று: ஆசக்ஷ தே – சொல்லப்படுகிறது: ஏதத்வா - இவ்வாறு: முகத உ – சிறப்பாகக் கூட: அன்னம் - உணவு: ராத்தம் - அளிக்கப்பட்டால்: முக்த உ – சிறப்பாகவே: அஸ்மா – அவனுக்கு: அன்னம் - உணவு: ராத்யதே – த்ருப்தியளிக்கிறது: ஏதத்வா - இவ்வாறு: மத்யதோ – சாதாரணமாக: அன்னம் - உணவு: ராத்தம் - அளிக்கப்பட்டால்: மத்யதோ – சாதாரணமாக: அஸ்மா – அவனுக்கு: அன்னம் - உணவு: ராத்யதே – த்ருப்தியளிக்கிறது: ஏதத்வா - இவ்வாறு: அந்ததோ – மிகச்சாதாரணமாக: அன்னம் - உணவு: ராத்தம் - அளிக்கப்பட்டால்: அந்ததோ – மிகச்சாதாரணமாக: அஸ்மா – அவனுக்கு: அன்னம் - உணவு: ராத்யதே – த்ருப்தியளிக்கிறது: ய – யார்: ஏவம் - இவ்வாறு: வேத – அறிகிறானோ...**

**வீட்டிற்கு வரும் எவருக்கும் (உணவு) மறுக்கப்படக்கூடாது. அது உங்கள் கடமை. அதனால் எந்தெந்த வழிகளிலாவது நிறைய உணவு கிடைக்கச் செய்ய வேண்டும். (வருகின்ற ) அவனுக்குத் திருப்தியளிப்பது உணவே என்று கூறப்படுகிறது. இவ்வாறு சிறப்பாக உணவு அளிக்கப்பட்டால் அவனுக்கு உணவு சிறப்பாகத் த்ருப்தி அளிக்கிறது. சாதாரண முறையில் உணவு அளிக்கப்பட்டால் அவனுக்கு உணவு சாதாரண முறையில் த்ருப்தி அளிக்கிறது. மிகச்சாதாரண முறையில் அளிக்கப்படும் உணவு அவனுக்கு மிகச்சாதாரண முறையில் த்ருப்தியளிக்கிறது. இவ்வாறு (இதனை) யார் அறிகிறானோ.........**

**உணவு மட்டுமே ஒருவனுக்கு த்ருப்தியை அளிக்கக்கூடியது. அதனால் வீட்டிற்கு வரும் யாருக்கும் உணவு மறுக்கப்படக்கூடாது. ஆனால் உணவின் அளவை விட அது அளிக்கப்படும் முறை முக்கியமாகக் கொள்ளப்பட வேண்டும். எனவேதான் சிறந்த முறையில் தரப்பட்ட உணவு, சிறந்த முறையிலும், சாதாரண முறையில் அளிக்கப்பட்ட உணவு சாதாரண முறையிலும், மிகச்சாதாரண**

**முறையில் அளிக்கப்பட்ட உணவு, மிகச்சாதாரண முறையிலும் த்ருப்தியளிக்கும் என்று இந்த ஸ்லோகம் குறிப்பிடுகிறது.**

**இதை இவ்வாறு அறிந்தவன் என்ன செய்ய வேண்டும் என்பதை அடுத்த ஸ்லோகம் சொல்கிறது.**

**क्षेम इति वाचि  योगक्षेम इति प्राणापानयोः कर्मेति हस्तयोः गतिरिति पादयोः विमुक्तिरिति पायौ इति मानुषीः समाज्ञाः**

**கே;ஷ ம இதி வாசி | யோககே;ஷ ம இதி ப்ராணாபானயோ|**
**கர்மேதி ஹஸ்தயோ | கதிரிதி பாதயோ | விமுக்திரிதி பாயௌ | இதி**
**மானுஷீ ஸமாஜ்ஞா||**

**கே;ஷ ம – நன்மையாக: வாச இதி – பேச்சி;ல்: யோக கே;ஷ ம – மங்கலமாக: ப்ராண அபான இதி – ப்ராணன் அபானன் போன்ற வாயுக்களில்: ஹஸ்தயோ – கைகளில்: கர்ம இதி – செயலாக: பாதயோ – கால்களில்: கதி இதி – நடையாக: விமுக்தி இதி – வெளியேற்றுதலாக: பாயௌ-குதத்தில்: இதி - இவ்வாறு: மானுஷீ – மனிதத்தின்: ஸமாஜ்ஞா – சிறப்பு.**

**வாக்கில் நல்வார்த்தைகளுடனும், ப்ராணன் அபானன் போன்ற வாயுக்களின் சீரான இயக்கத்தால் உடல் நலத்துடனும், கைகளில் செயல்புரியும் சக்தியுடனும், கால்களில் நடக்கும் திறனுடனும், குதத்தில் வெளியேற்றும் சக்தியுடனும் இருப்பதே மனித குலத்தின் சிறப்பு.**

**முந்தைய ஸ்லோகத்தில் 'உணவு சிறப்பான முறையில் வழங்கப்பட வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டது. அந்த சிறப்பு என்ன என்பதை இந்த ஸ்லோகம் சொல்கிறது. எந்த உணவு, இந்த ஸ்லோகம் சொல்லும் மனித குல சிறப்புக்களைத் தருமோ, அதுவே சிறந்த உணவாகும்.**

**अथ दैवीः तृप्तिरिति वृष्टौ बलमिति विद्युति यश इति पशुषु ज्योतिरिति नक्षत्रेषु**
**प्रजातिरमृतमानन्द इत्युपस्थे सर्वमित्याकाशे**

அத தைவீ | த்ருப்திரிதி வ்ருஷ்டௌ | பலமிதி வித்யுதி | யச இதி பசுஷ{: | ஜ்யோதிரிதி நக்ஷ த்ரேஷு| ப்ரஜாதிம்ருதமானந்த இதி உபஸ்த்தே | ஸர்வமித்யாகாசே||

அத – பிறகு: தைவீ – தெய்வீகம்: வ்ருஷ்டௌ – மழையில்: த்ருப்தி இதி – த்ருப்தியாக: வித்யுதி – மின்னலில்: பலம் இதி – ஆற்றலாக: பசுஷு- மிருகங்களில்: யச இதி – புகழாக: நக்ஷ த்ரேஷு- நக்ஷ த்திரங்களில்: ஜ்யோதிர் இதி – ஒளியாக: ப்ரஜாதி அம்ருதம் ஆனந்த – குழந்தையை உருவாக்கும் குறைவற்ற ஆனந்தமாக: உபஸ்த்தே இதி – பிறப்புறுப்பில்: ஸர்வம் இதி – எல்லாமாக: ஆகாசே – ஆகாயத்தில்.

பிறகு தெய்வீகம் பற்றிய சிந்தனை: மழையில் த்ருப்தியாக, மின்னலில் ஆற்றலாக, மிருகங்களில் அவ்வற்றின் சிறப்பாக. நக்ஷ த்திரங்களில் ஒளியாக, குழந்தையை உருவாக்கும் குறைவற்ற ஆனந்தமாக பிறப்புறுப்பில், ஆகாசம் என்கிற வெளியில் எல்லாமுமாக (உள்ளது தெய்வீகம்)

மனித குலத்தி;ன் சிறப்பை முந்தைய ஸ்லோகம் சொன்னது. பிறவற்றிலும் உள்ள மேலான இயல்புகளை தெய்வீகமாகப் பார்க்கச்சொல்கிறது இந்த ஸ்லோகம். இறைவன் எல்லாமாக இருக்கிறான் என்றால், சிறப்பானவை மட்டுமல்லாமல் மாறானவையும் தெய்வீகமே அல்லவா? ஆனால் சிறப்பான இயல்புகளையே தெய்வீகமாக ஏன் பார்க்க வேண்டும்? இதற்கு பதிலை அடுத்த ஸ்லோகம் சொல்கிறது.

**तत्प्रतिष्ठेत्युपासीत प्रतिष्ठावान् भवति**
**तन्मह इत्युपासीत महान भवति  तन्मन इत्युपासीत**

**मानवान्भवति**

**तन्नम इत्युपासीत नम्यन्तेऽस्मै कामाः**

**तद्ब्रह्मेत्युपासीत ब्रह्मवान्भवति तद्ब्रह्मणः परिमर इत्युपासीत**

**पर्येणं म्रियन्ते द्विषन्तः सपत्नाः परि येऽप्रिया भ्रातृव्याः**

**தத் ப்ரதிஷ்ட்டேயுபாஸீத |ப்ரதிஷ்ட்டாவான் பவதி |தன் மஹ இத்யுபாஸீத |மஹான் பவதி| தன்மன இத்யுபாஸீத |மானவான் பவதி | தன்னம இத்யுபாஸீத |நம்யந்தே ऽஸ்மை காமா |**
**தத் ப்ரஹ்மேத்யுபாஸீத |ப்ரஹ்மவான் பவதி |தத் ப்ரஹ்மண பரிமர இத்யுபாஸீத |பர்யேணம் ம்ரியந்தே த்விஷ்ந்தஸ்ஸபத்னா பரியே ऽப்ரியா ப்ராத்ருவ்யா||**

**தத் - அவரை, இறைவனை: ப்ரதிஷ்ட்ட – ஆதாரமாக: உபாஸீத – போற்றுபவன்: ப்ரதிஷ்ட்டாவான் - நிலைபெற்றவன்: பவதி – ஆகிறான்: மஹ இதி – மஹ என்ற வ்யாஹ்ருதியாக: உபாஸீத – போற்றுபவன்: மஹான் பவதி – மகிமையை அடைகிறான்: தன் மன இதி – சிந்தனையாக: உபாஸீத – போற்றுபவன்: மானவான்- சிந்தனாவாதி: பவதி – ஆகிறான்: தன் னம இதி – போற்றுதலுக்கானவராக: உபாஸீத – போற்றுபவன்: அஸ்மை – அவனை: காமா – ஆசைகள்: நம்யந்தே – வணங்குகின்றன: தத் - அவரை: ப்ரஹ்ம இதி – பிரம்மம் என்;று: உபாஸீத – போற்றுபவன்: ப்ரஹ்மவான் பவதி – பிரம்ம ஞானம் உள்ளவனாகிறான்: தத் ப்ரஹ்மண – அந்த பிரம்மத்தை: பரிமர – அழிப்பதாக: இதி உபாஸீத - இவ்வாறு போற்றுபவன்: பர்யேணம் - சுற்றியுள்ள: ம்ரியந்தே –அழிகிறார்கள்: த்விஷ்ந்தஸ் - வெறுப்பவர்கள்: ஸபத்னா – எதிரிகள்: அப்ரியே – விரும்பாதவர்கள்: ப்ராத்ருவ்யா – தீயவர்கள்.**

**இறைவனை, ஆதாரமாகப் போற்றுபவன், நிலைபேற்றை அடைகிறான், வ்யாஹ்ருதியாக போற்றுபவன் மகிமை பெறுகிறான். சிந்தனையாகப் போற்றுபவன் சிந்தனாவாதியாகிறான், போற்றுதலுக்குரியவராகப் போற்றுபவனை ஆசைகள் நமஸ்கரிக்கின்றன. அவரை பிரம்மம் என்று போற்றுபவன் பிரம்ம**

ஞானம் அடைகிறான். அந்த பிரம்மத்தை அழிக்கும் சக்தியாகப் போற்றுபவன் அவனது எதிரிகளும் தீயவர்களும் அவனை வெறுப்பவர்களும் அழியக் காண்கிறான்.

எந்த விதத்தில் இறைவனைப் பார்க்கிறனோ அவ்வாறாகவே அவன் ஆகிறான். இதனால் பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றிலும் சிறப்பானவற்றை இறைவனாகக் காண்பவன் சிறப்பானவனாக ஆகிறான்.

**स यश्चायं पुरूषे यश्चासावादित्ये स एकः स य एवंवित्**

**अस्माल्लोकात्प्रेत्य**

**एतमन्नमयमात्मानमुपसङ्क्रम्य एतं प्राणमयमात्मानमुपसङ्क्रम्य**

**एतं मनोमयमात्मानमुपसङ्क्रम्य एतं विज्ञानमयमात्मानमुपसङ्क्रम्य**

**एतमानन्दमयमात्मानमुपसङ्क्रम्य इमॉल्लोकामान्नी**

**कामरूप्यनुसञ्चरन् एतत् साम गायन्नास्ते**

ஸ யச்சாயம் புருஷே | யச்சாஸாவாதித்யே | ஸ ஏக: | ஸ ய ஏவம் வித் |

அஸ்மால்லோகாத் ப்ரேத்ய |
ஏதமன்னமயமாத்மானமுபஸங்க்ரம்ய|

ஏதம் ப்ராணமயமாத்மானமுபஸங்க்ரம்ய|

ஏதம் மனோமயமாத்மானமுபஸங்க்ரம்ய|

ஏதம் விஞ்ஞானமயமாத்மானமுபஸங்க்ரம்ய|

ஏதம் ஆனந்தமயமாத்மானமுபஸங்க்ரம்ய|

இமான் லோகான் காமான்னீ | காமரூப்யனுஸஞ்சரன் |

ஏதத் ஸாமகாயன்னாஸ்தே||

ஸ – அவர்: ய ச – யார்: அயம் - இந்த: புருஷ - மனிதனில்: ய ச – யார்: வா – நிச்சயமாக: ஆதித்யே - சூரியனில்: ஸ – அவர்: ஸ – அவர்: ஏக – ஒருவரே: ஸ – அவரை: ய – யார்: வேத – அறிகிறானோ: அஸ்மாத் - இந்த: லோகாத் - உலகத்திலிருந்து: ப்ரேத்ய – பிரியும் போது: ஏதம் -

**இந்த: அன்னமய- உணவால் ஆன: ப்ராணமய – ப்ராணனால் ஆன: மனோ மய – மனத்தால் ஆன: விஞ்ஞான மய – புத்தியால் ஆன: ஆனந்த மய – ஆன்ந்தத்தால் ஆன: ஆத்மானம் - உடலை: உபஸங்க்ரம்ய – கடந்து செல்கிறான்: இமான் - இந்த: லோகான் - உலகத்தில்: காமான்னீ – விருப்பமான உணவைப் பெற்று: அனுசஞ்சரன் - திரிகிறான்: ஸாம – பாடல்களை: காய – பாடியபடி: அஸ்தே - இருக்கிறான்: ஏதத் - இவ்வாறு.**

**யார் மனிதனில் இருக்கிறாரோ, யார் சூரியனில் இருக்கிறாரோ, அவர் ஒருவரே. அவரை யார் ஒருவர் என்று அறிகிறானோ, அவன் இந்த உலகத்திலிருந்து பிரியும்போது உணவு, ப்ராணன், மனம், புத்தி, ஆனந்தம் இவற்றாலானதான பல உடல்களையும் எளிதாகக் கடந்து தனக்கு விருப்பமான உணவுகளை உண்டு விரும்பியபடி பாடித்திரிகிறான்.**

**அதாவது இறைவனை பிரம்மமாக உணர்ந்தவன் வாழ்வின் வளங்களைப் பெறுவதோடு அவனது மரணமும், இழப்பாக இல்லாமல் இயல்பானப் பிரிதலாக நிகழ்கிறது.**

**हा 3 वु हा 3 वु हा 3 वु अहमन्नमहमन्नमहमन्नम्**
**अहमन्नादोऽहमन्नादोऽहमन्नादः अहं श्लोककृदह श्लोककृत् अहमस्मि प्रथमजा ऋता3स्य पूर्वं दैवेभ्योऽमृतस्य ना3भायि यो मा ददाति स इदेव मा3 अवाः अहमन्नमन्नमदन्तमाट्नि अहं विश्र्वं भुवनमभ्यभवाम् सुवर्न ज्योतीः य एवं वेद इत्युपनिषत्**

**ஹா உ ஹா உ ஹா உ | அஹமன்னமஹமன்னமஹமன்னம் | அஹமன்னாதோ அஹமன்னாதோ அஹமன்னாதோ | அஹக்க்ம் ஸ்லோகக்ருதஹக்க்ம் ஸ்லோகக்ருதஹக்க்ம் ஸ்லோக க்ருத | அஹமஸ்மி ப்ரதமஜா ரிதா | ஸ்ய பூர்வம் தேவேப்யோ அம்ருதஸ்ய நா பாஇ | யோ மா ததாதி ஸ இதேவ மா(3) வா |**

**ஹமன்னமன்னமதந்தமா(2) த்மி | அஹம் விச்வம் புவனப்யபவாம் | ஸுவர்ண ஜ்யோதி |ய ஏவம் வேத | இத்யுபநிஷத் ||**

**ஹா உ – ஆகா: அஹமன்னம் - நான் உண்ணப்படுபவன்: அஹமன்னாதோ –நான் உண்பவன்: அஹம் ஸ்லோக க்ருத – நான் ஸ்லோகம் படைப்பவன்: அஹம் அஸ்மி – நானே: ப்ரதமஜா – முதலில்: ரிதா – ரிதத்திற்கு: ஸ்ய – நானே: பூர்வம் - முதல்: தேவேப்யோ – தேவர்களுக்கு: அம்ருதஸ்ய – அழிவற்றத் தன்மையின்: நாபாஇ - மையம்: யோ – யார்: ததாதி – தருகிறானோ: மா – எனக்கு: ஸ – அவன்: இத ஏவ – நிச்சயமாக: அவா – காப்பாற்றுகிறான்: அதந்தம் - உண்பவன்: அத்மி – உண்கிறேன்: விச்வம் - பிரபஞ்சம்: புவனம் - உலகம்: அப்யபவாம் - வெற்றி கொள்கிறேன்: ஸுவர்ண ஜ்யோதி – பொன்னொளி: ய – யார் ஏவம் - இவ்வாறு: வேத – அறியவேண்டும்: இதி - இது: உபநிஷத் - ரகசிய அறிவு.**

**ஆகா ஆகா ஆகா. நானே உண்ணப்படுபவன், நானே உண்பவன். நான் ஸ்லோகம் சொல்பவன்: பிரபஞ்ச ஒழுங்குமுறைக்கு முந்தியவனும் நானே. தேவர்களின் அழிவற்றத் தன்மைக்கு மையமும் நானே. யார் எனக்குத் தருகிறானோ அவன் என்னைக் காப்பாற்றுகிறான். நான் உண்பவன், நான் உண்கிறேன். இந்த பிரபஞ்சம், உலகம் எல்லாவற்றையும் வெற்றி கொள்கிறேன். பொன்னொளி பெறுகிறேன். யாரும் இவ்வாறே அறியவேண்டும். இது ரகசிய அறிவு.**

## इति <u>तैत्रीय उपनिषति</u> बृगु वल्लि समाप्ता

**வேத கால முறைப்படி, அனுபவத்தை வெளியிட்டால் அந்த உபதேசம் முடிவுற்றதாகப் பொருள். இந்த உபநிஷதம் நிறைவு பெறுகிறது.**

**सह नो भवतु सह नौ भुनक्तु सह वीर्यं करवावहै तेजस्वीनावतीदमस्तु माविद्विषावहै**

**ॐ शान्तिः शान्तिः शान्तिः**

**ஓம் ஸஹ நாவவது| ஸஹ நௌ புனக்து| ஸஹ வீர்யம் கரவாவஹை| தேஜஸ்வி நாவதீதமஸ்து| மா வித்விஷாவஹை|**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**இந்த நூலாசிரியரின் மற்ற நூல்கள்**

**தமிழில்**

**கேன உபநிஷதம்**

**மாண்டூக்ய உபநிடதம்**

**முண்டக உபநிடதம்**

**ஈசா உபநிடதம்**

**விஞ்ஞான பைரவம்**

English commentary by this author

Kena Upanishad

Taithriya Upanishad

Mandukya Upanishad

Isa Upanishad

Mundaka Upanishad

Other works:

**Any time meditation**

**Finger tip wonders**
**and many more. Please**
**visit website for more details.**